# இன்பத்துள் இன்பம்

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை,

எம். ஏ., (தமிழ்), எம். ஏ., (ஆங்கிலம்), எல். டி., & விசாரத் (இந்தி).

அலமேலு நிலையம்

53, ஆர்க்காடு சாலை,

கோடம்பாக்கம், : : சென்னை-24.

முதற்பதிப்பு—1957
இரண்டாம் பதிப்பு—1963

உரிமை ஆசிரியர்க்கு

**விலை ரூபாய் மூன்று**

ஸ்ரீ வேணுகானம் பிரஸ், 2, ஜெஸ்ஸான் தெரு, சென்னை 2.

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முப்பால் இன்பம் | 1 |
| 2. | இலக்கிய இன்பம் | 8 |
| 3. | இன்பத்தின் இயல்பு | 15 |
| 4. | புதுமை இன்பம் | 25 |
| 5. | இன்பத்தின் மறை திறவு | 34 |
| 6. | உயிரின் மறை திறவு | 43 |
| 7. | இறவா இன்பம் | 59 |
| 8. | பண்பும் பயனும் | 71 |
| 9. | மன நிறைவு | 80 |
| 10. | இன வாழ்வு | 89 |
| 11. | மலர்ச்சி, மறுமலர்ச்சி, புதுமலர்ச்சி | 99 |
| 12. | இன்பம் என்பது இனவாழ்வே | 111 |
| 13. | உடல்நலம், உளநலம், இனநலம் | 122 |
| 14. | குடும்ப வாழ்வு | 129 |
| 15. | வாழ்வின்பம் | 138 |

# பதிப்புரை

'இன்பத்துள் இன்பம்' என்னும் இவ்வருந்தமிழ் ஆராய்ச்சி ஏட்டை எழுதியளித்தவர் பன்மொழிப் புலவர் அறிஞர் கா. அப்பாத்துரையார் ஆவர். இவரைத் தமிழுலகு நன்கறியும். பல நூல்களை எழுதிப் பண்பட்ட இவ்வறிஞரின் ஒப்புயர்வற்ற ஏடாக 'இன்பத்துள் இன்பம்' விளங்குகின்றது.

உலகிற்கு அறநூல் தந்தார் பலர். ஆனால், எந்நாட்டவரும், எம்மொழியினரும், எவ்வினத்தினரும் ஒருசேர ஒப்புக் கொள்ளக்கூடிய அறநூலை அளித்தவர் வள்ளுவரே என்பதைக் கூறவேண்டுவதில்லை. கிடைத்தற்கரிய மணிகளையெல்லாம் ஒன்றுதிரட்டிக் கோத்துத் திருக்குறளெனுங் கருவூலமாகச் செந்நாப்போதார் அளித்துப் போந்தார். அவரமைத்த குறட் பூங்காவிலே ஆசிரியரும் சென்று, எண்ண இயலா வண்ண மலர்களை—என்றும் வாடா மணமுள்ள எழில் மலர்களை—தேன் பொழியும் வான்பூக்களைக் 'கொய்து, இன்பத்துள் இன்ப' மாலையாகத் தொடுத்துத் தமிழன்னைக்குச் சூட்டியுள்ளார்.

இதுகாறும் யாருங் கண்டறியாத,கேட்டறியாத வகையில், ஆனால் எல்லாரும் ஒப்புக்கொள்ளும் வண்ணம் சில குறட்பாகளுக்கு ஆசிரியர் விளக்கந் தந்து செல்வதை ஆங்காங்கே காணலாம். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' யாகிய திருக்குறள் ஏட்டிலிருந்து ஆசிரியர் நந்தம் செந்தமிழ் மொழியாம் நற்பயிருக்கு நறுநீர் பாய்ச்சியுள்ளார். இச்சிற்றேட்டையும் இதுபோலவே வள்ளுவப் பூங்காவிலிருந்து புதுப்பயிராக ஆசிரியர் எம் வெளியீட்டக மூலமாக வழங்க இருக்கும் ஏடுகளையும் தமிழகம் நன்கு பயன்படுத்தி எம்மை ஊக்குமாக!

இங்ஙனம்

**அலமேலு நிலையத்தார்.**

# இன்பத்துள் இன்பம்

## 1. முப்பால் இன்பம்

அழகு! அறிவு! நன்மை!

மனித நாகரிகத்தின் முப்பெருங் குறிக்கோள்கள் இவையே.

அழகு இன்பம் தருகிறது. அறிவு ஆற்றல் அளிக்கிறது. நன்மை சமுதாயம் வளர்க்கிறது.

இம்மூன்றில் எது பெரிது, எது சிறிது? எது உயர்ந்தது, எது தாழ்ந்தது? எது தலைமையுடையது, எது துணைமை வாய்ந்தது?

இக்கேள்விகளுக்கு விடை காண்பது எளிதன்று. விடைகளும் அவரவர் மனப்போக்கையே காட்டக் கூடும். எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்க பொதுவிளக்கமாக அமையாது.

தவிர, இவற்றுக்கு விடை காண்பதே மனித நாகரிகத்தின் உயிர்நிலை வரலாற்றையும், வளத்தையும், வளர்ச்சியையும் மதிப்பிட்டு உணர்வதாக அமையும்.

அழகுணர்வில் ஈடுபட்டு, பிறரையும் அதில் ஈடுபடுத்துவதே கலைப்பண்பு[1]. அறிவுணர்வில் ஈடுபட்டு, பிறரையும் அதில் ஈடுபடுத்துவதே இயற்பண்பு அல்லது அறிவு நூற்பண்பு[2]. நன்மையுணர்வில் ஈடுபட்டு, பிறரையும் அதில் ஈடுபடுத்துவதே அறம் அல்லது ஒழுக்கப்பண்பு[3].

---

1. Arts, Aesthetics 2. Science & Philosophy 3. Ethics

*1

இம்மூன்று பண்புகளுமே நாகரிகப் பண்புகள் என்பதில் ஐயமில்லை. இம்மூன்றின் வளர்ச்சியே நாகரிகம் என்பதையும் எவரும் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் தனிமனிதரிடத்திலும் சரி, நாடுகள், இனங்கள், சமுதாயங்கள் ஆகியவற்றிலும் சரி, இம்மூன்றும் ஒத்து ஒன்றுபட்டிருத்தல் அரிது.

அழகுணர்வில் ஈடுபடுபவனை மக்கள் இன்பவாணன் என்று கருதுவர். அறிவுணர்வில் ஈடுபடுபவனை அறிஞன் என்று மதிப்பர். நன்மையுணர்வில் ஈடுபடுபவனை அறவோன் என்று போற்றுவர். இம்மூவரும் சமுதாயத்தில் வேறு வேறான போக்குடையவர்கள். மக்களிடையே வேறு வேறான மதிப்பும் படியும் உடையவர்கள்.

மேலீடாகக் காண்பவர்களுக்கு இம்மூன்றும் வேறு வேறு பண்புகளாக, முரண்பட்ட அல்லது தொடர்பற்ற பண்புகளாகக்கூடத் தோற்றக்கூடும்; தோற்றுவது இயல்பு. வேறு வேறாகவே உலகின் மிகப்பெரும்பாலான மக்கள், பெரும்பாலான உலக அறிஞர்கள், உலகப் பெரியார்கள் வரை கருதிவந்தனர், கருதி வருகின்றனர். அவற்றிடையே தொடர்பு இருக்கக்கூடும் என்று கருதியவர்கள் உலகிலேயே மிகமிகச் சிலர். அவர்களும் அத்தொடர்பை மதித்துணர்ந்தது கிடையாது. ஆனால் இம்மூன்றும் ஒன்று என்பதே வள்ளுவர் பெருமான் கண்ட பேருண்மை. அத்துடன் இம்மூன்றன் தொடர்பையும் விளக்கி, மூன்றையும் ஒரே பண்பின் மூன்று படிகளாக, மூன்று கோணங்களாக அவர் காட்டியுள்ளார். இம்மூன்றன் சரிஒத்த இணைவையே அவர் மனிதப்பண்பு என்றும், மூன்றன் நிறைவையே கடவுட் பண்பு என்றும் காட்டியுள்ளார். அவர் முப்பாற்பாகுபாட்டின் முழு நிறை சிறப்பும், அவர் முப்பால் நூலான உலகப்பொது மறையின் முழுநிறை புகழும் இதுவே.

இன்பத்துப்பாலில் அழகுணர்வையும், பொருட்பாலில் அறிவுணர்வையும், அறத்துப்பாலில் நன்மையுணர்வு அல்லது அன்பையும் அவர் சிறப்பித்து முனைப்பாக விதந்தோதியது காணலாம்.

அறநூல்கள் உலகில் மிகச் சில. ஆனாலும் அறநூல்களும், அறநூலோரும் பலநாடுகளில், பலமொழிகளில் உண்டு. பொருள் நூல்கள், இன்ப நூல்கள் உலகில் இன்னும் மிகச்சில. ஆனால், ஆங்காங்கே உலகின் வேறு வேறுபட்ட பகுதிகளில் அக்கருத்துக்கள் விரவிய ஏடுகளைக் காண்டல்கூடும். எனினும் முப்பால் வகுப்பும் முப்பால் நூல்களும் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே உண்டு. இந்திய மாநிலத்தின் தனிப் பண்பாட்டுக் கூறுகளில் மிகப் பழமையான ஒன்றாக இப்பாகுபாடு திகழ்கின்றது.

அறம், பொருள், இன்பம் என்ற முப்பாற்பாகுபாடும் அதன் விரிவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பாற்பாகுபாடும் தமிழரின் முழுமுதல் இலக்கண ஏடாகிய தொல்காப்பியத்திலேயே காணப் படுகின்றன. பெருநூல்கள் இம் மூன்றையுமோ, நான்கையுமோ நூற்பயனாகக் கொள்ளவேண்டுமென்றும், சிறுநூல்கள் ஒன்றோ இரண்டோ தனிப் பயனைக் கொள்ளுதல் சாலுமென்றும் தொல்காப்பியர் காலமுதல் இலக்கணநூல்கள் வலியுறுத்தியுள்ளன. இக்கருத்து இடைக்காலத்துக்குரிய மொழியாகிய சமஸ் கிருதத்துக்கும் பொதுவேயாகும்.

முப்பாற் பாகுபாட்டில் அமைந்த பெயர்களின்படி, அறம்வகுத் துரைப்பவர் மட்டுமே அறவோர் அல்லது அறநூலோர் என்று கருதப்படுதல் வேண்டும். ஏனையோர் பொருள் நூலோர் என்றும், இன்ப நூலோர் என்றுமே அழைக்கப்பெறுதல் தகுதி. ஆயினும் முப்பால் வகுத்துணர்த்தியவர்கள் தமிழிலும் சரி, சமஸ்கிருதத் திலும் சரி, பொதுவாக அறவோர், அறநூலோர் என்றே குறிக்கப் பட்டிருக்கிறார்கள். முப்பாலையும் ஒரே பாலின் முப்பிரிவாகக் கொண்ட திருவள்ளுவர் திறத்திற்கு - தமிழகங்கடந்த செல்வாக்குக்கு - இஃது ஓர் அறிகுறி. ஏனெனில் தமிழில்கூடத் திருவள்ளுவர்தவிர ஏனைய அறநூலார் அல்லது முப்பால்நூலாரிடம் இப்பண்பை முழுதுறக் காணமுடியாது.

தமிழர் மூப்பாற்பண்பை நுனிப்பாகவும் குறிப்பாகவும் தொல்காப்பியத்திலும்பிற தமிழ் ஏடுகளிலும் காண்டலாகும். திருவள்ளுவரிடம் மட்டுமே அதை முழுதுற முனைப்பாகவும், விளக்கமாகவும் காணமுடியும். சமஸ்கிருதவாணர் முப்பாலின் ஒருமையை ஒருசிறிதும் கண்டுணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை வாழ்க்கையின் மூவேறு குறிக்கோள்களாக மட்டுமே கொண்டனர் : அவற்றை ஒரே வாழ்க்கைப் பண்பாகத் தொடர்புபடுத்தத் தவறினர். அது மட்டுமன்று. ஒவ்வொரு பாலின் உட்பிரிவுகளையும் அவர்கள் தொடர்பற்ற, மாறுபட்ட பண்புகளாகவே கண்டனர். எடுத்துக்காட்டாக, அறத்துப்பாலில் அவர்கள் இல்லறம்வேறு, துறவறம்வேறு என்றும்; இல்லறத்துக்கு மாறுபட்ட பண்பே துறவறம் என்றும் கருதினார்கள். துறவறம் என்றால் வெறுப்பு அறம் என்று கொண்டு, அவ்வெறுப்பு அறமாகிய துறவறத்தையே அறம் எனக் கொண்ட நூலும் (வைராக்கிய சதகம்) சமஸ்கிருதத்தில் உண்டு. இதுபோலவே, பொருட்பாலில் அரசியல் ஒழுங்கு, சமுதாய ஒழுங்கு, அறமுறை ஒழுக்கம் ஆகியவற்றை வடபுலவாணர் வேறு வேருகக் கொண்டனர். சில சமயம் அவற்றைப் பொருந்தாப் பண்புகளின் கூட்டுக் குளறுபடியாக்கினர். சில சமயம் அரசியல் ஒழுங்கு முறைகள், சமுதாய ஒழுங்கு முறைகள், சமய ஒழுங்கு முறைகள் ஆகிய மூன்றில் ஒன்றை முனைப்பாக்கி அதை மூவேறு பெயர்கள்கொண்டே பால்களாகக் கருதினர். இவையே மனு முதலியவர்களால் தண்டம் (சட்டம்), வழக்கு (சமுதாய ஒழுங்கு,) தர்மம் (சமய ஒழுங்கு) என்றும், வேறு சிலரால் குருட்டுப் பழக்கம் (ஆசாரம்) என்றும், நீதி (அரசியல் சூழ்ச்சி முறை) என்றும், அர்த்தம் (செல்வ இயல்) என்றும் பலவாருகத் திரித்துக் கூறப்பட்டன. இன்பத்துப்பாலிலும் தமிழரின் களவியல், கற்பியல் என்ற பாகுபாட்டின் திறமறியாது, சமஸ்கிருத வாணர் குடும்பம் சாரா உடல் கவர்ச்சியின் ஈடுபாடே களவியல் என்று தவருகக்கொண்டனர். சமஸ்கிருத மொழி முப்பால் நூல்களின் இன்பப்பாலும் சரி, சமஸ்கிருதத்துக்கே

சிறப்பான இன்ப நூல்களும் (காம சாஸ்திரங்களும்) சரி—இந்தக் குடும்பப் பண்பற்ற சமுதாயக் கேடான இன்பத்தையே பல்வகைப்படப் பாகுபடுத்தி விரித்து விளக்கின.

வள்ளுவர் காலத்தில் அழகுக் கவர்ச்சி, சமுதாய அன்பு, அறிவுணர்வு ஆகிய மூன்றின் இணைவான நிறையின்பமே காமம் என்ற சொல்லால் குறிக்கப்பட்டது. வடபுலத் தொடர்பாலும் பிறபுல வழக்காலும் 'காமம்' என்ற இந்தச் சொல் மட்டுமன்றி, அதனிடமாக இடைக் காலத்தில் வழங்கிய சொல்லாகிய 'காதல்' என்பதும் பண்டு தமிழர் கொண்ட தெய்வப்பண்பை அதாவது உயர்ந்தோர் பண்பைக் குறிக்காமல் இழிந்தோர் பண்பு குறித்த சொற்களாகிவிட்டன. இரண்டு சொற்களுமே குடும்பப் பண்புக்கும் சமுதாயப் பண்புக்கும் மாறான ஒரு கீழ்த்தர விலங்குணர்ச்சியை இன்று குறிக்கத் தொடங்கியுள்ளன.

சமஸ்கிருத வாணரின் முப்பாற்பாகுபாட்டில் முப்பாலுக்கும் சமயம் அல்லது கடவுளுக்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது. அறத்துக்கு ஒரு கடவுளையும் (சிவபெருமானையும்), பொருளுக்கு ஒரு கடவுளையும் (திருமாலையும்), இன்பத்துக்கு ஒரு கடவுளையும் (மன்மதனையும்) உரிமையாக்கி, அவ்வப்பால்களுக்கு அவ்வவர் கள் பெயரால் கடவுள் வணக்கம் பாடியதுடன், கடவுளுக்கும் முப்பாலுக்கும் உரிய தொடர்பை அவர்கள் முடித்துக்கொண்டனர். ஆகவேதான் முப்பாலின் முழு நிறைவே 'வீடு' என்பதை உணராமல் வீடு ஒன்றையே கடவுளுக்குரிய பாலாக்கினர். அது மட்டுமோ? சமஸ் கிருத வாணர்களுக்கிசைய, இடைக்காலத் தமிழ்ப் புலவர்கள் தந்த தமிழ் இலக்கணத்தையும், தமிழ்ச் சொற்பொருளையும் மேற்கொண்டு, 'விடுபட்டதே வீடு' என்று அச்சொல்லைத் தொழிற் பெயராகக்கொண்டனர். அத்துடன் துன்பம் விடுபட்டதே வீடு என்று கூடக் கொள்ளாமல் இன்பத்தினின்று, உலக வாழ்வினின்று விடுபட்டதே வீடு என்றும் வலிந்து பொருள்கொண்டனர். வாழும் இடத்துக்கே, இன்ப வாழ்வின் நிலைக்

களத்துக்கே வீடு என்று தமிழர் பெயரிட்டழைத்தனர் என்பதையும் அவர்கள் மறந்துவிட்டனர். இதனால் வீட்டுப்பாலை வெறுப்புத் துறவறம் என்றே அவர்கள் கருத நேர்ந்தது. மற்றும் இதே குறிப்பால் துறவறத்தை அறத்துப்பாலில் சிலரும், சிலபோதும்; வீட்டுப்பாலில் சிலரும், சிலபோதும் உட்பட்டதாகக் கருதிப் பெரிதும் மயக்கமுற்றனர்.

சமஸ்கிருத வாணரின் இக் குளறுபடி காணாதவர் திருவள்ளுவர் திருக்குறளின் அருமையை முற்றிலும் உள்ளவாறு உணர முடியாது. சமஸ்கிருதக் குளறு படியின் திரைமூலமே திருக்குறளைக் கண்டுவந்துள்ள, கண்டுவரும் இடைக்கால, இக்காலத் தமிழர் பலர் திருவள்ளுவர் கண்ட இன்பத்தையோ, அதற்கு இணை துணையான பொருளையோ, அறத்தையோ, அவற்றின் பாகுபாட்டு ஒழுங்கினையோ ஒரு சிறிதும் உணரமாட் டாது உழல்வதில் வியப்பில்லை. மனிதப் பண்பு சான்ற மேலையுலகம்கூட இன்னும் சென்றெட்டாத சிறப்பினை யுடைய தெய்வப் பண்பு சான்ற திருக்குறளை அம்மனிதப் பண்பிலேகூடக் குறைபட்ட சமஸ்கிருத சுமிருதி களுடனே, சாணக்கியர் பொருள் நூலுடனே (அர்த்த சாஸ்திரத்துடனே), புராண இதிகாசங்களுடனே ஒப்பி டவும், பொருத்திக் காணவும் அவர்கள் துணிந்ததன் காரணம் இதுவே. இத்துடன் அமையாமல் வேறு சிலர் அந்நூல்களுள் ஒன்றேனும் திருவள்ளுவருக்கு முற் பட்டனவோ, பிற்பட்டனவோ என்று தெளியாமலே, அவற்றைத் திருக்குறளுக்கு முன்னூல்கள் ஆக்கவும் அரும் பாடுபட்டுள்ளனர்! சமஸ்கிருத ஆராய்ச்சியில் வல்ல பேரறிஞர் பலர் அந் நூல்கள் திருக்குறளுக்குப் பிற்பட்டன என்று தெரிந்தும் பொது மக்களைக் குழப்பு வதில் முனைந்துள்ளனர்.

வள்ளுவர் முப்பாலின் அமைப்பழகு தனிச் சிறப் புடையது. அது இன்பத்துடன் முடிவது. ஆனால் இல்லறத்துடன் தொடங்குவது. அது மட்டுமன்று. இன் பத்துப்பாலும் இல்லறத்துக்குரிய கற்பியலுடனேயே நிறைவுறுகிறது. இவ்வாறு முடிந்த இடத்தில் தொடங்கி,

தொடங்கிய இடத்தில் சென்றிணையும் இம் முப்பாலேட்டுக்கு உண்மையில் ஒரு தொடக்கமும் கிடையாது, முடிவும் கிடையாது என்னலாம். அது ஒரு வளையமாலை, ஒரு சக்கரம், ஓர் ஆழி! முப்பாலின் அற ஆழியாக அது சுழன்று சுழன்று வருவது. ஒரு தலைமுறை மண வாழ்விலிருந்து மறு தலைமுறை மண வாழ்வுக்குத் தாவி அலைபாய்ந்து செல்லும் மக்கள் வாழ்க்கையை அது படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இந்த அற ஆழி இயக்கும் அந்தணனே இறைவன் அல்லது கடவுள். இந்நாளைய தமிழகம்—ஏன், இந்நாளைய உலகம்—இந்த அற ஆழியை இயக்கி அற ஆழி அந்தணன் பண்பறிய முடியாத காரணத்தாலேயே, பிற ஆழி நீந்த முடியாமல் தத்தளிக்கிறது என்னலாம்..

அறம் பெரிது. அறவழி நின்ற பொருள் அறத்தினும் அரிது. அறவழி பொருளும், பொருள் வழி இன்பமும் அமையின், அவ்வின்பம் பெரிதினும் பெரிது, அரிதினும் அரிது! அதுவே இன்பத்துள் இன்பம், இன்பங் கடந்த இன்பம், பேரின்பம்! ஏனெனில் அந்த இன்பம் மீட்டும் அறம், பொருள் வழி இன்பம் பெருக்கி, அற ஆழியாகிய இன்ப ஆழி உருட்டி, இன்பப் பயிர் வளர்க்கும். அதுவே கரையிலா இன்ப வெள்ளமாக, உலப்பிலா இன்பமாகப் பொங்கிப் புது வளம் தரும்.

வள்ளுவர் வழி நின்று இந்த இன்பத்துள் இன்பம் காண்போமாக!

## 2. இலக்கிய இன்பம்

அழகுணர்ச்சியில் ஈடுபட்டு இன்பங் காண்பவன் கலையார்வலன். அழகு வடிவங்களைப் படைத்து, அவற்றின்மூலம் அவ்வின்பத்தில் பிறரையும் ஈடுபடுத்துபவன் கலைஞன். அக்கலைஞன் படைப்பே கலை.

வண்ணத்திலும் வடிவிலும் அழகுகாணும் ஓவியம், செதுக்குக்கலை, சித்திரம்; உருவில் அழகு வகுத்தமைக்கும் படிமக்கலை, சிற்பம்; இயக்கத்தில் அழகுநயங்கள் காட்டும் ஆடற்கலை; ஒலியியக்கத்தில் இனிமைகண்டு மருட்சியூட்டும் இசை; மொழியில் ஓசையினிமையும் கருத்தழகும் ஒருங்கே உருவாக்கிக் காட்டும் இலக்கியம் —இவை மனித இனம் கண்ட தலைசிறந்த கலைகள். இவற்றைச் சிறப்பாகக் கவின்கலைகள் என்கிறோம்.

வாழ்க்கையில் பயனுடைய ஒவ்வொரு செயலும் ஒரு கலைதான். இசை எப்படி ஒரு கலையோ, அப்படியே இசைக்கருவிகள் செய்வதும் ஒரு கலையேயாகும். பின்னது இல்லாவிட்டால், முன்னது வளர்ந்தோங்க முடியாது. அதுபோலவே உழவு, நெசவு ஆகிய தொழில்களுக்குரிய கருவிகள் செய்வதும் கலையே. வாணிகக் கருவியான நிறைகோல், இயல்நூல்களுக்குரிய நுண் கருவிகள் செய்வதும் கலையே. மேனி ஒப்பனைக்குரிய மணத்துகளும் வண்ணச்சாந்தும் நறுநெய்யும் செய்வது கலையன்று என்று எவரும் கூறமாட்டார்கள். இங்ஙனம் கலை, தொழில், அறிவுநூல், நாகரிகம் ஆகிய அனைத்துக்கும் இன்றியமையா அடிப்படையான கலைகள் எத்தனையோ உள்ளன. பயனில் சிறந்த இந்தக் கலைகளைக் காட்டிலும் மேலே கூறப்பட்ட கவின்கலைகள்

மனித சமுதாயமெங்கும் உயர்வுபட மதித்துப் பேணப் படுவானேன்? தெய்வத் தன்மை பொருந்தியனவாகப் பாராட்டப்படுவானேன்? இதன் மறைதிறவு யாது?

பயனுணர்வு வேறு, அழகுணர்வு வேறு என்றும், பயன் நோக்காத கலையே தூய உயர்கலையாகிய கவின் கலை என்றும் கலைத்திறனாய்வாளர் பலர் கருதியுள்ளனர். 'கலை கலைக்காகவே' என்ற வாசகம் இக்கருத்தைப்படம் பிடித்துக் காட்டுகிறது.

இக்கருத்து முற்றிலும் சரியன்று, ஆனால் முற்றிலும் தவறுமன்று. சொல்லளவில் இது மெய்மை; ஆனால் சொல்பவர், கேட்பவர் கருதும் கருத்தளவில், அது முழு துறழ் மெய்மை காணார் கூறும் அரைகுறை மெய்மையே யாகும்.

பயனோக்கிய கலைகளை நாம் தொழிற் கலைகள்— அல்லது ஆக்கக் கலைகள் என்னலாம். அவை எதிர் பார்த்த பயனை அடைந்தவுடன் முற்றுப்பெற்றுவிடு கின்றன. அதற்குமேல் அவற்றுக்கு வளர்ச்சியில்லை. கவின் கலைகளோ பயன் நோக்கிய, அல்லது பயனை எதிர்பார்த்த கலைகளல்ல. ஆகவே அவை என்றும் வளர்ந்துகொண்டே இருப்பன. மனித வாழ்க்கையும் பண்பாடும் நாகரிகமும் வளருந்தோறும், அவற்றுடன் இணைந்து இக் கலைகளும் வளர்கின்றன. இவற்றை உலகம் கவின்கலைகள் என்று அழைப்பதன் காரணம் இதுவே. ஆனால் இதுகொண்டு அவை பயன் தொடர் பற்ற கலைகள் என்று முடிவு கட்டிவிடுதல் தவறு. பயனை எதிர் நோக்காது இன்பம் மட்டுமே எதிர்நோக்கியவை அவை. அத்துடன் பயன் என்ற சொல்லால் நாம் குறிக் கும் 'புறப்பயன்' அவற்றினிடம் கிடையாது. அவை அகநாடிய கலைகள், அகமுகக் கலைகள்!

பயனோக்கிய கலைகள் ஒரு குறிப்பிட்ட பயனை, கலைஞன் கருவிபோன்ற ஒரு புறப்பயனை நாடுவன. ஆனால் கருவியைப் பயன்படுத்தும் கலைகள் நாடுவதோ இத்தகைய குறுகிய சிறு பயன்களை, கருவிகளை அன்று. அவை கலை நுகர்பவன், கலைஞன் ஆகிய இருவரையுமே

—இருவரையும் உள்ளடக்கிய மனித இனவாழ்வின் வளத்தையே—பண்பாட்டையே நாடுவன. வாழ்வின் ஒரு சிறு கூறு அவற்றின் பயனன்று—வாழ்க்கை முழுவதும்—வாழ்பவனும்—அவன் இன வாழ்வும்—இனவளமும் அவற்றின் எல்லையற்ற பயன்கள் ஆகும்.

பயனுக்கிய கலைக்கும் கவின்கலைக்கும் உள்ள உயிர்வேறுபாடு இது மட்டுமன்று. பயன் நோக்காக் கலையே கவின்கலை என்ற அரைகுறையாக உணரப் படும் வாசகத்திலேயே அவ்வேறுபாடு அடங்கியுள்ளது.

தனி மனிதனும் தனி உயிரும் இயல்பாக விரும்பு பவை அழகும் இன்பமுமே. மனித இனமும் உயிரினமும் பொதுவாக விரும்பி ஈடுபடுபவை அவை. ஆனால் பயன் விருப்பம் அனுபவ முதிர்வினுல், அறிவு உணர் வினுல், நன்மை உணர்வினுல் உண்டாவது. அது தனி மனிதன் நோக்கமும் அன்று; பொதுநிலை இன நோக்கமுமன்று. அறிஞர், அறவோர்—அதாவது இனத்தலைவர், சமுதாயத்தலைவர்—காணும் குறிக்கோ ளாக அது இயல்கின்றது. **தனி மனிதன், தனியுயிரின் நோக்கம் இன்பம்; குடும்ப, இன சமுதாயத் தலைவர்களின் குறிக்கோள் பயன்** என நாம் இவ்விருவேறு பட்ட—ஆனால் மறை தொடர்புடைய—சொற்களின் பொருள் தொடர்பை வகுத்துக் கூறலாம்.

இன்பம் இனிய தின்பண்டம் போன்றது. விளை யாட்டுப்போன்றது. பயனு, மருந்துபோன்றது. இன்றி யமையாத தொழில்போன்றது. மருத்துவன் வழிநின்று நாம் மருந்தை உண்பதுண்டு. ஆனால் மருந்தே உண வானுல், அதை உண்டு வாழ்வதைவிட, மாள்வதே மேலானது என்றுதான் மனித இனமும், உயிரினமும் பொதுவாகக் கருதக் கூடும். மருந்துண்டுவாழும் வாழ்வு வாழ்வின் இன்பம் தராது. பஞ்சணை மெத்தையில் ஒரு சிறு நுண்மயிர் இருந்தால் உறுத்தும் என்று கருதும் இன்பவாணர் கூட இன்றியமையாத் தேவை ஏற்பட் டால், அவ்வின்பத்தைத் தற்காலிகமாகத் தடுத்து, மருத் துவ விடுதியின் முரட்டுப்படுக்கையையும் அறுவையை

யும் ஏற்கக் கூடும். ஆனல் வாழ்நாள் முழுதும் மருத்துவ மனையிலும் அறுவையிலும் கழிப்பதானல், அத்தகைய வாழ்வைவிடச் சாவே மேலானதென்று எவரும் கருதாமலிரார். பயன்தரும் தொழிலை, பயன் நாடிய கலையை மனிதன் செய்ய இணங்கினலும், தின்பண்டத்திலும் விளையாட்டிலும் சிறுவர் காட்டும் ஆர்வத்தை, விருவிருப்பை, எவரும் அவற்றில் கொள்ள முடியாது.

பயனேக்கிய கலைகள் போலல்லாது, **ஆனல் பயனேக் காமலே முழுநிறைபயனை** அளிக்கும் கலைகளே கவின்கலைகள். தின்பண்ட உருவில் அமையும் அல்லது அமைக்கப்படும் உணவு போன்றவை; மருந்தினும் நலம் தரும் இன்னுணவு போன்றவை. அவை இன உணர்வில் இயல்பாகவோ—இனத்தலைவர், சமுதாயத் தலைவர் புனைவுத்திறனலோ—அமைபவை.

கலை பயன்நாடாதது—துய்ப்பவர் பற்றியமட்டிலேயே இது முழு உண்மை. படைப்பவர்கூடக் கலைஞர் என்ற அடிப்படையில் அதை நாடுவதில்லை. ஆனல் அவர்கள் இன உள்ளம் ஒரு பயனை நாடியே கலையில் ஆர்வம் கொள்கின்றது. அது மற்ற எப்பயனுமல்ல—இன்பமே—வாழ்க்கையின் நோக்கமேயாகும். ஆனல் இந்தப்பயனை அது சமுதாயத்தை நோக்கி, இன்பத்தை, இனப்பயனை நோக்கிச் செலுத்துகின்றது.

கலை பயன் நாடுவதன்று, ஆனல் இன்பமே பயனுகக் கொண்டது. அதுமட்டு மன்று. இனநோக்கமாகிய இன்பத்தை இனத்தலைவர் நோக்கமாகிய பயனுடன் அது இணைக்கிறது.

பயனேக்காதவை மட்டுமல்ல, பயனளிக்காதவை தான் கலைகள் என்றல், தீய பயன்தரும் கொலையும் புலையும் கலைகள் ஆதல் வேண்டும்—அவை கலைகள் ஆகா என்பதில் ஐயமில்லை. ஆகவே சிறுபயன், தற்காலிகப் பயன் நாடாது, முழுநிறை பயனை இன்ப வடிவில் இயல்பாக நாடுபவையே கலைகள், கவின் கலைகள் ஆகும் என்பது தெளிவு.

மேலீடாகக் காண்பவர்களுக்குப் பயன் என்பது அழகுணர்வுடனும் இன்ப உணர்வுடனும் கலையார்வத்துடனும் தொடர்பற்ற—அவற்றுடன் ஒவ்வாத—சொல்லாகத் தோன்றுகிறது. இதற்கு ஒரு தனிக்காரணம் உண்டு. பெரும்பாலும் 'புறப்பயன்', தனிமனிதன் 'பயன் நோக்கமாகிய தன்னலம்', 'தனிமனிதன் குறுகிய தனிப்பயன் நோக்கமாகிய சூழ்ச்சித்திறம்' ஆகிய இழி பொருள்களுடன் கலந்தே 'பயன்' என்றசொல் வழங்கப் பெறுகிறது. அத்துடன் அது நேராக இன்பநோக்கைக் குறிக்காமல் இன்பத்துக்குரிய கருவியையே குறிக்கிறது. இது போலவே 'கலை கலைக்காகவே' என்ற வாசகத்திலும், 'கலை' என்றசொல் அதன் முழு மெய்ப் பொருளில் பெரும்பாலும் உணரப்படுவதில்லை. ஏனெனில் 'கலை கலைக்காகவே' என்பதன் முழுப்பொருள் 'கலை கலைஞனுக்காகவே', 'கலை கலைஞன் இனத்துக்காகவே' 'கலை கலைஞன் சமுதாயத்துக்காகவே' என்ற கருத்துக்களை உட்கொண்டதேயாகும். 'கலை' என்றவுடன் பலரும் 'வாழ்க்கைத் தொடர்பற்ற' என்று எண்ணுவதால்தான் 'கலை கலைக்காகவே' என்ற நிறை மெய்ம்மைவாசகம் வாத எதிர் வாதத்துக்குரிய ஒன்றுய் விடுகிறது.

கலைகளில் தலைசிறந்தவை கவின்கலைகள். கவின் கலைகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த கவின்கலை இலக்கியமே.

இலக்கியம் கவின்கலைகளுள்ளும் சிறந்ததாகக் கருதப்படுவதற்குரிய காரணங்கள் பல. ஆனுல் தலைசிறந்த, நடு நாயகமான காரணம் அது **மொழி சார்ந்த கலை** என்பதே.

மொழி மனித இனத்தின் அறிவுச் சேமகலம். அதன் ஒவ்வொரு சொல்லும் ஒரு கருத்தின் கருவூலம், இனவரலாற்றின் ஒரு புதைபெட்டகம்; அனுபவம் என்னும் ஆழ்சுரங்கத்தில் அல்லது ஆழ்கடலிலிருந்து மனித இனம் அருமுயற்சியால் கண்டெடுத்துப் பட்டை தீட்டிப் பேணிய பொன்வெள்ளிப் பாளம், முத்துமணி பவழம்! மொழி வளர்த்துள்ள உணர்ச்சிகளோ இன சமுதாய

வாழ்வின் நீடித்த பயனுன பண்புப்பழங்கள், பண்பாட்டு உயிர்விதைகள்! இத்தகைய அறிவு நிலத்தின் மீது வித்தூன்றி, பண்புத்தளத்தின்மீது நின்று, அழகுவான் நோக்கி எழும் இன்மலர்க் கனிமரமே—அறத்தின் ஆழ்தடமளாவி, பொருளின் பரப்பகம் கொண்டு, இன்பமுகடுற எழுப்பப்படும் அறிவின்ப மாளிகையே இலக்கியம். அதன் தனியுயர் சிறப்புக்குரிய தலையாய காரணம் இதுவே.

மற்றக் கலைகளைவிட, கவின்கலைகளைவிட முனைப்பாக, இலக்கியம் இனவளர்ச்சியோடொத்து, சமுதாய வாழ்வோடிணைந்து வளர்வது. அது வாழ்வின் எல்லாக் கூறுகளையும் வளர்ப்பது. மனிதஇன வாழ்வின் எல்லையற்ற பரப்பையும் அதன் நாட்டு, இன வேறுபாடுகளையும், காலவேறுபாடுகளையும் பளிங்குபோல் எதிர்நிழலிட்டுக் காட்டி, அவ் வேறுபாடுகளிடையே வாழ்க்கைப் பண்பால் வளர்ந்து வாழ்க்கைப் பண்பையும் வளர்க்கும் இன்னொரு கலையை—இலக்கியமன்றி வேறு ஒரு கலையை—நாம் காணமுடியாது.

> ' கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள ''

[காண்பது, கேட்பது, சுவைப்பது, முகர்வது, தொட்டுணர்வது ஆகிய ஐம்புல உணர்வுகளும் பெண்ணிடமே அதாவது ஆண்—பெண் தொடர்பு ஒன்றிலேயே உண்டு.]

இவ்வாறு வேறு எவரும் அறிந்துகூருதமுறையில், ஆண்-பெண் தொடர்பான குடும்ப இன்பத்தின் தனிச் சிறப்பை வள்ளுவர் ஒருவரே எடுத்துக்காட்டியுள்ளார். 'மற்ற எல்லா இன்பங்களும் ஒருபுலன், இருபுலன்களுக்கு நுகர்வு அளிக்கும். இது ஐம்புலன்களையும் அளாவிய இன்பம்' என்று அவர் கூறிய பின்னரே நாம் அறிகிறோம். அதுபோலவே கவின்கலைகளில் மற்றவை ஒன்றிரண்டு புலன்களுக்கே இன்பம் ஊட்டுவன. இலக்கியக் கலையின் தனிச்சிறப்புக்களுள் ஒன்று—அதுவே ஐந்து புலன்களுக்கும், அது கடந்த ஆரும் புலனுகிய உள்ளத்திற்கும் நுகர்வு அளிப்பது என்பதே! அந்த உள்ளத்திலும் அழகுணர்வு, அறிவுணர்வு, நன்மை

யுணர்வு ஆகிய எல்லா வகைப்பட்ட உணர்வு நிலைகளுக்கும் இலக்கியக் கலை ஒருங்கே இன்பமூட்டுவது ஆகும்.

இலக்கியக் கலைஞனைத் திருவள்ளுவர் 'சொல்லேருழவன்' என்று சிறப்பித்துள்ளார். அவன் 'சொல்' என்ற கலப்பையால் மக்கள் உள்ளமென்னும் நிலத்தை உழுது, அதில் அழகு, அறிவு, நன்மை, பண்பு ஆகிய விதைகளை விதைத்து, வாழ்வையே வளர்த்து வளப்படுத்துகிருன் என்ற கருத்தை இத்தொடர் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. கம்பநாடரும் இக்கலைஞனைச் 'செஞ்சொல் அறிவாளன்' என்று குறிப்பிட்டார். செம்மை என்பது தமிழில் இனிமை, நடுவு நிலைமை, நேர்மை, திருத்தம் ஆகியவற்றைக் குறிக்கும் பண்புச் சொல். இத்திறங்களையுடைய சொற்களால் அறிவு வளர்ப்பவன் இலக்கியக் கலைஞன் என்று தமிழின் பரந்தகன்ற காவியக் கவிஞர் குறித்தார்.

மொழிசார்ந்த கலை இலக்கியமாவதுபோல, மொழி சார்ந்த அறிவுத்துறை இயல் நூலாகவும், மொழிசார்ந்த சமுதாய உணர்வுத்துறை அறநூலாகவும் அமைகிறது. ஆனுல் மொழி சார்ந்த இம்மூன்று துறைகளிலும் முதல் துறையும், முந்திய துறையும் இலக்கியமே. அதுவே அவ்விரண்டின் மூத்தசெல்வியாய், அவற்றின் செவிலித் தாயாய், அவற்றைத் தன்மடிமீது வைத்து வளர்த்து வந்துள்ளது. தொடக்கத்தில் அவை மூன்றும் இலக்கிய ஆடையுடுத்தே உலவின. இன்றும் இயல்நூல்களில் தலைசிறந்தனவும், அறநூல்களில் தலைசிறந்தனவும் நல் இலக்கியமாகவும் இயல்வதுண்டு. தமிழில் தலை சிறந்த அறநூலான திருக்குறள், தலைசிறந்த ஓர் இலக்கிய ஏடாகவும் மிளிர்கின்றது.

அழகுமட்டுமன்றி, அறிவும் நன்மையும் செறிந்த இலக்கியக் கலையின் இன்பமே இன்பத்துள் இன்பம். அதை ஆக்கித் துய்க்கும் சமுதாயம் அழியாப் புகழ்ச் சமுதாயமாக நின்றிலங்குவது உறுதி. அத்தகைய இலக்கிய மூலம் இன்பத்துள் இன்பம் கண்டு அழியாச் சமுதாயப் பண்பை, இனப்பண்பை வளர்ப்போமாக!

## 3. இன்பத்தின் இயல்பு

இன்பம் எங்கே இருக்கிறது?

இன்பத்தை நாடாதவர் இல்லை. 'இன்பம் எங்கே இருக்கிறது?' என்று தேடாதவரும் கிடையாது. ஆனால் நாடிய இன்பம் கைவரப்பெற்ருல், எவரும் அதில் மகிழ்ந்து நிறைவெய்திவிடுதலும் அரிது. அவர்கள் மேன்மேலும் இன்பமே, புதிய புதிய இன்பமே நாடுவர்.

'இன்பம் எங்கே இருக்கிறது!' என்ற கேள்வி முடிவுருத கேள்வி மட்டுமன்று. முடிவுறக்கூடாத, முடிவுறத்தகாத கேள்வி என்றுகூடக் கூறலாம். ஏனெனில் இன்ப நாட்டமே உயிர். இன்ப நாட்டத்தின் ஆர்வமே உயிரின் இளமை, அதன் வளர்ச்சிப்பருவம். இன்ப நாட்டம் தளர்வுற நேர்ந்தால், உயிர் வளர்ச்சியும் தளர்வுறவே நேரும். இத்தளர்ச்சியே முதுமை. ஆனால் இந்த முதுமை உயிருக்கு இயல்பானதல்ல. அது நீடிப்பதில்லை. உயிரின் உயிர்ப்பண்பு முதுமையை எட்டுமுன் உயிர் ஒரு புதிய உயிரை, வளர்ச்சிக்குரிய புதிய தலைமுறையின் உயிரைப் படைத்துவிடுகிறது. வளர்ச்சி குன்றித் தளர்ந்த முதல் உயிரலையிலிருந்து தாவி, அது வளரவிருக்கும் புத்துயிரலைமேல் தவழ்கிறது.

நாடிய இன்பம் கைவரப்பெற்றவர் சிலர் ஒரு சில நேரம் அதில் மகிழ்ந்திருக்கக்கூடும். ஆனல் அவர்கள் மகிழ்ச்சியின் அளவு அவர்கள் இன்ப நாட்டத்தின் அளவையே பொறுத்தது. எளிதில் பெற்ற இன்பம், எதிர்பாராது பெற்ற இன்பம் நீடித்த மகிழ்ச்சி அளிப்ப

தில்லை. அரிதிற் பெற்ற இன்பம், கடுமுயற்சியின் பின் பெற்ற இன்பம், அம்முயற்சி அருமையின் அளவில் மிகுதியான, நீடித்த இன்பம் தரத்தக்கதாகும்.

இன்பம், இன்ப நாட்டத்தில், இன்ப நாட்டமுடையவர் ஆர்வத்தில், முயற்சியிலேயே அடங்கியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது. இந்த இன்ப நாட்டமே உயிர், இந்த முயற்சியே வாழ்வு என்பது கருத்தில் பதிக்கப்படவேண்டிய ஒரு பேருண்மை ஆகும்.

நாடிய இன்பம் கைவரப்பெருதவர், கைவரப்பெற்ற இன்பத்தால் மகிழ்ச்சியடையாதவர் ஆகியோர் பெறும் உணர்ச்சியே உண்மைத் துன்பம் ஆகும். உளநலம் வாய்ந்த உயிர்களில் இத்துன்பமும் நீடிப்பதில்லை. இயற்கையின் அகத்தூண்டுதல் இத்துன்பத்தின் படிப்பினையை அவர்களுக்குச் சரிவரக் கற்பித்துவிடுகிறது. 'துன்பத்தில் தோயாதே, தூங்காதே! மேலும் இன்பம் நாடு! அதுவே உயிர்ப்பண்பு. ஆர்வமாக இன்பம் நாடு, நாடி அருமுயற்சியில் முனை! ஏனெனில் அந்த ஆர்வமும் அந்த முயற்சியுமே மகிழ்ச்சி, இன்பத்தின் உயிரலை!' என்று இயற்கை அவர்கள் அகச்செவியில் ஓதுகிறது. அழுத குழந்தை ஆர்வமாக அடுத்த கணம் பால் குடிப்பதுபோல, அழுத முகம் அடுத்த நொடி சிரிப்பது போல, அவர்கள் மீண்டும் இன்ப நாட்டத்தில் ஆர்வம் கொண்டு முன்னேறுகின்றனர்.

ஆனால் முதுமை எய்திய சிலர்—உடல் முதுமை மட்டும் எய்தியவர் அல்லர், உடல் முதுமையினும் கேடான உயிர் முதுமை எய்தியவர்கள்—தாம் பெற்ற துன்பத்தில் தோய்ந்து அதை நிலையானதாக்கி விடுகின்றனர்! அத்தகையவர்வளுள் சிலர் அத்துன்பத்தில் தாம் தூங்குவதுடன் நில்லாமல், துன்ப 'கீதம்' பாடித் தம்மைச் சுற்றிலும் துன்ப அலைகளைப் பரப்பி விடுகின்றனர்.

**'உலகம் துன்பமயம்!'**

**'எல்லாம் துன்பமயம்!'**

**'வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம்!'**

இவை அழகிய பாடல்கள், அழகிய கருத்துக்கள் தாம். ஆயினும் இவை துன்ப கீதத்தில் தோய்ந் தெழுந்த அடிகளே. இவ்வடிகளை மட்டும் தனியாக எடுத்துப் பாடிச் சிலர் துன்ப அலைகளைத் தம்மையும் அறியாமல் பரப்பிவிடுகின்றனர். ஆனால் இப்பாடல் களைப் பாடிய பெரியோர்களின் நோக்கம் துன்ப அலைகள் பரப்புவது அல்லவே அல்ல. துன்ப அலை எழுப்பும் கருத்துக்களை ஓர் அடி, இரண்டடியில் செறிவு படச் சுருக்கிக் கூறிவிட்டு, அவர்கள் தம் நூல் முழுதும் இன்ப அலைகள் எழுப்பவே நாடினர். ஆனால் அப் பேரருளாளர்கள் வாழ்ந்த காலம் துன்ப அலைக்காலம், அவர்கள் சமுதாயம், இனம் முதுமையின் தளர்ச்சி தட்டிய காலம். ஆகவே துன்ப அலைகளை எவ்வளவு அழகுபட அவர்களால் பாட முடிந்ததோ, அவ்வளவு அழகுபட, அவ்வளவு கிளர்ச்சியார்வத்துடன், இன்ப அலைகளை அவர்களால் எழுப்ப முடியவில்லை. அதனு லேயே இன்ப கீதம் பாட வந்த அவர்கள் பாடல்கள் துடைக்க முடியாத துன்ப கீதங்களாகிவிட்டன. ஆயினும் அவர்கள் உள்ளார்ந்த இன்ப நோக்கே, இன்ப வலியுறுத்தே, அந்தத் துன்ப கீதத்துக்கும் ஓர் ஒப்பற்ற அழகு தந்து, அதைத் துன்பத்தில் ஆறுதல் அளிக்க வல்ல இனிய புலம்பல் பாக்கள் ஆக்கியுள்ளன.

துன்பத்தின் தளர்ச்சி தட்டிய தனி மனிதனுக்கு, சமுதாயத்துக்கு, இனத்துக்கு, அத்தளர்ச்சிக்குரிய அரு மருந்தாவன இத்தகைய துன்ப கீதங்களல்ல, ஆறுதல் கீதங்கள் கூட அல்ல, இன்ப கீதங்களே!

**‘உலகம் இன்பமயம்!’**

**‘வாழ்வு நிலையானது!’**

**‘வாழ்க்கை வாழ்வதற்கே!’**

**‘முயற்சியும் சமூகத் தொண்டுமே**
**வாழ்வின் நிலையான இன்பம்!’**

இவையே அத்தகைய அருமருந்தான இன்ப கீதங்கள்!

தமிழகத்திலும் சரி, வடபுலத்திலும் சரி—இடைக் காலத்திலும், அணிமைக்காலத்திலும் நாம் துன்ப கீதங் களேயே தலைசிறந்த அறிஞர்களிடமும், பேரருளாள ரிடமும் கூடக் கேட்கிறோம். ஆனால் நம் காலத்தில் நாம் இன்ப கீதத்தை எழுப்பி வருவதுபோலவே, தமிழ் சமஸ்கிருத இலக்கியத்தின் தொடக்க காலத்திலும் அறி ஞர்கள், கவிஞர்கள், அறவோர்கள், அருளாளர்கள் இன்ப கீதங்கள், கிளர்ச்சிக் கீதங்கள் பாடினர்.

தமிழகம் மீண்டும் இளமை பெற்றுள்ள காலம் நம் காலம். நம் காலக் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் ஆகியோரர் பாடல்களில் நாம் மீண்டும் எழுச்சிக் கீதம் கேட்கத் தொடங்கிவிட்டோம்.

'வலிமையற்ற தோளினாய் !—போ, போ, போ !'...
'ஒளிபடைத்த கண்ணினாய் !—வா, வா, வா !
உறுதிகொண்ட நெஞ்சினாய் !—வா, வா, வா !'

என்று பாரதியாரும்,

'இன்பம் எல்லார்க்கும்
என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழக்கிடுவாய் !'

என்று பாரதிதாசனும் இன்பப்பேரிகை கொட்டி யுள்ளனர்.

நம் காலத்தைப்போலவே இரண்டாயிர மூவாயிர ஆண்டுகளுக்கு—பல்லாயிர ஆண்டுகளுக்கு—முற்பட்ட தமிழகமும், தமிழகத்தின் வழி அன்று நின்ற பண்டை வடதிசையும் இளமை நலம் வாய்ந்திருந்தன.

'அன்புற் றமர்ந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு'

என்று முப்பாலமிழ்தமும்,

'உண்டா லம்ம, இவ்வுலகம்......
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே !'

என்று சங்கப் பாடலும், சங்ககாலத்தோடொத்த வட திசை அறிவூழியில்

[ 'உத்திஷ்டத, ஜாக்ரத! ப்ராப்ய வராந் நிபோதத! ']

'எழுமின், விழிமின்!
எழுந்து வேண்டிய
வரங்கள் கோருமின்!'

என்ற கடோபநிடத வாசகங்களும் முற்காலத்தில் எழுச்சிக் கீதங்கள் பாடின.

'தட்டு, கதவு திறக்கப்படும்
கேள், விரும்பியது கொடுக்கப்படும்'

என்ற விவிலிய நூலின் ஊக்குரையும்

'முயற்சி திருவினை ஆக்கும்'
'மடியிலான்
தாள் உளாள் தாமரையினுள்'
'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்'

என்ற பொதுமறைவாய்மொழிகளும் இவ்வகைத் தேற்ற உரைகளே ஆகும்!

துன்பம் வந்த காலத்தில் ஒருவன் அந்தத் துன்பத்தில் தோய்தலும் துவள்தலும் கூடாது. அதுபோலவே இன்பம் வந்தகாலத்தில் அதில் மகிழ்ந்து திளைத்துத் தன்னை மறந்துவிடுதலும் கூடாது. இவ்விரண்டுமே உயிர் வளர்ச்சிக்குத் தடையாகும். இன்பத்தைப் போலவே துன்பமும் இயல்பு என்பதை அவன் அறிய வேண்டும்.

'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்'

என்று திருவள்ளுவர் இவ்வுண்மையையே சுட்டிக் காட்டி, 'இடுக்கணழியாமை' என்று ஓர் அதிகார முழுவதும் அதனை விளக்கினர்.

இன்பமும் துன்பமும் இருவேறு பொருள்களல்ல; ஒரே பொருளின் இருபுறங்களே. இரண்டின் பொதுத் தன்மையே இன்பதுன்ப அலைகளின் ஏற்றத்தாழ்வி லிருந்து விடுபட்ட நிலையான நீடின்ப அமைதி. அதுவே தகுதி. அதை அறிவதே 'நடுவுநிலைமை' என்று திருவள்ளுவர் பெருமானால் சிறப்பிக்கப்பட்டது.

நடுவுநிலைமையற்றவன் தகுதியை அறியமாட்டான். இன்ப துன்பங்களின் இயல்பும் அவனுக்கு விளங்காது. அவன் இன்ப துன்பங்களை ஆட்கொள்வதற்கு மாறாக, இன்ப துன்பங்கள் அவனை ஆட்கொள்ள முற்பட்டுவிடும். இதனால் துன்பம் மட்டுமன்றி, இன்பமும் அவனுக்குத் துன்பமாகவே முடியும்.

'தகுதி எனஒன்று நன்றே, பகுதியால்
பால்பட்டு ஒழுகப் பெறின்'

இக்குறட்பா தகுதியையும் அதை அடைவதற்குரிய நடுநிலைத் திறத்தையும் நன்கு விளக்குகிறது.

நீரில் மூழ்கியவன் நீரைக் காணமுடியாது. அது போலத் துன்பத்தில் மூழ்கியவன் துன்பத்தின் இயல் பையோ, இன்பத்தில் மூழ்கியவன் இன்பத்தின் இயல் பையோ காணமுடியாது. இன்ப நாட்டம் இன்பதுன்பத் தில் மூழ்காத நாட்டமாய் இருந்தால்தான், இன்பதுன்பங் களின் காரணங்களைப் பிரித்தறிந்து, துன்பம் தடுத்து இன்பம் பெருக்கமுடியும். இன்ப துன்பங்களின் உள் ளார்ந்த இயல்பை அறிந்தபின், துன்பத்தையும் ஒருவன் இன்பம் பெருக்கும் கருவியாக்கிவிட முடியும்.

இன்பத்திலும் துன்பமே சிறந்த நண்பன் என்று அறநூலார் கூறுவதுண்டு.

இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம்.

ஒன்று துன்பமே மனிதனைச் சிந்திக்கவைத்து அறி வைத் தூண்டுகிறது என்பது. அதுவே இன்பத்தை நிலையாக்குவதற்குரிய படிப்பினைகளையும் தருகிறது. போலி நண்பர்கள், மெய் நண்பர்களை ஒருவன் இன்ப

காலத்தில் பிரித்தறிய முடியாது. துன்ப காலத்திலேயே வகுத்து உணரமுடியும். அதுபோல, போலிப்பண்பு களையும் மெய்ப்பண்புகளையும் வேறுபடுத்தி அறியத் துன்பமே மனிதனுக்கு உதவுகிறது.

துன்பத்தின் இன்னலத்துக்குரிய இரண்டாவது காரணம், அதுவே இன்ப நுகர்வை உண்டுபண்ணு கிறது என்பதே.

நிழலில் தங்குபவன் நிழலில் எவ்வளவு நேரம் இருந் தாலும் நிழலருமை அறியமுடியாது. நிழல் அவனுக்கு இயல்பான பொருளாகத் தோன்றக்கூடுமேயன்றி, இன் பப் பொருளாகத் தோன்றமாட்டாது. ஆனால் வெயிலில் உழன்றபின் அதன் அருமையும் அதன் இன்பமும் அவ னுக்கு முதன் முதலாகத் தெரியவருகின்றன. இன்பத் துக்குரிய இந்த மெய்ம்மை துன்பத்துக்கும் பொருந்தும். மலையில் வாழ்பவருக்கு மலை உயரமாகத் தோன்றாது. வெப்ப மண்டலத்தில் வாழ்பவருக்கு வெப்பம் தாங்கற் கரிய துன்பமாகத் தென்படாது. அதுபோலவே இன்ப இடையீடின்றித் துன்பத்தில் வாழ்பவனுக்குத் துன்பம் துன்ப உணர்வே தராது. துன்ப இடையீடின்றி இன்பத் தில் வாழ்பவனுக்கும் இன்பம் இன்ப உணர்வு தரமாட் டாது.

இன்ப துன்பம் என்பன வேறுவேறு பொருள்க ளல்ல என்று மேலே கூறினோம். அவை ஒரே பொருளே. ஏனெனில் ஒருவர் இன்பம் இன்னொரு வருக்குத் துன்பமாகலாம். ஒருவருக்கே ஒருவேளை இன்பம் இன்னொரு வேளை துன்பமாகக்கூடும். ஆகவே 'இன்ப துன்ப வேறுபாட்டுணர்ச்சி' புறப்பொருள்களில் இல்லை; அக உணர்வு மட்டுமே யாகும்.

ஒளியில்தான் மனிதன் கண்கள் எதையும் விளக்க மாகக் காண்கின்றன. ஆனால் பூனையின் கண்கள் இரு ளிலேதான் அம்முழுவிளக்கம் பெறுகின்றன. இங்கே ஒளியும் இருளும் பூனை, மனிதன் ஆகிய இருவேறுயிர்க ளுக்கு இருவேறு பண்புகள் ஆகின்றன.

மனிதனுக்குத் தீ, வெள்ளம், மின்வலி ஆகியன ஒருசமயம் தீங்கு விளைக்கின்றன. மற்றொரு சமயம் அவற்றையே அவன் ஆட்கொண்டு நலம் பெறுகிறான்.

இன்பமும் துன்பமும்—நன்மையும் தீமையும்—புறப் பொருள்களின் தன்மையில் இல்லை, அவற்றை அகப் பண்பு பயன்படுத்தும் வகையிலேயே உள்ளன என் பதை இவை புலப்படுத்துகின்றன.

உடல்நலத்துக்கு ஏற்படும் ஊறினைப் பிணி எடுத்துக் காட்டுவதுபோல, உயிர்நலம், உளநலம், வாழ்வு நலம் ஆகியவற்றுக்கு ஏற்படும் குறைபாட்டினைத் துன்ப உணர்வு எடுத்துக்காட்டுகிறது.

உயிர் நலம், வாழ்வு நலம் அறிந்து, அவற்றுக் கிசைய இன்பச்சூழலைப் பெருக்குபவனுக்குத் துன் பங்கள் இன்பமாளிகை கட்டுவதற்குரிய முதற் கருவிக ளாய் அமைந்துவிடும். அப்போது அவன் இன்பதுன்ப அலைகளிலிருந்து விடுபட்டு, நீடின்ப அமைதி அடை கிறான்.

இன்பங்களின்மீது இன்பமாளிகை எழுப்புபவனை விடத் துன்பங்களின்மீது அதனை எழுப்புவனே சாலச் சிறந்தவன் ஆவான். இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

வானவெளி எங்கும் உள்ளது. அதனடியில் மண் முதலிய பொருள்கள் பரந்துள்ளன. இரண்டும் பார் வைக்குத் தொடர்பற்ற பொருள்களே. ஆனால் மண்ணும் கல்லும் மரமும் இணைத்து மனிதன் வெட்ட வெளியிலே சுவர், கூரை, தளங்கள் அமைக்க முடிகிறது. அவை வானவெளியில் ஒரு கூடமைத்து அதை ஒரு வீடாக்கி விடுகின்றன. ஆனால் அதே வீட்டை இன்னொருவகை யாலும் அமைக்க முடியும். அது இன்னும் சிறந்த, உறுதி யான வீடாகக்கூட அமையும். மண், கல் ஆகியவற்றால் வான வெளியை அடைத்து வீடாக்குவதுபோல, நிலத் தையோ, மலையையோ குடைந்து, அவற்றினிடையே வேண்டிய இடங்களிலெல்லாம் வெளியிடம் உண்டு

பண்ணி வீடமைக்கவும் முடியும். பண்டைத் தமிழர் கட்டிய குகைக் கோயில்களும், இன்றும் உலகின் வடகோடியிலுள்ள மக்கள் பனிக்கட்டி குடைந்து அமைக்கும் இல்லங்களும், எலி, முயல் வளைகளும் இவ்வாறு அமைக்கப்படுபவையே. நம் வீடுகளில் நாம் சுவரும் கூரையும் தளமும், தூண்களும் கதவு பலகணிகளும் முயன்று கட்டுகிறோம். வெளியிடம் இயற்கையின் கூறாய் அமைகிறது. ஆனால் பிந்திய உறையுள்களில் சுவரும் கூரையும் தளமும் இயற்கையாய் அமைந்து விடுகின்றன. உள் வெளியிடத்தையே முயன்று அமைக்கிறோம்.

இன்ப அடிப்படையில் இன்ப மாளிகை அமைப்பவர் நம்மைப்போல் சுவர் கூரை எழுப்பி வீடமைப்பவர். துன்ப அடிப்படையில் மாளிகை கட்டுபவர் குகைக் கோயில், பனிவீடு கட்டுபவர் போன்றவர்கள். பின்னது கடுமுயற்சியால் அமைவது, ஆனால் உறுதியில் மிக்கது என்று கூறத் தேவையில்லை.

இன்பதுன்ப நடுநிலையுணர்வால் ஏற்படும் இந்த நீடின்ப அமைதியையே புத்த சமண சமயங்களும் மேலை நடுநிலை வாணரு (Stoics) பேரின்ப நிலை (நிர்வாணம்) என்று கருதினர். பகவத்கீதை

‘ இன்பதுன்ப ஒப்புரவறிந்து ’

[ ‘ சுகதுஃக்கே சமே க்ருத்வா ’ ]

என்று குறிப்பது இதனையே. ஆனால் உட்பொருள் உணர்வின்றிக் காரணகாரிய விளக்கமில்லாமல் உலக அறிஞர் கிளிப்பிள்ளைகள்போல் கூறுவதைத் திருவள்ளுவர் பெருமான் ‘அன்பு, வாழ்வின் இன்பம்’ என்ற அடிப்படையில் மனிதப் பண்பு நிறைந்த தெய்வீகப் பண்புடன் நமக்கு விளக்கித் தந்துள்ளார்.

திருக்குறள் அறநூல் மட்டுமல்ல, பொருள் நூல். மட்டுமல்ல. அதுவே இன்பநூல், பேரின்பநூல். அந்நூலைத் துருவியாராயாமல், வேறெந்நூலை ஆராய்ந்தா

லும், உண்மை இன்பத்தின் தன்மை காணமுடியாது. திருக்குறளுக்கு மற்ற நூல்களில் விளக்கம் தேடுவதை விட, உட்பொருள் தொடர்பு மறைந்துவிட்ட அந்நூல் களின் நல்லுரை மரபைத் திருக்குறட் சிந்தனையால் விளக்கம் பெறுவிப்பதே அறிவியல்புடைய செயல் ஆகும்.

இன்பவழி கண்டுரைத்த வள்ளுவர் வழி நின்று உண்மை இன்பம், இன்பத்துள் இன்பம் காண்போமாக!

## 4. புதுமை இன்பம்

இன்பம், இனிமை!

அகச்சுவையும் நாச்சுவையும் குறித்த இந்த இரண்டு சொற்களும் தமிழில் தொடர்புடையவையாகக் காணப் படுகின்றன. மனித வாழ்வின் அடிப்படைப் பாகுபாடுகளாகிய 'குடி', 'இனம்' என்பவை கூட இவற்றுடன் சொற்பொருள் தொடர்பு உடையனவோ என்று எண்ண இடமுண்டு. ஆனல் 'இன்பம்', 'இனிமை' ஆகியவற்றின் சொல் தொடர்பு தமிழுக்கே சிறப்பானலும், அவற்றின் சொற்பொருள் தொடர்பு கிட்டத்தட்ட எல்லா மனித இன மொழிகளுக்கும் பொதுவேயாகும்.

இன்பத்தை எல்லாரும் விரும்புவது போலவே, இனிமையையும் எல்லாரும் விரும்புவர். அதுபோலத் துன்பத்தை எல்லாரும் பலவேறு படியில்வைத்து வெறுப்பதுபோலவே, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு ஆகிய மற்றச் சுவைகளைப் பல வகையாக, பல படியாகப் பெரும்பாலார் வெறுப்பர். ஆயினும் துன்பத்தில் இன்பச்சுவை காண்பவர் இல்லாமலில்லை. அதுபோலவே புளிப்பு முதலிய மற்றச் சுவைகளில் ஈடுபட்டு அவற்றை விரும்புபவரையும் நாம் காணலாம்.

விஞ்சிய சுவை இனிமையே என்றுதான் தமிழரும் ஏனையோரும் கொண்டிருக்கவேண்டும். இது இயல்பே. ஆனல் இன்பத்துக்கு இன்பமும் இன்ப உறுதியும் தருபவை மற்றச் சுவைகள் என்பதையும் அவர்கள்

அறிந்தே 'அறு சுவை உண்டி' வகுத்துச் சென்றனராதல் வேண்டும்.

இனிய பொருள்கள் மேலீடான இன்பத்தைப் போலவே எளிதில் கெடுவன. ஏனைய சுவைகளோ கெடா நலம் மிக்கன. இதனை நகைநயத்துடனும் அறிவு நயத்துடனும் 'திருவளர்த்தான்' கதை ஒன்று நமக்குக் காட்டுகின்றது.

'அரும்பொருள் ஒன்றை ஒவ்வொருவரும் தேர்ந்து கொணர்க!' என்று பணித்திருந்தான், திருநாட்டு மன்னன்! யார் சிறப்பு மிக்க அரும்பொருள் தேர்கின்றனர் என்று காண அவன் விரும்பியிருந்தான்.

பொன்மணிப் பேழைகளை அருமுயற்சியுடன் தேடிப் பெற்று அவற்றை ஏந்தி வந்தனர் சிலர்.

மயிலும் குயிலும், அன்னமும் மானும், குதிரையும் வருந்தித் தேடி இட்டுக்கொண்டு வந்தனர் சிலர்.

வண்ணமலர்கள், வகைவகையான சுவைதரும் கனிகள், வாய் ஊறவைக்கும் சிற்றுண்டிகள் ஆகியன கொணர்ந்தனர் வேறு சிலர்.

ஆனால் திருவளர்த்தான் எதுவும் கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. அது கண்டு அவையோரும் பொது மக்களும் வியப்புற்றனர்.

அரும் பொருள்கள் ஒவ்வொன்றையும் கண்டுகண்டு அவற்றைத் தேர்ந்தெடுத்தோர் அருந்திறம் எண்ணி எண்ணி இறும்பூ தெய்தினான் மன்னன். எல்லாப் பொருள்களையும் பார்வையிட்டபின், வெறுங் கையுடன் நின்ற திருவளர்த்தானை ஏறிட்டு நோக்கினான்.

'உன் திருகுவிழி தவிர உனக்கு வேறு அரும் பொருள் ஒன்றும் கிடைக்கவில்லையா, திரு!' என்று குறும்பு நகையுடன் கேட்டான்.

குறும்பே உருவாக என்றும் விளங்கிய திருவளர்த்தான் முகத்தில் அச்சமயம் குறும்பின் சாயல் எதுவுமே

கர்ணவில்லை. அவன் எல்லாரையும் போலவே பணிவன்புடன் மன்னனை வணங்கி, தன் இடுப்பிலிருந்து ஒரு சின்னஞ்சிறு கந்தல் மூட்டையை எடுத்தான்.

மன்னன் திருவடிப்பக்கமே ஆர அமரக் குந்தியிருந்த வண்ணம் அவன் அம்மூட்டையை அவிழ்க்கத் தொடங்கினான்.

ஏளனத்துடன் அவனை நோக்கிய சிலர் அவன் செயல் கண்டு வியப்புற்றனர். பலர் அதன் பொருள் தெரியாமல் மலைப்புற்றனர்.

மூட்டையின் முடிச்சு ஒரே முடிச்சாய் இல்லை. முடிச்சுக்குள் முடிச்சு, அதற்குள் முடிச்சு என நீண்டு கொண்டே சென்றது. அவன் ஒன்றன்பின் ஒன்றாக முடிச்சுக்களை அவிழ்த்துக்கொண்டே இருந்தான். அவ்வளவு சிறிய மூட்டைக்குள் எப்படி அத்தனை முடிச்சுக்கள் இருக்க முடியும் என்றனர் சிலர். அத்தனை முடிச்சுக்கள் கடந்த பின் அதில் வேறென்ன இருக்க முடியும், வெறும் காற்றுத்தான் இருக்கப்போகிறது என்று ஆத்திர முடிவு கட்டினர் வேறு சிலர்.

முடிச்சுக்கள் எல்லையில்லாமல் நீண்டுகொண்டே செல்வது கண்டு பொறுமை யிழந்தனர் பலர்.

சிலர் அவன் செயல் கண்டு சிரித்தனர்.

சிலர் சீறினர்.

"இது என்னடா வெங்காயம்!" என்று பாதி சிரிப்பும் பாதி சீற்றமுமாக மன்னன் கேட்டான். 'இதை வெளியிலிருந்தே அவிழ்த்துக்கொண்டு வந்தால் என்ன, என் முன்தானா அவிழ்க்கவேண்டும்! எனக்கு வேறு வேலையில்லையா?' என்று அருகிலுள்ளோர் கேட்க முணு முணுத்துக்கொண்டான்.

'அரசே! நீங்கள் மன்னர் என்றால் மன்னர்தான். மன்னர் மன்னர்தான், இந்த முடிச்சின் அருமையை நீங்கள் ஒருவர்தான் உணர்ந்துகொண்டிருக்கிறீர்கள்.

இது ஒரு 'வெங்காயம்' என்பதை நீங்கள் மட்டுமே கண்டு சொன்னீர்கள்!' என்ருன் திருவளர்த்தான்.

மன்னனுக்குச் சீற்றம் பொத்துகொண்டு வந்தது.

'ஒரு வெங்காயத்துக் காகவாடா, என்னையும் இத்தனை பேரையும் இப்படி காக்கவைக்கிருய்! இதோ...'

'இல்லை அரசே! மன்னிக்கக் கோருகிறேன். இது வெங்காயமல்ல. வெங்காயம் போன்றதென்று நீங்கள் வெங்காயத்தின் பண்பறிந்து சொன்னதாகத்தான் நான் எண்ணினேன். உரிக்க உரிக்க வெங்காயம் சிறுத்துக் கொண்டே போகும். ஆனல் காரம் சிறுக்காது. அது அருகில் உள்ளோர் மூக்குவழிச்சென்று கண்களைச் சீறவைக்கும். அதுபோல இதுவும் அவிழ்க்க, அவிழ்க்கச் சிறிதாகிக்கொண்டே சென்று எல்லார் கண்களையும் சீறவைக்கிறது!' என்ருன்.

அரசன் தன் சீற்றத்தை மறந்து சிரித்தான். திருவளர்த்தான் முடிச்சு இப்போது உண்மையிலேயே மிக மிகச் சிறிதாயிற்று. ஆனல் இன்னும் அவன் முடிச்சுக்களை அவிழ்த்துக்கொண்டுதான் இருந்தான். அப்படி அதில் என்னதான் இருக்கப்போகிறதோ என்று பலரும் ஊகிப்பதில் ஈடுபடத் தொடங்கினர். ஊகத்தில் சீற்றம் போய்விட்டது. எரிச்சல் போய்விட்டது. மற்றெல்லா உணர்ச்சிகளும் வெளிப்பட்டன.

'வேறு என்ன இருக்கப்போகிறது, ஒரு தவளைக் குஞ்சு அல்லது தப்பிரட்டை வைத்திருக்கப் போகிருன்.'

'அடே, ஓர் உயிருள்ள தேளை வைத்து நம்மைத் திடுக்கிட வைக்கப்போகிருன்!'

'அதில் ஒன்றும் இராதுடா! அவன் குழந்தை தலை மயிரில் ஒன்றைத்தான் வைத்து நம்மை நையாண்டி செய்யப் பார்க்கிருன்!'

இத்தகைய ஊக ஆராய்ச்சிகளிடையே அவர்கள் எவரும் ஊகிக்காத, எதிர்பாராத முறையில், திருவளர்த்

தான் முடிச்சினுள்ளிருந்து ஒரு புளியம்பழத்தை எடுத்து, அதைப் போதிய மதிப்பார்வத்துடனும், வணக்க உணர்ச்சியுடனும் அரசனிடம் சென்று காணிக்கையாக நீட்டினான்.

'பிறரெல்லாம் தேடித் தேடிப் பார்த்தார்கள், அரசே! ஆனால் நான் நினைத்து நினைத்துப் பார்த்தேன். எவராலும் தேர்ந்து கண்டுபிடிக்க முடியாததாக நான் தேர்ந்தெடுத்த அரும்பொருள் காணிக்கை இது தான். மன்னர் மன்னராகிய தங்களுக்கு ஏற்ற காணிக்கை இது!' என்றான்.

'இருந்திருந்து ஒரு புளியம்பழந்தானடா எனக்கு ஏற்றதாக உன் திருகுமூளை கண்டுபிடித்தது?' என்று கேட்டு மன்னன் விழுந்து விழுந்து சிரித்தான்.

எல்லோரும் சிரித்தனர்.

ஆனால் திருவளர்த்தான் சிரிக்கவில்லை.

'அரசே! மன்னிக்கவேண்டும். நான் வெறும் சிரிப்புக்காக மன்னர் மன்னர் அவைக்கு இதைக் கொண்டுவரவில்லை. இதை நான் மூட்டை கட்டி வைத்திருந்த அருமையையும், அதை எடுத்துத் தருவதில் நான் மேற்கொண்ட முயற்சியின் அருமையையும் நீங்களே பார்த்தீர்கள்! அறிவில் சிறந்த இந்த அவையோர் எல்லாரும் ஆவலுடன் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார்கள்......!''

அது அரசவை என்பதைக்கூட மறந்து 'ஆகா, ஆகா!' என்று ஆர்ப்பரித்தனர், அமைச்சர் உட்பட அவையோர் எல்லாரும்!

'மன்னர் மன்னனே! முழுதும் கேட்காமலே எல்லாரும் இவ்வளவு பாராட்டுகிறார்கள். முழுதும் கேட்டால்......!'

இவ்வாய்த்திறம் ஆரவாரத்தை இன்னும் பெருக்கிற்று. ஆனால் மன்னன் கையமர்த்தினான்.

'முழுதும் கேட்ட பிற்பாடு சிரிப்போம். இப்போது சிரிக்கவேண்டாம்! திரு, நீ இனி உன் முழுப்பேருரையையும் ஆற்றலாம்!' என்றான்.

'ஆண்டவனே, எளியேன் சிற்றுரைக்கும் சிறுமூளைக்கும் இவ்வளவு மதிப்புத் தந்துவிடக்கூடாது! ஏதோ நான் தங்களிடம் கொண்ட ஆர்வ மதிப்புத்தான் என்னை இவ்வளவு சிந்திக்கவைத்துள்ளது.

"பொன்னும் மணியும் விலையுயர்ந்தவை. ஆனால் அவற்றை மன்னர் தம் பின்னோர்களுக்கு விட்டுச் செல்லலாம். தாமே துய்க்க முடியாது. மானும் மயிலும் குயிலும் அப்படியே! அவை நீடித்து இன்பம் தர மாட்டா. மலர்கள் கனிகள் துய்ப்பதற்குரியவை. ஆனால் மலர்கள் வாடிவிடும். கனிகள், இனிய உண்டிகள் முதலில் இனிக்கும், பின் புளித்துப்போகும். விரைவில் கெட்டுவிடவும் செய்யும். ஆனால் நான் கொண்டு வந்த பழம்..."

'ஆம், புளியம்பழம்கூட ஒரு பழம்தான்!' என்று பின்னிருந்து கீச்சிட்டது ஒரு குரல்.

திருவளர்த்தான் தொடர்ந்தான்.

'ஆம், இதுதான் பழங்களில் சிறந்த பழம். மற்றப் பழங்கள், இன்பங்கள் முன் இனிக்கும், பின் புளிக்கும். இது முன் புளிக்கும், பின் இனிக்கும். இது வாடாது, வதங்காது; அழுகாது, கெடாது. நாட் செல்லச் செல்ல மேலும் மேலும் இனிக்கும். வாயிலிட்டவர் முதலில் இனிப்புத் தாங்காமல் முகத்தைச் சுளிப்பர். ஆனால் விரைவில் அவர்கள் நாக்கைத் துழாவுவதைப் பார்க்காலம்.

'இந்தப் புளிப்பு ஒரு சிறிதும் இல்லாத இனிப்புச் சுவை தேன்போல் இனிதாவதில்லை. தேன்போல் நீடித்துக் கெடாமலிருந்து, பிற பொருள்களையும் கெடாது காப்பதில்லை.

இனிப்புக்கு இனிப்புத் தருவது புளிச்சுவை. கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு ஆகிய எச்சுவையை

யும் இன்சுவையாக்கும் பண்பு இதற்கு உண்டு. ஆகவே இனிமையின் இனிமை இதுவே. இதுபோன்ற இன்பத்தின் இன்பம் மன்னர் மன்னர் வாழ்வில் மிளிரட்டும் என்ற கருத்துடனேயே நான் இதை அரிது முயன்று கண்டுபிடித்து மன்னர் மன்னரின் காணிக்கை யாக்கினேன்.

'இது தவருனால், என் சிறு மூளையின் குறை இது என்று மன்னிக்கக் கோருகிறேன். ஆனால் சரி என்று நீங்கள் கருதினால், அதற்காக என்னை பாராட்ட வேண்டாம். என்னை நினைத்து என்னைப்போலச் சிறிய மூளையுடைய உங்கள் சிறுவர் சிறுமியர்களைப் பாராட்டுங்கள்' என்றான்.

மன்னனும் மன்னவையோரும் இப்போது சிரிக்கவில்லை. ஆனால் நகைச்சுவையிடையே திருவளர்த்தான் காட்டிய அறிவுப் படிப்பினையை அவர்கள் பாராட்டினர், போற்றி மகிழ்ந்தனர்.

தமிழர் இனிமையிலும் தேனினிமைக்குரிய தனிச் சிறப்பை உணர்ந்திருந்தனர். பழங்களில் தலை சிறந்த முப்பழங்களுக்கு மட்டுமே அவர்கள் தேன் என்ற சொல் அடை சேர்த்து, தேமா, தேம்பலா, தேங்கதலி என்று அழைத்தனர். இவை வெறும் அடைமொழி சார்ந்த சொற்களல்ல, முப்பழங்களில் தேன் தன்மையுடைய உயர்தனி வகைகளுக்குரிய பெயர்களேயாகும். இப்பெயர் கொண்ட முப்பழ வகைகளில் நீர்ச்சத்து முற்றிலும் சுவறித் தேம்பாகாகச் சுண்டிவிடுவதனால், அவை தேனிவிட்ட பழம்போல இனிமையும் கெடாநலனும் உடையனவாகத் திகழ்கின்றன. அரும் பெறலாகிய இம்மூவகைக் கனிகளையும் தமிழர் இனிது பேணாததாலேயே, இப்பெயர்களை அடைசார்ந்த பொதுச் சொற்கள் என்று கருதிவர நேரிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

புளிப்பைவிட இத்தகைய நீடித்த இனிமைச் செறிவுடைய சுவைகள் துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு முதலியன. துவர்ப்பின் நலத்தை நெல்லிக் கனியிலும்,

உவர்ப்பின் நலத்தை உப்பிலும், கசப்பின் நலத்தைப் பாகற்காய், சுண்டைக்காய் முதலிய அருமருந்துணவு களிலும் காணலாம்.

இனிப்பின் செறிவே புளிப்பு, கசப்பு முதலிய சுவை கள். இவ்வுண்மையைத் தமிழகத்தின் தொழிற்கலைப் பேரறிஞரான ஜி. டி. நாயுடு அவர்கள் தம் செயல் தேர்வுமூலம் தமிழர் பொதுவரங்குகளிலே காட்டியுள்ள னர். உறுகசப்புடைய கனிச்சாற்றை அவர் முதலில் காட்டி, அதனுடன் பத்துப் பதினைந்து மடங்கான நீர் சேர்த்து வளாவி, அந்த இளம் பாகத்தில் அது பேரினி மையுடையதாய் இருப்பதை விளக்கியுள்ளார்.

இன்ப உணர்வின் மிகுதியும் துன்ப உணர்வின் மிகுதியும் இயற்கையில் ஒரே உணர்வற்ற நிலை அடை கின்றன. மிகுதுன்பத்தால் உணர்விழப்பவரும் உயிரிழப் பவரும் உண்டு. அதுபோலவே மிக்க இன்பத்தாலும் உணர்வு, உயிர் இழப்பவர்களை பற்றிக் கேள்விப் படுகிறோம். முன்னாட்களில், சிறப்பாகப் படைத் துறையில், கசையடிகளை நூறு ஆயிரக் கணக்கில் தண்டனையாக அளிப்பதுண்டு. ஆனால் அடிபடுபவன் ஒருசில அடிகளுக்குப்பின் உணர்விழப்பதனால் அடி உறைப்பதில்லை. இதனாலேயே அக்காலக் கொடிய சட்டம், சில அடிகளுக்கு ஒருமுறை அடியை நிறுத்தி மருந்திட்டுப் புண்ணாறவைத்து அடிக்கவேண்டுமென்று திருத்தப்பட வேண்டியதாயிற்று! ஆனால் தண்டனையே குற்றத்தைக் குறைக்க, குற்றவாளியைத் திருத்தப் பயன்படுவதில்லை என்ற உண்மையை உலகம் இப்போதுதான் உணர்ந்து வருகிறது.

உண்மைத் திருத்தம் தண்டனையல்ல. துன்பம் அளிப்பதுகூட அல்ல. ஏனெனில் அகஅறிவு செயலாற் றும் இடத்தில் மட்டுமே துன்பம் திருத்தமாகப் பயன் படக் கூடும். ஆனால் உண்மைத் திருத்தத்துக்கு வேறு நல்ல, சிறந்த வழி இல்லாமலில்லை. அது இன்பம் பெருக்கும் வழிகளை—உணர்வற்ற நிலையை அடையா மலே இன்பத்தின் மேல் இன்பம், இன்பத்துள் இன்பம்

என்று உயர்ந்துசெல்லும் வழிகளை—குற்றவாளிகளுக்கு மட்டுமின்றிப் பொதுமக்களுக்கும் அறிவிப்பதேயாகும்.

அன்புவழி நின்று அவ்வின்பத்துள் இன்பம், இன்பத்தில் உணர்விழந்த நிலை அதாவது தெவிட்டாத இன்பம், இன்பத்தின்மேல் இன்பமாகிய பேரின்பம் விளக்கும் ஒப்பற்ற இன்பநூல் வள்ளுவர் பொய்யா மொழியேயாகும். அதன் உட்கோள்கண்டு, இன்பத்துள் இன்பம் நுனித்துணர்வோமாக.

## 5. இன்பத்தின் மறை திறவு

"இன்பம் என்றால் என்ன? அதை எங்கே காண லாம்?"

"துன்பத்தின் இன்மையே இன்பம். துன்பம் அணுக முடியாத இடத்திலேயே அது நிலவுகிறது"

"அப்படியானால் துன்பம் என்பது என்ன? அது ஏன் உண்டாகிறது?"

"இன்பத்தை உணர்ந்தவன் அது பெறாது ஏங்குவதே துன்பம்! துன்பத்தை வெறுப்பதனாலேயே—இன்பத்தை அடைய முயலாது அதை எதிர்பார்த்து ஏங்குவதனாலேயே—அத்துன்பம் உண்டாகிறது, நீடிக்கிறது!"

இது ஜெர்மன் கவிஞர் பெருமான் கெதேயின் 'ஃவாஸ்ட்' என்ற நாடகத்தின் ஓர் உரையாடல் பகுதி.

கதைத் தலைவன் முனைவன் ஃவாஸ்டஸ் உலகியல் அறிவு முழுவதும் உணர்ந்தும் உள நிறைவு பெறாதவன். 'எரிவாய்' (நரக) உலகின் துணைநாடி, அதன் தூதனை மெஃவிஸ்டாஃவிலிஸினிடம் இக்கேள்விகளைக் கேட்கிறான். ஃவாஸ்டஸ் கேள்விகள் அறிவார்ந்தவை. விடைகளும் முழுதுற அறிவு விளக்கம் தருபவையே. ஆனால் முனைவன் ஃவாஸ்டஸ் ஏட்டறிவில் முதிர்ந்தவனாயினும், உணர்ச்சி நிலையில் உலகின் பெரும்பான்மை மக்களிடமிருந்து வேறுபட்டவனல்லன். எனவே விடைவிளக்கங்கள் மெஃவிஸ்டாஃவிலிஸ் எதிர்பார்த்தபடியே அவன் உள்ளத்துக்கு ஒளிதரவில்லை.

அவன் கதை முடிவின்படி, நிலையற்ற இன்பநாடி இறுதி யில் துன்ப உலகுக்கே இரையாகிறான்.

இன்பத்தை அடைவதற்கு இன்பநாட்டம் வேண் டும். ஆனால் அது இருந்தால் மட்டும் போதாது. இன் பத்தின் இயல்பறிய வேண்டும். துன்பத்தின் தன்மை யுணர வேண்டும். துன்பத்தை இன்பமாக்கும் வகை கண்டுணர வேண்டும். இவைகூட நிலையான இன்பம் காணப் போதமாட்டா. இன்பத்துள் இன்பம் எது, இன்பங்களுக்கெல்லாம் அடிப்படை, எல்லையில்லாத இன்பம் எது என்ற அறிவு வேண்டும். இவை உலகில் பெரிதும் உணரப்படாததனாலேயே 'இன்பம் எங்கே இருக்கிறது?' என்ற கேள்வி என்றும் ஓய்வுறாத கேள்வி யாக அமைகின்றது.

உண்மையில் இன்பம் எங்கும் இருக்கிறது. உலகம் இன்பமயம். இன்பம் இல்லாத இடமே கிடையாது. ஏனெனில் துன்பம் என்பது இன்பத்தின் மறுபுறம், இன் பத்தை நிறையின்ப நோக்கிப் பெருக்குவதற்கான ஒரு கருவி—அவ்வளவே!

'உலகம் இன்பமயம்' என்று கருதுபவர், அவ்வாறு இன்பகீதம் பாடுபவரே கலைஞர், கவிஞர்! கலைஞரையும் கவிஞரையும் உலகம் பெரிதும் போற்றுவது இதனா லேயே. அவர்களிடம் மிக எளிதில் ஈடுபட்டு அவர்கள் வசமாவதும் இதுகாரணமாகவே. ஆனால் கலைஞரை உலகம் விரும்பினாலும் மதிப்பதில்லை. அறிவில் சிறந்த அறிஞர் சொற்களுக்குத் தரும் உயர் சிறப்பு அவர்கட்குக் கிடைப்பதில்லை. கலைஞர்களில் பலர் அந்த உயர் படிக்கு உகந்த தகுதி பெறுவதுமில்லை. இந்நிலை வருந்து வதற்குரியது. ஏனெனில் உலகுக்கு வழிகாட்டும் அறிஞர் பலரும் 'உலகம் இன்பமயம்' என்பதைக் காணாதவர், பிறருக்கு அவ்வுண்மையைக் காட்ட முடியாதவராகவே உள்ளனர். சமயத்துறையிலும் உலகப் பெரியாராகிய சமய முதல்வர் சிலர் நீங்கலான சமயவாணர் பலரும் 'உலகம் துன்பமயம் என்று கருதுப வர், காட்டுபவராக உள்ளனரேயன்றி, இன்பத்துள்

இன்பம் உணர்ந்தவராகத் திகழவில்லை. சமய முதல்வர் கண்ட ஒளிக்கதிர்களைக் கூடச் சமயவாணரும் சமய அறிஞரும் சமயஞ்சாரா அறிஞரும் பல்வேறு வகையில் திரையிட்டு மூடிவிடுகின்றனர்.

திருவள்ளுவர் கலைஞருள் ஒரு கலைஞர், கவிஞருள் ஒரு கவிஞர்! தலைசிறந்த கலைஞர், கவிஞர்; முன்னணியிலும் முதன்மை வாய்ந்த கலைஞர், கவிஞர்! அத்துடன் அவர் உலக அறிஞருள் ஒப்புயர்வற்ற வான் பேரறிஞராகவும் விளங்குகிறார்! சமயவாணர் சென்று எட்டாத தொலைவில், சமய முதல்வர் கண்டுணர்ந்த சமயங்களுக்கே அடிப்படையான அறத்துறைக்கும் அவரே முதல்வர்! ஆகவே இந்த முத்துறைகளில் இன்பகீதம் பாடி, என்றும் அழியாத பேரின்ப நாதம் எழுப்பி, அதை உலகுக்குத் தமிழ்மொழி வாயிலாகத் தந்துசென்றுள்ளார். இது தமிழினம் என்னும் பேழைக்குள் அடைபட்டு, தமிழினத்தின் அறியாமை, அடிமையிருள் என்னும் ஆழ்நிலத்தில் புதையுண்டு கிடக்கிறது. தமிழர் அதைத் தமிழறிவு என்னும் திறவுகொண்டு, தமிழ்ப்பற்று என்னும் கை நீட்டித் திறந்து உலகுக்கு வழங்கல் வேண்டும். இடைக்கால இருளறிவுகள், இருளார்ந்த உரைகள் என்னும் தூசி துடைத்து உலகம் அதைக் காணவிட வேண்டும்.

'உலகம் துன்பமயம்' என்றே பெரும்பாலான சமயவாணர் கருதுகின்றனர். 'இன்ப உலகம் இங்கே இருக்கிறது, அது உன்னுள்ளே இருக்கிறது!' என்று இடித்து இடித்துக் கூறினார் இயேசுபிரான். ஆனால் இன்ப உலகத்தை அங்கே, மேல்வானிலே, கற்பனை வெளியிலே காண்பதில்தான் கதித்து நிற்கின்றனர், அவரையே போற்றிய கிரித்தவ சமயவாணர். முதல்வர்கள் இவ்வளவு தெளிவாக இடித்துக்கூறாத ஏனையசமயங்கள் வகையிலோ, சமயவாணர் நிலையைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை! அவர்கள் அவ்வுலகை மக்கட்குக் காட்டி, இவ்வுலகில் தாங்கள் புகழும் பெருமையும் அடையத்தான் விரைகின்றனர். இவ்வாறு துன்ப கீதத்திலே தோய்ந்த சமயவாணர்களுக்குச் சமய-முதல்

வர்களே இன்பகீதம் எழுப்பினாலும், அவர்கள் செவியில் அது ஏறுவதில்லை. அவர்கள் மன்பதை உலகுக்கு அந்த இன்ப கீதத்தைத் துன்பகீதமாக மொழிபெயர்த்து விளக்குவதில், 'இன்ப உலகம் அங்கே!' என்பதை வலியுறுத்தி 'இங்கே எல்லாம் துன்பமயம்' என்று காட்டுவதில்தான் தங்கள் அறிவாற்றல் முழுவதையும் ஈடுபடுத்தியுள்ளனர்.

இன்பத்தை நாடி அலமரும் உலகம் இன்பம் காணாததற்குரிய காரணம் யாது? இன்பமூட்ட விரும்பும் கலைஞர், கவிஞர் இன்ப நம்பிக்கையூட்ட முடியாதது எதனால்? இன்ப உலகின் புதைமெய்மையைக் காட்டுவதாகக்கூறும் சமயவாணர் இன்ப உலகைத் தாமும் காணாமல், பிறரையும் காணவொட்டாமல், வாயிலுக்குத் திரையிட்டு அதைத் தடுத்துக் காவல் காத்து நிற்பானேன்? இன்ப உருவினனான கடவுளைக் காணத் துடிக்கும் மக்கள், அதைக் காட்டவோ காணவோ ஆற்றலற்ற, காணும் விருப்பங்கூட இல்லாத, இந்தக் கண் மறைக்கும் குருடர்களை நம்பி ஏமாறுவானேன்?

இன்பத்தை நாடும் மக்கள், அறிஞர், சமயவாணர் —ஏன், கலைஞர்கூட—பெரும்பாலும் இன்பத்துக்குரிய கருவிகளை அல்லது கருவிகளில் ஒன்றை அல்லது கருவிகள் சில பலவற்றைத் தேடிப் பெறுவதிலேயே தம் வாழ்நாள் முழுவதும் வீணாக்கிவிடுகின்றனர். அது மட்டுமோ? அந்தக் கருவிகளைப் பெற்றபின் கூட அவர்கள் இன்பத்தைப் பெற அவற்றைப் பயன்படுத்துவதில்லை. மேலும் மேலும் கருவிகளைப் பெருக்குவதிலேயே மீந்த நாட்களையும் கழித்து உழல்வர். ஏனெனில் இன்பக் கருவிகளையே அவர்கள் இன்பமாகக் கருதி அமைகின்றனர்.

நகருக்குச் செல்லக் குறுக்குவழி தேடிப் புறப்பட்ட ஒருவன் அக் குறுக்கு வழியில் நடுவே ஒரு திடலில் முன்னும் பின்னும் ஓடி நடை பழகினால் பயணம் என்ன ஆகும்? அந்த நிலையையே இன்பவேடர் பலர் இன்பத் தேட்டம் அடைகின்றது.

பண்பு நாடிக் கருவி பெருக்கி அவற்றை மினுக்கு பவன் செயலைத் தாயினத் தமிழ்ப் புலவர் திலகமாகிய ஒளவையார் பாடலொன்று அழகு நயம்பட நமக்குச் சித்தரித்துக் காட்டுகிறது.

மூவரசருக்கும் அச்சம் உண்டு பண்ணத்தக்க வீரனாக இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் தகடூர் ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் முடிசூடா மன்னன் விளங்கினான். அவன் தலைநகரான தகடூர் தற்காலச் சேலம் மாவட்டத்திலுள்ள தருமபுரியே எனக் கருதப்படுகிறது. ஒளவையார் அவன் அவைக் களப் புலவராய் விளங்கினார். காஞ்சியிலிருந்து தொண்டை நாடாண்ட தலைவன் தொண்டைமான் தகடூரை எதிர்த்து எளிதில் வெல்லலாம் என்று மனப் பால் குடித்து வந்தான். அவன் எதிர்ப்பை அதியமான் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவன் நட்பு விரும்பத் தக்கது என்று கருதினான். ஆகவே இவ் வெண்ணத்தை மாற்றி அவன் நன்மதிப்பைப் பெற்று வருமாறு அதியமான் ஒளவையாரைத் தன் தூதுவராக அனுப்பினான்.

கவிதையஞ் செல்வியாகிய ஒளவையாரைத் தொண்டைமான் தக்க மதிப்புடனேயே வரவேற்றுப் பாராட்டினான். ஆனால் அதியமானை விடத் தன் ஆற்றல் எவ்வளவு பெரிது என்று காட்டும் எண்ணத்துடன் அவன் அவரைத் தன் படைக்கலக் கொட்டிலுக்கு இட்டுச் சென்றான். பாரித் தகன்ற அக்கொட்டிலின் வீறமைந்த தோற்றமும் தொழிலாரவாரமும் உண்மை யிலேயே எவரையும் மலைக்கச் செய்வதா யிருந்தது. வினைமுற்றி நெய் பூசப் பெற்றுப் பளபளப்பான வேல்கள் ஒரு வரிசையிலும், ஈட்டிகள் மற்றொரு வரிசையிலும், கேடயங்கள் பரிசைகளின் அடுக்குகள் மற்றொரு புறமும் பரந்து கிடந்தன. குவியல் குவியலாய் வில், வாள் ஆகியவை ஆயிரக்கணக்கிலும், அம்புத் திரள்கள் நூறுயிரக் கணக்கிலும், வாளுறைகள், அம்புக்கூடுகள், நாண்கள் ஆயிரக் கணக்கிலும், கொத்துக் கொத்தாக எங்கும் காணப்பட்டன. கவசங்கள், தலையணி,

காலணிகள் வீரர்களேயே கண்முன் கொண்டு வந்து உறுப்பு உறுப்பாகக் காட்டுபவைபோல அச்சந் தந்தன. ஔவையார் அமைந்த புன்முறுவலுடன் இத்தனையையும் வாய் பேசாது சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

'எம் வீர ஆற்றலைப்பற்றி இப்போது உம் எண்ணமென்ன, புலவர் திலகமே!' என்று இறுமாந்து கேட்டான் தொண்டைமான்.

அறிவினுச்சியில் கலைநட மாடிய நங்கையின் மறுமொழியே புறப்பாடல் ஒன்றின் (95) வடிவமாக நமக்கு வந்தெட்டியுள்ளது.

**இவ்வே,**
**பீலி அணிந்து, மாலைசூட்டி,**
**கண் திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து**
**கடியுடை வியன் நகரவ்வே!**
**அவ்வே,**
**பகைவர்க்குத்தி, கோடு நுதி சிதைந்து**
**கொல் துறைக் குற்றில, மாதோ! என்றும்......**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல் எம் கோமான் வைந் நுதி வேலே!'**

"அரசே! உங்கள் வேலுக்கு எதுவும் ஈடு வருமா? அது கொல்லன் செய்து தந்தபடியே நெய்பூசி இங்கே அழகாக இருக்கிறது. அதற்கு நீங்கள் மயிலின் இறகு சூட்டி, காவலையுடைய நகரின் கோட்டையில் கோயில் கட்டிவைத்து, நன்றாகத்தான் பூசை செய்கிறீர்கள். ஆனால் எங்கள் அரசன் அதியமான் வேல்களோ போர்க்களத்தில் பகைவர்களின் படையணிகளைத் தாக்கிக் குத்துண்டு முனை முறிந்தும், காம்பு ஒடிந்தும், குருதிக்கறை பற்றித் துருவேறியும் போயின. இத்தகைய அழகான கொட்டிற் கூடம் கூட அவன் கட்டவில்லை. கொல்லர்களின் சிறு பட்டறைகளிலேயே சிந்திச் சிதறி அவை பழுது பார்ப்பதற்காகக் கிடக்கின்றன. மேலும் அவன் அரச மதிப்புப் பெருதவன். எளியோராகிய

எங்களை உறவினர்களாகக் கொண்டு, உள்ளபோது சிறந்தவை எல்லாவற்றையும் எங்களுக்குக் கொடுத்து, இல்லாதபோது அவ்வில்லாக் குறையையும் எங்களுடன் சரிசமமாக இருந்து பங்கிட்டு உண்பவன்!'' என்றார் செந்நாப் புலமையார்.

தொண்டைமான் புலவர் திலகத்தின் இந்த நயமிக்க நாவீற்றின்முன் தலை குனிந்து வெட்கினான். அதியமான் வீரத்தை மட்டுமின்றி, இத்தகைய நற்புலவராதரவையும் மதித்து அவருடன் நட்பாடினான்.

'வீரம் வேலில் இல்லை, அதைக் கையாளும் வீரன் கையிலும் உள்ளத்திலும்தான் உள்ளன'—கலையார் அணங்கின் பாடல் காட்டுவது இதைமட்டு மன்று! புலவர், எளியோர் திறத்தில் பயன்படும் வீரமே சிறப்புடைய வீரம் என்பதையும் அவர் நமக்கு நன்கு எடுத்து விளக்குகிறார்.

வீரப் பண்பின் செய்தியே இன்பப் பண்புக்கும் பொருந்துவது ஆகும். இன்பப் பொருள்களாகக் கவிஞர் கூறுபவைகள் இன்பம் தரத்தக்க இன்பக் கருவிகள் மட்டுமே. அவை எப்போதும் எல்லோருக்கும் எல்லாச் சூழல்களிலும் இன்பம் தருபவை அல்ல.

தென்றல் இன்பம் தருவது. ஆனால் தென்றலே இன்பம் அன்று. நோயாளிக்கு அது இன்பம் தரமாட்டாது. துன்பத்தால் வேகும் உள்ளங்களுக்கு அது ஆறுதல் கூட அளிக்க முடியாது.

நிலவொளி இன்பத்துக்கு உவமையாகப் பாடப்படுவது. ஆனால் அதைப் பாடும் கவிஞரே அதைப் பிரியாத் துணைவருக்கு இன்பமாகவும், பிரிவுற்றவருக்குத் துன்பமாகவும் வருணிக்கின்றனர். இன்பம் பெருக்கும் கருவியாய் அது இலங்குவது போலவே, துன்பம் பெருக்கும் கருவியாகவும் அது இயங்குகின்றது. மேலும் பிரிவுற்றவராவது பிரிவு அகன்றபின் அதனால் இன்பமடைதல் கூடும். வாழ வகையற்று வறுமையில் உழைப்பவர்களுக்கு நிலவோ, நிலவின் கவிதையோ

எத்தகைய இன்பமும் ஆறுதலும் தரமாட்டா. அவை அவர்கள் வாழ்வைக் கேலி செய்பவையாக மட்டுமே அமையவல்லன.

கிளர்ச்சிதரும் எழுவானின் எழில், விழுவானின் பண்ணிசைக்கும் வண்ண அழகு, மலர்களின் மாயக் கவர்ச்சி—இவை யாவும் காண்பவன் கண்ணெளிக்கும் உள்ளப் பண்புக்கும் வாழ்க்கைச் சூழலுக்கும் ஏற்ற அளவில்தான் இன்பம் தரமுடியும். அத்துடன் இன்பந் தரும் இப்பண்புகளைச் சூழலிலோ, புறஉலகிலோ தேடிக் காண்பதும் முடியாத காரியம். அவற்றை நுகரும் பண்பு செல்வத்தில் இல்லை—அவற்றை மறைத்தே செல்வர் மாடமாளிகை கட்டி வளைக்கப்பட்ட கோட்டை நகர் களுக்குள்ளே வாழ்கிருர்கள். அவற்றைக் காண, எண்ண நேரமில்லாமல் அவர்கள் வாழ்வில் பகலும் இரவும் வேறு முயற்சிகளால், கவலைகளால், அவாக் களால் நிரப்பப்பட்டு வருகின்றன. அதே சமயம் அப் பண்பு செல்வத்துக்கு அலந்த ஏழைகளிடமும் இல்லை. இரு நிலைக்கும் இடைப்பட்ட கவிதை யுணர்வுடைய ஒருசிலர் தம் இன்ப நாட்டத்தின் ஏமாற்றங்களால் வரும் கவலைகளிடையே ஒரு சிறு ஆறுதலாகத்தான் அவற்றை அவ்வப்போது வரவேற்கின்றனர். அவர்களிலும் சில ராக, சில சமயம் தாம் நுகராது நுகர்பவருக்கு உழைக் கும் தொழிலாளராக, மிகமிகச் சிலரே அவற்றைப் படைத்தளிக்கின்றனர்.

புறப்பொருள்கள் இன்பங்களோ, இன்பப் பொருள் களோ கூட அல்ல; இன்பக் கருவிகளே. இவ்வுண் மையை மேற்காட்டிய சான்றுகள் தெளிவுபடுத்து கின்றன. இக்கருவிகளும் அவற்றைக் கைக்கொள்பவர் களுக்கு எப்போதும் இன்பம் தருவதில்லை. ஏனெனில் அவை இன்பத்துக்கு மட்டுமன்றித் துன்பத்துக்கும் கருவிகளாய் உள்ளன. இன்ப நோக்கி அவற்றைப் பயன்படுத்தவேண்டுமானால், பயன்படுத்துபவர் இன்ப உணர்வும், இன்ப நாட்டமும் உடையவரா யிருத்தல் வேண்டும். இன்பக் கருவியே துன்பமும், துன்பக்

கருவியே இன்பமும் தருவதறிந்து, அக்கருவிகள் மூலமே துன்பத்தை இன்பமாக மாற்றும் இரசவாதம் அறிந்தவரா யிருத்தல்வேண்டும். இன்பம் துன்பமாகா மல் தடுக்கும் சஞ்சீவியையும் அவர்கள் கண்டுணர வேண்டும். இந்த இன்பத்தை இன்பத்தின்மேல் இன்பமாக, எல்லையற்று வளரும் நீடின்பமாக வளர்க் கும் சிந்தாமணியையும், அவர்கள் முனைந்து கைப்பற்ற வேண்டும்.

இந்த இரசவாதம், இந்தச் சஞ்சீவி, இந்தச் சிந்தா மணி ஆகிய மூன்றையுமே திருவள்ளுவர் திருக்குறள் என்ற முப்பாலமிழ்தமாக நமக்குத் தருகிறார். அறம், பொருள், இன்பம் என்ற மூன்று சொற்களும் இரசவாத மாக, சஞ்சீவியாக, சிந்தாமணியாக அவர் நமக்குத் தரும் மூன்று இன்பக் குளிகைகளின் பெயர்களே யாகும்.

வள்ளுவர் வழி நின்று அவர் தந்த மாய இன்பத் தின் மறைதிறவை, மெய்யின்பத்தை, இன்பத்தின் இன்பத்தைத் தேடுவோமாக.

## 6. உயிரின் மறை திறவு

**உ**யிரின் பண்பு யாது?

ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனுர் உயிரின் பண்பைப் புலனறிவிலேயே கண்டார். உயிரின் வளர்ச்சியையும் அவர் புலனறிவின் வளர்ச்சியாகவே கொண்டார். ஓரறிவுயிரிலிருந்து ஐயறிவுயிர் கடந்து அவ்வளர்ச்சியைப் படிப்படியாகக் காட்டினுர். அக அறிவாகிய பகுத்தறிவை அவர் ஆரும் அறிவு என்று அழைத்தார். ஐயறிவுடன் இந்த ஆரும் அறிவும் உடைய மனிதனேடு உயிரின் வளர்ச்சி முதிர்ச்சியுற்று முழுநிறைவு எய்துகிறதென்று அவர் கருதினுர்.

உயிர்நூலார் உயிரின வகைகளின் தனிப்பண்பு வேறுபாடுகளை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பொது உயிர்க் கூறுகள் காண முயன்றுள்ளனர். ஆனல், தொடக்க உயிரினத்திலிருந்து வளர்ந்துவரும் அக வளர்ச்சியைத் தொல்காப்பியனுர் கண்டவாறு அவர்கள் காணவில்லை. ஏனெனில் புறக்கூறுகளிலேயே அவர்கள் கருத்துச் செலுத்தினர்.

உயிர்ப்பு—மூச்சு உட்கொள்ளல், வெளியிடல்; உணவு—உண்பொருள் உட்கொள்ளல், செரிமானம் செய்தல், கழிவு நீக்கல்; குருதியோட்டம், குருதியின் வெப்பதட்ப நிலை; வளர்ச்சி, தளர்ச்சி; இனப்பெருக்கம் ஆகியவற்றையே அவர்கள் உயிர்ப்பண்பின் கூறுகளாக விளக்கினர்.

தொல்காப்பியனுர் கருத்துச் சென்ற வழியிலோ, உயிர் நூலார் கருத்துச் சென்றவழியிலோ, சமயவாணர்

கருத்துப் பொதுவாகச் செல்லவில்லை. ஆனால் இரு சாராரும் கவனிக்காத ஒன்றை அவர்கள் முனைப்பாகச் சுட்டிக் காட்டினர். அதுவே பிறப்பு, இறப்பு என்ற உயிரின் தொடக்க இறுதி நிலைகளின் கூறு.

முத்திறத்தவரும் காணாத, உயிர் முக்கியத்துவத்தில் அவற்றிலும் குறையாத ஓர் உயிர்ப்பண்பைத் திருவள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதுவே பிறப்பு, இறப்பு என்பவற்றுடன் நெருங்கிய உயிர்த் தொடர்புடைய விழிப்பு—உறக்கம் ஆகிய இருதிசைப்பண்பு ஆகும்.

**'உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு'**

பொய்யாமொழியின் இவ் வாய்மொழியைப் பலர் அழகிய உவமையணியாக மட்டும் கொள்கின்றனர். ஆனால் 'போலும்' என்ற சொல் இங்கே உவமை நவிற்சி யணியாகப் பயன்படுத்தப் படவில்லை. வள்ளுவர் குறளில் மட்டுமன்றி, பண்டைத் தமிழர் கவிதை மரபெங்கணும் காணப்படும் முறைப்படி, அது தன்மை நவிற்சி யணியாகவே வழங்கப்பட்டுள்ளது. உறக்கம், சாக்காடு ஆகியவற்றின் தன்மைகளையும் தொடர்புகளையும் நாம் உணருந்தோறும், உயிர் வளர்ச்சிபற்றிய பல மெய்ம்மைகள் நமக்குப் புதிது புதிதாக விளங்கும். ஏனெனில் உறக்க நிலைகளில் மிகப் பல வகைகள் உண்டு.

நாள்தோறும் கிட்டத்தட்ட ஒருபாதி நேரம் உறங்காத உயிர்கள் இல்லை. இதுவே உயிர்களின் **பொதுத் துயில் நிலை.** ஆனால் சில உயிர்கள் இயற்கைப் பருவங்களுக்கேற்ப **நீள் துயில்** கொள்ளும். பருவ மாறுபாடுகளின் மாறுபாடு கடந்து நீடித்து வாழ இது அவற்றுக்கு உதவுகிறது.

வேறு சில உயிர்கள் தத்தம் வாழ்க்கைப் பருவங்களுக்கிடையே **செறிதுயில்** கொள்வது உண்டு. இத்தகைய உயிர்களை நாம் இருபிறப்புயிர்கள் என்று கூறு

கிறோம். ஏனெனில் இச்செறிதுயில் உண்மையில் ஒருயிரின் வாழ்வில் மட்டும் நிகழும் ஒன்றல்ல. அவ்வுயிரினத்தின் மாள்வு கடந்து அது போராடிய ஒரு நெடுநீள் போராட்ட ஊழியின் சின்னமாகவே இச்செறி துயில் இனவாழ்வில் நிலைத்துள்ளது. இயற்கையின் எல்லையற்ற காலப் பெருவெளியில் இவ்வினங்களுடன் வாழ்ந்த மற்ற உயிரினங்களெல்லாம் அழிந்தொழிவ தற்குக் காரணமான ஒரு பெரும் பருவமாறுதலை, சூழ்நிலை மாறுதலை, இத்தகைய உயிரினங்கள் மட்டுமே இச்செறிதுயில் மூலம் எதிர்த்துச் சமாளித்து, மாண்டொழிந்த ஒரு பழைய உயிரின ஊழி கடந்து புத்தம் புதிய உயிரின ஊழியிலும் நீடித்து வாழ்ந்துள்ளன. அந்த ஈரூழி, ஈருலக வாழ்வின் சின்னமாகவே அவை இருபிறப் புயிர்களாய் நம் உயிரூழியில் இயங்கு கின்றன.

பெரும்பாலான நடுப்படி உயர்படி உயிரினங்களில் நான்காவதாகவும் ஒரு துயில் நிலை உண்டு. அது தலைமுறைகளுக்கிடையே நிகழ்வது. இதையே நடுப்படி உயிரினங்களில் முட்டை நிலை என்றும், உயர்படி உயிரினங்களில் கருநிலை என்றும் கூறுகிறோம். இதுவும் மெய்ம்மையில் செறிதுயில் நிலையோடு ஒப்பானதே. ஆனால் செறிதுயில் ஒரு தனி வகை உயிரினத்தின் ஓர் ஊழியின் செறிவு மட்டுமே. முட்டை நிலை, கரு நிலை ஆகிய இவையோ அவ்வவ் இன வகை அடைந்த பொது உயிரின வளர்ச்சி முழுவதையும் தன்னகம் செறியக்கொண்ட நிலை ஆகும். மனித இனம் அன்னையின் கருவில் கழிக்கும் பத்து மாதங்கள் இங்ஙனம் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிராக மனித இனம் அடைந்துள்ள உயிரின வளர்ச்சிப் பேரூழியான பன்னூறாயிரங்கோடி ஆண்டு வளர்ச்சியின் மணிச்செறிவே யாகும். இக்காரணங்களால் நாம் இதனை **மணித்துயில் நிலை** என்று கூறலாம்.

திருவள்ளுவர் இவ்வெல்லாக் கூறுகளையும் உய்த்துணர்ந்திருந்தார் என்று கருத இடமுண்டு. அவரது

மற்ெறாரு குறட்பா இத்திசையில் நம்மைச் சிந்திக்க வைப்பதாய் அமைந்துள்ளது.

**'குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு'**

இதுவே அத்தெய்வத் திருவாசகம். குடம்பை என்பதற்குப் பரிமேலழகர் முட்டை என்று பொருளுரைத்தார். ஆனால், மணக்குடவர் அதற்குக் கூடு என்றே பொருள் கொண்டார். திருவள்ளுவர் இத் தமிழ்ச் சொல்லின் இரு பொருள்களையுமே மனத்துட் கொண்டு, உடலுக்கு முட்டையை உவமையாகவும், முட்டையைக் கூட்டுக்கு உவமையாகவும் உவமை மேல் உவமையான இரட்டி உவமையாகவே குறித்தனரோ என்று நாம் ஐயுறவேண்டி யிருக்கிறது. அவ்வாறு கொண்டால், அக்கருத்துத் திருவளர்த்தான் கதை தரும் 'வெங்காய உருவத்தையே' நமக்கு நினைவூட்ட வல்லது.

உயிரும் உடம்பும் வேறுவேறு? ஒன்று?
உலக அறிஞர் என்ன கருதினர், கருதுகின்றனர்?
திருவள்ளுவர் என்ன கருதினர், என்ன கருதியிருக்கக்கூடும்?

உடல் உயிரல்ல—உடல் வேறு, உயிர் வேறு என்பதையே சமயவாணர், சிறப்பாகச் சமயம் சார்ந்த அறிஞர் பெரிதும் வலியுறுத்தினர். ஆனால் வேறு என்று கூறிய அறிஞர் அவற்றின் தொடர்பு, உயிரின் இயல்பு ஆகியவற்றைப்பற்றி இதற்கு மேல் விளக்கம் தர முடியவில்லை.

உயிரியல்பை உணர முடியாதவர்கள் கடவுள் இயல்பை ஒருபோதும் உணர முடியாது. ஏனெனில் உடல் காணப்படு பொருள்; உயிர் காணப்படாப் பொருளாயினும், உடலிலே அதன் உயிர்ச்செயலை முனைப்பாகக் காண்கிறோம். கடவுளோ காணப்படாதவர் மட்டுமல்லர். உயிரின் செயலுருவான உடல் போன்ற ஒரு முனைப்பான செயற்களம் அற்றவர். உயிர் இயல்பைக்

காணாத சமயவாணர், உயிர், கடவுள் ஆகிய இரண்டின் இயல்பு வகையிலும் பெரும்பாலும் கற்பனை யுலகிலேயே உலவுவதன் காரணம் இதுவே.

சமயவாணர் மட்டுமின்றி, உயிர் நூலாரும் இயல் நூலாரும் பொதுவாக, அகப்பண்பாகிய உயிரில் கருத்துச் செலுத்தியதே இல்லை. ஆனால் உயிர்நூலார் உடலின் உயிர்ப்பண்பை நன்கு அலசி ஆராய்ந்துள்ளனர். அதனடிப்படையாக உயிரின் இயல்புபற்றிச் சிந்தித்த மெய்விளக்க அறிஞர் பலர் உண்டு. இயற்கையின் உள்ளீடாக இயங்கும் வெப்பம், காந்த ஆற்றல், மின் ஆற்றல் முதலிய ஆற்றல்கள் போல, உடலைக் களமாகக்கொண்டு இவற்றினும் நுண்ணிதாக, இன்றளவும் இயல் நூலறிவால் அறியப்படாத முறையில் இயங்கும் ஒரு நுண்ணாற்றலே உயிர் என்று அவர்கள் கருதுகின்றனர்.

உடல், இயற்கை ஆகிய இரண்டிலும் பொருள், ஆற்றல் என்ற இருதிசைக் கூறுகள் உண்டு. இயல் நூலார் இவற்றைக் காண்பதுடன் நில்லாது, ஒன்று மற்றொன்றாக மாறக்கூடும் என்றும் செயல் தேர்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர். இவற்றின் பயனாக உலகிலும் சரி, இயல் ஆராய்ச்சித் துறையிலும் சரி, தொடக்கத்திலிருந்து நிலவிவரும் உயிர் உலகுபற்றிய கோட்பாட்டிலே ஒரு புரட்சி இன்று ஏற்பட்டு வருகிறது. இயற்கை, உயிர்களின் உடல்கள் ஆகியவற்றின் அடிப்படை பருப் பொருளே என்ற பழங் கோட்பாடு சரிந்துள்ளது. ஆற்றல், பொருள் இரண்டும் ஒரே பொருண்மையின் பொருள் நிலை, இயக்க நிலை ஆகிய இரு கூறுகளே என்ற கொள்கையும், இயக்க ஆற்றலின் ஒரு தோற்றமே பொருள் என்ற கொள்கையும் இதனால் வலிவுற்று வருகின்றன. எனவே உயிரும் ஒரு தனி இயக்க ஆற்றலே என்ற கொள்கை உயர்படி அறிவுலகிலே இன்று நிலவுகின்றது.

உடலுக்கும் உயிருக்கும், அதுபோல இயற்கையில் பொருளுக்கும் ஆற்றலுக்கும் உள்ள தொடர்பு ஒரு

தன்மையானதே. ஆனால் உடலுயிருக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை நுனித்தறிந்து விளக்குதல் எளிதன்று. அவ்வாறு ஓரளவு விளக்கிய தற்கால அறிஞர் அறிவுலகின் இக்கால 'ஊழிப்பேரறிஞ'ரான ஐன்ஸ்டீனே ஆவர். அவர் விளக்கம் சமயவாணர் பலர் சுட்டிக் காட்டியுள்ள 'பிண்டம்', 'அண்டம்' என்ற பாகுபாட்டின் புத்தறிவு விளக்கமேயாகும். 'எல்லையற்ற இயற்கையின் எல்லையுற்ற ஒரு சிறு படிவமே உயிர்' என்பதே அது. இரண்டின் சரி சம ஆற்றல் நிலையே உயிரியக்கம்; அதுவே உயிருக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு ஆகும்.

அனைத்துலகை இயக்கும் அனைத்துயிராகவே கடவுள் கருதப்படுகிறார். ஐன்ஸ்டீன் உயிர் இயல்பின் கோட்பாடு சமய அறிஞரின் இம்முடிவுக்குப் புது விளக்கம் தந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

உடலின் ஆற்றலே உயிரானால், உடலுக்குள் உயிராக அந்த உயிராற்றல் உள் நோக்கிச் செறிவுற்றுச் செல்வது என்பது தெளிவு. வளர்ச்சிக்கு உதவும் கருவிகளாகப் புறமும், வளர்ச்சி தூண்டும் ஆற்றலாக அகமும் விளங்குகின்றன. ஆனால் புறம் எது, அகம் எது; புறம் எங்கு முடிகிறது, அகம் எங்கு தொடங்குகிறது என்று பிரித்து யாராலும் காட்டமுடியாது. உடம்புக்குள் உடம்பாக உயிர்ப்பண்பு உடற்கூறுகளவே உள்நோக்கி நுணுகிப் பெருகிக்கொண்டு போகிறது. தோலைவிடத் தசை, தசையைவிடக் குருதி, குருதியைவிட நாடி நரம்புகள், நாடி நரம்புகளைவிட எலும்புக்கூடு, எலும்புக் கூட்டைவிட உள் எலும்பு அல்லது உள் நாடி என அது செறிவுப் பெருக்கமுற்றுக் கொண்டே செல்லும். இப் போக்கை வெங்காய உருவகம் விளக்குவது காணலாம்.

உயிர் உடலுக்குப் புறம்பாக உயிரினம் வகுத்துக் கொள்ளும் புறத்தோடே கூடு. பறவை கட்டும் கூடு போன்றதே மனிதர்கட்டும் வீடும், நாடு நகர், ஊர், சமுதாயம், சமயம், மொழி, கலை இலக்கியம் போன்றவையும்! இக்கூடுகள் அகப்பண்பு நோக்கி உயர்வதனாலேயே மனிதன் அமைத்த பண்புக் கூடுகளாகிய

மொழியும் கலையும் இயல் நூல்களும் புறப்பண்புகளாக நமக்குத் தோன்றுவதில்லை. அத்துடன் உடலின் அக உயிர்ப்பண்புகளைக் கூடத் தாண்டி உயிரின் இயல்பை அறியும் வகையில் இவை மனிதனை இட்டுச் சென்று வருகின்றன. வள்ளுவர் இவ்வறிவில் நெடுந்தொலை—ஒரு வேளை நம்மை—நம் காலத்தை—நம் சமயவாணர் மட்டுமின்றி நம் இயல் நூலார், மெய்விளக்க நூலார்களைத் தாண்டி—தற்கால உலகின் அறிவுதாண்டிச் சென்றிருத்தல்கூடும். அவர் உவமைகள் இதைச் சுட்டிக் காட்டுகின்றன.

'உயிரின் நிலை புறஉடல் நீத்து அகஉடல், அது நீத்து இன்னும் அகச்செறிவுடைய உடல் என்று செல்லும் இயல்பேயாகும்' என்பதே நாம் மேலே குறிப்பிட்ட குறட்பாவின் சிந்தனைப் பொருள் ஆகும். அது ஒரு கூடு, கூடு கடந்த உடல், உடல் கடந்த உள்ளுடல்போல அகநோக்கிச் செல்வது என்பதே 'குடம்பை' என்ற சொல்லின் குறிப்பு ஆகும்.

உயிரின் பண்பாக, தொல்காப்பியர், இயல்நூலார். சமயவாணர், திருவள்ளுவர் ஆகிய அனைவரும் காட்டிய கூறுகளையும் சேர்த்தால், அவையனைத்தும் ஒரு பெரும் பட்டியலாகவே அமைவன. இத்தனையும் உயிரின் பண்புகளேயானாலும், அனைத்தும் உயிரின் உயிர்ப்பண்புகள் ஆகமுடியாது. இவ்வெல்லாக் கூறுகளையும் உள்ளடக்கி, அவற்றை இயக்கும் பண்பே அதன் உயிர்ப்பண்பு ஆகமுடியும். அது தொல்காப்பியர் சுட்டிக் காட்டிய, இயல் நூலார் கண்டுவருகிற வளர்ச்சிப் பண்பேயாகும்.

உணவு, குருதியோட்டம், உயிர்ப்பு, குருதியின் தட்ப வெப்ப நிலை ஆகிய உயிர் இயக்கக் கூறுகள் வளர்ச்சிக்கு உதவும் கருவிகள் அல்லது தளர்ச்சியைத் தடுத்தாளும் பண்புகளன்றி வேறன்று. தளர்ச்சியோ வளர்ச்சியின் மறிநிலை மட்டும்தான். அதுவும் வளர்ச்சியின் பண்பை ஏற்றே படிப்படியாக நிகழ்கிறது. அத்துடன் தளர்ச்சி என்பது உண்மையில் வளர்ச்சி தடைப்

பட்டதன் அறிகுறியன்றி வேறன்று. வளர்ச்சி தடைப் பட்டால் உயிர்ப் பண்பும் தடைப்பட்டு விடுகிறது. அது மாளவே வேண்டும். ஆனால் மாற்றம் படிப்படியாய் நிகழ்வதால், அது தளர்ச்சியாகிறது.

உயிரின் பண்புகளில் சமயவாணர்களும் பொதுமக் களும் பிறப்புக்கும் இறப்புக்குமே முதன்மை நிலை தந் துள்ளனர். ஆனால் பிறப்பும் இறப்பும் உயிரின் உயிர்ப் பண்புகளல்ல. மேலே நாம் காட்டிய முதல் குறட்பாவில் வள்ளுவர் வலியுறுத்தியுள்ள உண்மை இதுவே. ‘இறப்பு என்பது உயிரின் முடிவு அன்று. பிறப்பு என்பதும் அதன் தொடக்கம் அன்று. இரண்டும் உயிரின் எல்லை யற்ற பெருவாழ்வில் அடுத்தடுத்து நிகழும், அடிக்கடி நிகழும், இரு சிறு பொது இடைநிகழ்ச்சிகளே. அவை உண்மையில் நாள்தோறும் நாம் உறங்கும் உறக்கத்தை யும், உறங்கி விழிக்கும் விழிப்பையும் போன்றவையே’ என்று அக்குறட்பாவுக்கு நாம் மெய்யுரை காண்டல் தகும்.

சிலர் இவ்விளக்கத்தை ஓர் அழகு வருணனையாக ஏற்று, ஒரு சிறு மறுப்புத் திருத்தமும் சுட்டிக்காட்டக் கூடும். பிறப்பும் இறப்பும் இன உயிரிலேயே இரு அலை நிகழ்ச்சிகள் ஆகக்கூடும். எனினும் தனி உயிர் வாழ் வாகிய அந்த அலைக்குப் பிறப்பும் இறப்புமே தொடக்க இறுதிகளாகும் என்பர். ஆனால், இன வாழ்வின் அலை என்பது ஒரு தலைமுறையேயன்றி ஒரு தனி உயிரின் வாழ்வன்று. ஏனெனில் இனவாழ்வின் சிற்றெல்லை தனி உயிரல்ல, குடும்பமே. குடும்பத்தில் தாயும் தந்தையும் இருதனி உயிர்கள். பிறக்கும் உயிர்கள் தாயின் பிள்ளை யாகவோ, தந்தையின் பிள்ளையாகவோ பிறப்பதில்லை. தாய் தந்தையர் அல்லது குடும்பத்துக்குரிய பிள்ளை களாகவே பிறக்கின்றனர். பிள்ளைகளின் தொகையும் தாய் தந்தையராகிய இருவரின் தொகையாக வேண்டு மென்றில்லை. அதில் குறையலாம். கூடலாம். ஆகவே தலைமுறை தலைமுறையாகத் தாய் தந்தையர் திருமணத் திலிருந்து ஒவ்வொரு பிள்ளையின் திருமணம் வரையிலும் வாழ்வுப்படி ஒவ்வோர் அலையாகச் செல்கிறது. ஒரு

குடும்பத் தலைமுறையிலேயே இவ்வலைகள் பலவாகி, பல குடும்ப அலைகளுடன் அளாவிப் பல குடும்பங்களையும் குடும்ப அலைகளையும் உண்டுபண்ணுகின்றன. இவ்வாறு இனவாழ்வின் அலைகள் ஒரே தொடர் அலைத்தொகுதி அல்ல, கிளைத்துப் பல்கி இணைந்து செல்லும் அலைத் தொகுதிகள் அல்லது அலைப் பின்னல்களேயாகும். பின்னல்களின் கண்ணிகள் இறப்பும் பிறப்புமல்ல, பழய மணத்தொடர்பும் புதுமணத் தொடர்புகளுமே. தலைமுறை என்பது இங்ஙனம் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயுள்ள அலையன்று. ஒரு தலைமுறை மண வாழ்விலிருந்து மறுதலைமுறை மணவாழ்வு வரைக்குமுள்ள அலை அல்லது அலைகளேயாகும்.

திருவள்ளுவர் உறக்க உவமையின் முழுநிறை பொருத்தம் இப்போது ஓரளவு விளக்கமடைகிறது. ஒருவன் வாழ்நாளில் உறக்கம் விழிப்பு நிகழ்வது எப்படியோ அப்படித்தான் இனவாழ்வில் மட்டுமன்றித் தனிமனிதன் வாழ்விலும்கூடப் பிறப்பு இறப்புக்கள் நிகழ்கின்றன. இறப்பும் பிறப்பும் ஒருவன் தலைமுறையின் தொடக்கத்திலும் இறுதியிலும் நிகழவில்லை. இரண்டும் அவன் கண் காண, அவன் தலைமுறையிலேயே நிகழ்கின்றன. தான் பிறப்பதைத் தான் அவன் காணவில்லை. தான் இறப்பதைத்தான் அவன் காணமுடியாது. ஆனால் அவன் வாழ்விலேயே அவன் தாய் தந்தையர் வாழ்விறுதிக் குரிய இறப்பு நிகழ்ச்சிகளையும், அவன் பிள்ளைகள் வாழ்வுத் தொடக்கத்துக்குரிய பிறப்பு நிகழ்ச்சிகளையும் அவன் காண்கிறான். அதாவது மனிதன் தன் தனிவாழ்விலேயே தன் தலைமுறைக்குரிய இறப்புக்களையும் பிறப்புக்களையும் ஒருங்கே காண்கிறான். தான் இறந்து உறவினர் அழுவதைக் கனவில் கண்டு வருந்தும் கனவாளன் நிலையே இங்கு மனிதன் நிலை ஆகிறது என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் கனவில்கூட ஒருவன் இறப்பை மட்டுமே காணமுடியும். இங்கோ மனிதன் இறப்பையும் பிறப்பையும் காணமுடிகிறது! திருவள்ளுவர் குறட்பாவில் உறக்க விழிப்புவமை சுட்டிக் காட்டும் அருநயம் இதுவேயாகும்.

உயிரின வளர்ச்சியில் தனி உயிர் வாழ்வு ஒரு முழு அலையாயிருக்கும் நிலை ஒன்று உண்டு. அதுவே தொடக்க நிலை உயிரினங்களான அணு உயிர்களின் நிலை. இங்கே ஒரு தனி உயிரின் வாழ்வே ஒரு தலை முறை. ஒரு தலைமுறை முடிவு அடுத்த தலை முறைப் பிறப்பாய் அமைகிறது. ஏனெனில் இங்கே தனி உயிர் உணவுண்டு தன்னளவில் இருமடங்காகப் பெருத்த கணமே, அது வெடித்து இரண்டு உயிர்கள் ஆகிவிடு கிறது. இரண்டு நான்கு எட்டு என இந்தப் படியிலுள்ள உயிரினங்கள் விரைவில் இரட்டித்துப் பெருகுவதால், நடுப்படி, உயர்படி உயிரினங்களைவிடப் பல்லாயிர மடங்கு விரைவில் அவை இனப் பெருக்கம் உறு கின்றன.

சமயவாணர் கருத்தின்படி நாம் தனி உயிரலை யைத் தொடக்கப்படியில் காண்கிறோம். ஆனால் வியக் கத்தக்க முறையில் இங்கே பிறப்பு, இறப்பு என்ற சொற்களின் பொருள்களே மறைவதையும் நாம் காண் கிறோம். ஏனெனில் இங்கே பழைய தலைமுறை சார்ந்த எந்த உயிரும் இறக்கவில்லை. எந்த உயிரும் பிறக்க வில்லை. உயிரின் உடலே வெடித்து இரண்டு புதிய தலைமுறையின் உயிராகிவிடுகிறது. இதில் ஒன்று இரண்டாகும் புதுமையையும் காண்கிறோம். புதிய உயிர் பழைய உயிரின் உடலே என்பது தெளிவு. சமய வாணர் பலர் கருதியபடி, உயிர் வேறல்ல, உடல் வேறல்ல. அதுபோலவே பொதுமக்கள் கருதுகிறபடி, உயிர் பிறப்புடன் தொடங்குவதல்ல, இறப்புடன் முடிவதுமல்ல. அதுமட்டுமன்று. உயிர் ஒன்று இரண் டாக, சிறிது பெரிதாக, தாழ்வு உயர்வாகப் பெருகிவள ரும் இயல்புயுடையது என்றும் காண்கிறோம்.

தொடக்க உயிரினங்களில் உயிர் பிறப்பதில்லை, இறப்பதில்லை. ஆனால் இனப்பெருக்கம் எல்லையற்றது. ஏனெனில் அவை கூட்டுப் பெருக்கம். (2, 4, 6, 8, 10 என்றபடி) அல்ல, விசைப்பெருக்கம் (2, 4, 8, 16) என்றபடி பெருகுகின்றன. ஆயினும் அவற்றில் தலை முறையின் கால எல்லை மிகவும் சிறிது, ஒரு கணமேயா

கும். உயிரினப்படி வளரும் தோறும் இனப் பெருக்கத்தின் விசை மிகவும் குறைகிறது. ஆனால் தலைமுறையின் கால எல்லை மிகப் பெரிதாகி விடுகிறது. தொடக்க உயிரினத்தில் ஒரு கணமாக இருந்த அது மனித இனத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாக உயர்வுற்று விடுகிறது.

உயிரின வளர்ச்சி தொகை நோக்கியதன்று. தனி உயிர் வாழ்வின் பெருக்கை நோக்கியதன்று. இனத்தலை முறையின் அளவும் இனப்பண்பளவும் நோக்கியதே என்பதை இது விளக்குகிறது.

வள்ளுவர் கண்ட உயிரின் மறைதிறவை நாமும் ஓரளவு உணரவேண்டுமானால், உயிர்ப்பண்பின் வேறு சில கூறுகளிலும் நாம் விளக்கம் காணவேண்டும்.

உயிர் வாழ்வில் வளர்ச்சி, தளர்ச்சி என்ற இரு பகுதிகளை நாம் நடுப்படி, உயர்படிகளிலேயே பார்க்கிறோம். தொடக்கப்படியில் வளர்ச்சி ஒன்றே இடம்பெறுகிறது. நடுப்படி உயர்படிகளில் உணவுத் தொழிலில் செரிமானம், கழிவுநீக்கம் இரண்டும் உண்டு. தொடக்கப்படிகளில் கழிவுநீக்கம் என்ற எதுவும் கிடையாது. நடுப்படி, உயர்படிகளிலேயே பலவகைத் துயில் நிலைகளும் பெருகக் காண்கிறோம். தொடக்கப்படியில் விழிப்பு ஒன்று மட்டுமே இடம்பெறுகிறது.

பிறவாமை, இறவாமை, மலமின்மை, நிறையுணர்வு ஆகிய பண்புகள் கடவுளுக்குரியனவாகக் குறிக்கப்படும் பண்புகளில் சில. இவற்றைத் தொடக்க உயிர்களிலே காண்கிறோம். ஆனால் எங்குமிருத்தல், முற்றறிவுடைமை, தானே தன்னையுணர்தல், எல்லாம் வல்ல தன்மை—இந்தக் கடவுட் பண்புகள் அவற்றில் இல்லை. தொடக்க உயிர்களின் இப்பண்புகளே உயிரின் அடிப்படைத் தன்மைகள் என்பதையும் கடவுட்பண்பை நோக்கியே உயிரினம் வளர்ந்து வருகிறது என்பதையும்; தளர்ச்சி, சாக்காடு, பிறப்பு, உறக்க நிலைகள் என்பவை அக்கடவுட் பண்பை நோக்கிய வளர்ச்சிக்கான கருவிகளாகவே நடுப்படி உயிரி

னங்களாலும் உயர்படி உயிரினங்களாலும் பயன்படுத் தப் பெறுகின்றன என்பதையும் இது சுட்டும்.

தளர்ச்சியும் சாக்காடும் வளர்ச்சிக்கு எதிரான பண்புகள் போலவும், வளர்ச்சியின்பின் நிகழ்பவை போலவும் பொதுவாகத் தோன்றுவது இயல்பு. ஆனால் தளர்ச்சி என்பது விரைந்த வளர்ச்சிக்காக நடுப்படி, உயர்படி உயிரினங்கள் வகுத்துக்கொண்ட ஒரு புது முறையேயன்றி வேறல்ல. இரண்டும் பக்கத்துக்குப் பக்கமாக ஓயாது இயங்குபவை. ஏனெனில் வளர்ச்சி தடைப்பட்டபின் நாம் காணும் தளர்ச்சி, வளர்ச்சிக் காலத்தில் வளர்ச்சியுடன் இணைந்து மறைந்து நின்ற ஒரு பண்பே ஆகும். உறக்க நிலைகளும் அவ்வளர்ச்சிப் பருவத்திலுள்ள செறிந்த தளர்ச்சிக் கூறுகளேயாகும். தளர்ச்சியும் உறக்க நிலையும் இரண்டுமே வளர்ச்சியை இடையிடையே ஊக்கி விரைவுபடுத்தும் இடை ஓய்வுச் செயல்களன்றி வேறல்ல.

தளர்ச்சி என்பது வளர்ச்சிக்கு உதவும் பண்பு என்பதனைத் தாமரை, அல்லி ஆகிய நீர்வாழ் நிலையுயிர்களின் வாழ்வு காட்டுகிறது. இவற்றின் அடித்தண்டு சேற்றினுள் கிழங்கு வடிவில் கிடக்கின்றது. அதன் ஒருபுறம் எப்போதும் தளிர்த்துக் கொண்டே வளர்கிறது. மறுபுறம் சிதைந்தழிந்து கொண்டே இருக்கிறது. இவ்விரு திசை நிகழ்ச்சிகள் இந்த நிலையுயிர்களை (தாவரங்களை) மாளா உயிர்களாக்குவதுடன், உணவு குறைந்துவிட்ட இடத்திலிருந்து புது இடத்துக்கு இட மாறி முன்னேறும் இயங்கும் (சங்கம) உயிர்கள் ஆகவும் செயலாற்றுவிக்கின்றன.

தளர்ச்சி உண்மையில் உணவுத்தொழிலின் கழிவு நீக்கம் போன்றது. கழிவுநீக்கம் உயிர்வளர்ச்சிக்கு வேண்டாத பொருளை ஒழித்தகற்றிப் புது ஆக்கப் பொருளுக்கு வழி வகுக்கிறது. அதுபோல, உயர்படி உயிரினங்களில் தளர்ச்சிப் பருவமே இனவளர்ச்சியில் முன்னர்ப் பயன்பட்டு மேலே தேவைப்படாத பகுதிகளைக் கழிக்கும் பருவமாகும். அத்துடன் பழைய தலைமுறைதன்

வளர்ச்சியில் ஓய்வுற்றுப் புதிய தலைமுறையின் வளர்ச்சிக்கு உதவும் பருவமும் அதுவே ஆகும். ஆனால் வளர்ச்சிப் பருவத்தின் தளர்ச்சிக்கூறு நேரடியாகவே வளர்ச்சிக்கு உதவுகிறது. ஏனெனில் தளர்ச்சிப் பருவத்திலேயே இனத்தின் புது வளர்ச்சிக்குரிய ஆக்கப் பண்புகள் பெருக்கம் அடைகின்றன. இதனை நாம் சிறுதுயில் நிலையிலேயே காணலாம். விழிப்பு நிலையில் உயிர் வளர்ச்சிக்குரிய கருவித் தொழில்களில் முழுதும் ஈடுபடுகிறது. ஆனால் தளர்ச்சியின் கூறுகிய உறக்கநிலையில் வளரவேண்டிய உறுப்புக்களுக்கு உயிர் ஓய்வு தந்து அவற்றை வளர்க்கின்றன. செடி கொடிகளும் உயிரினங்களும் விழிப்பு நிலையில் உண்டு செரித்த உயிர்ப்பொருளைக்கொண்டு, உறக்க நிலையிலேயே வளர்ச்சியுறுகின்றன என்று உயிர்நூலார் தேர்ந்துரைத்துள்ளனர். அதுபோலத் தளர்ச்சியும் இறப்புமே உயிர்த் தொடர்புக்கும் வளர்ச்சிக்கும் வேண்டாதன, ஒவ்வாதன அகற்றி, வேண்டுவன, ஒத்தன, வளம் ஊக்குவன ஆகியவற்றைப் பெருக்குகின்றன.

பொதுநிலைத் துயிலைப்போலவே நீள் துயில், செறி துயில், மணித்துயில் நிலைகளும் உயிரினவகையின் வளர்ச்சிக்கும் உயிரின வளர்ச்சிக்கும் உதவுபவை என்பது தெளிவு. அவை இனவளர்ச்சியின் ஆக்கக் கூறுகளையும் பேரின வளர்ச்சியின் ஆக்கக் கூறுகளையும் உள் நின்று வளர்த்து ஒவ்வொரு தலைமுறைக்கும் **செறிந்த வடிவில்** கொண்டுவந்து சேர்க்கின்றன. இன அடிப்படையின் வேர்ப்பண்புகளை இனத்தின் புத்திளந்தளிர்களுக்குக் கொண்டுசென்று அவற்றின் வளர்ச்சிக்குப் புத்துரமும் புதுத் தூண்டுதலும் அளிக்கின்றன.

வளர்ச்சிப் பருவத்தின் தளர்ச்சிப்பண்பு அல்லது ஓய்வுப் பண்பு உறக்க நிலையானால், தளர்ச்சிப் பருவத்தின் தளர்ச்சிப்பண்பு பிணி, மூப்பு, சாக்காடு, பிறப்பு ஆகியவைகளே. முந்தியவை இனத்தின் பின்னோக்கிய நிலைகள். பிந்தியவைகளோ அதன் முன்னோக்கிய நிலைகள். வரும் தலைமுறையையும் இனத்தின் வருங்

காலத்தையும் பற்றி முதிர்ச்சியுற்ற தலைமுறையினர் சிந்திப்பதற்கு ஓய்வு அளிக்கும் பருவமே மூப்புப் பருவம் என்று மேலே காட்டினோம். ஆனால் பிணி வளர்ச்சிக்கு உதவுவது என்று யாரும் எளிதில் நம்ப மாட்டார்கள். உயிர்வளர்ச்சி நூலார் இதனை நமக்கு விளக்குகின்றனர். பிணி உயர்படி உயிரினங்களின் வாழ்விலேயே தோன்றி வளர்கின்றது. நாகரிகமற்ற இனங்களில் இருப்பதை விட நாகரிக சமுதாயங்களி லேயே பிணி மிகுதி என்பதைக் கண்டு குறை கூறு தவர், ஏளனம் செய்யாதவர் இல்லை. ஆனால் உண்மை யில் இது வளர்ச்சிப் பண்பு மட்டுமல்ல, இன வளர்ச் சியை விரைவுபடுத்தும் வளர்ச்சிப்பண்பேயாகும். வளர்ச்சியின் புதிய தேவைகளுக்கேற்ப, வேண்டா உறுப்பும் பகுதியும் பண்பும் நோய்க்கூறுகள் மூலமே படிப்படியாக மாறுபட்டு, வேண்டிய புதிய உறுப்பு வளர இடம் உண்டாகிறது. இவ்வாறாகவே தவளையும், குரங்கும் உயரின நோக்கி வால் இழந்தன. கீழின விலங்குகளின் முன்கால்கள் மனிதனை நோக்கிக் கைக ளாகவும், பறவைகளை நோக்கிச் சிறகுகளாகவும் பயனும் ஆற்றலும் உருவும் திரிபுற்று மாறின. பால் வேறுபாடற்ற கீழின உயிர்களில் பால் வேறுபாடு தோன்றி வளர்ந்தது. இவையாவும் பிணியுருவில் தோன்றிய வேறுபாடுகளே என்பதன் முழுவிளக்கத்தை டார்வின் போன்ற உயிர் வளர்ச்சி நூலார் தந் துள்ளனர்.

துயில்நிலை, பிணி, மூப்பு ஆகியவற்றைப்போலவே சாக்காடும் பிறப்பும் உயிரின வளர்ச்சி நோக்கிய நற்கூறு களேயாகும். வளர்ச்சி முடிவில் அதாவது கட்டிளமை யில் உயர்தர உயிர்கள் தம் உயிரின் வளர்ச்சிக்குரிய நற் கூறுகளைப் புத்துயிர்களாகப் படைத்து விடுகின்றன. அத்துடன் அவர்கள் தலைமுறை உண்மையில் முடிந்து விடுகிறது. ஆனால் அடுத்த தலைமுறைக்கு உதவுவதற் காகவே அவர்கள் முதுமை வாழ்வு வாழ்கின்றனர். அவர்கள் இறப்பு உண்மையில் வளர்ச்சிப் பண்பு நீங்கிய பகுதியிலும்கூடச் சாறெடுத்து ஈந்து பின்

ஏற்படும் கழிவு நீக்க நிகழ்ச்சியன்றி வேறன்று. மாள்வு மட்டுமன்றி, தளர்ச்சிப் பருவம் முழுவதுமே வருங்கால இனவாழ்வின் வளம் பற்றிக் கனவு காண்பதற்காகவும் அக்கனவுகளை இன உயிர்களுக்கு அளித்து உதவுவதற் காகவும் இனஉயிர் மேற்கொண்ட ஒரு நீண்ட மாலைத் துயில் நிலையேயாகும்.

அறிவு நிலையில் நம்காலம்வரை இந்த மெய்மைகள் உணரப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் திரு வள்ளுவர் உணர்வு நிலையில் இதனைக் கண்டுணர்ந் தனர் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் உணர்ச்சி நிலையில் மனித இனம் இதை மிகப் பழங்காலத்திலேயே அறிந்து பேணியுள்ளது. நாடு, மொழி, தெய்வம் ஆகிய ஆற்றல்களை மனித இனம் தொன்று தொட்டுத் தாயாக, தந்தையாகக் கருதின. அத்துடன் (மாண்ட வரை) மாண்ட புகழ்த் தெய்வ உருக்களாகவே மனித உலகெங்கணும் பல இனத்தாரும் போற்றி வந் துள்ளனர்.

வாழ்வு நிலையானது. முடிவற்றது. ஆகவேதான் தமிழர் தம் மொழியில் உயிர்முடிவு குறிக்க ஒருசொல்லே வகுக்கவில்லை. பிரிந்தார், இயற்கையெய்தினர், நிறை வெய்தினர், புகழுற்றார் என இன்று கூறப்படும் சொற் கள் அணிந்துரைகளாகக் கருதப்படுவதுண்டு. அவை அணிந்துரைகளல்ல. சாதல் (நிறைவு எய்தல்), மாள் தல் (மாண்பு அல்லது புகழ் அடைதல்), இறத்தல் (தலைமுறை கடத்தல்) என்ற சொற்களின் பொருளும் அதுவே. தமிழ்மொழி வழி நின்று நிறைஅறிவு கண்ட திருவள்ளுவர் 'நிலையாமை, என்ற இயலில் வாழ்க்கைக் கருவிகளின் நிலையாமைகூறி, இறுதி மூன்று குறட்பாக் களில் நிலையாமை கடந்த வாழ்வின் நீணிலையையும் சுட்டினர். இவற்றுள் இருகுறட்பாக்களே மேலே விளக்கமாகத் தரப்பட்டவை. அவற்றின் முத்தாய்ப்பாக விளங்குவதே இறுதிக் குறட்பா.

**'புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு'**

இக்குறட்பா நீடித்து நிலைத்த வாழ்வை அழகுபடச் சித்திரிக்கிறது. உடலை உறக்கநிலை கொள்ளும் ஓய்விடமாகக் கொண்டு உடம்பிலிருந்து உடம்புக்குத் தாவித் தாவிச் செல்லும் உயிருக்குப் புகுந்துவாழும் இடம் என்ற ஒன்றே இல்லையா? இது என்ன அவலநிலை?'' என்று அவர் கவி நயம்படக் கேட்டுள்ளார். உறங்குமிடம் வளர்ச்சிக்குரிய, வாழ்வுக்குரிய இடம் என்றும், ஓய்வுப் பருவம் தளர்ச்சிப் பருவமே என்றும் மேலே காட்டினோம். உயர்படி உயிர்களுக்கு இவ்வகை ஓய்விடமான உடம்பு முதுமை மூலம் கிட்டுகிறது. ஆனால் இனத்துக்கு அத்தகைய உடம்பு கிடையாது. இனமே உடம்பாகக் கொண்டவர்களன்றி இந்த ஓய்வின்பம் பெற முடியாது. இதை இனிமை நயத்துடன் சுட்டியதே வள்ளுவர் கவிநயம் வாய்ந்த கேள்வி. உடல் உயிர் ஒன்றிய தனி உயிரின் வாழ்வில் அதாவது சிறு வாழ்வில் அல்லது சிற்றின்ப வாழ்வில் உயிருக்கு ஓய்விடம் கிடையாது. இனவாழ்வு அல்லது பேரின்ப வாழ்விலேயே அத்தகைய ஓய்விடம் உண்டு என்று சுட்டி, அவர் பேரின்பத்துக்கு வழிவகுக்கும் 'துறவு' இயலுக்குப் புகுமுகம் செய்கின்றார்.

வள்ளுவர் வழி நின்று நாம் உயிரின் மறைதிறவும் இன்பத்தின் மறைதிறவாகிய பேரின்பம் அல்லது இன்பத்துள் இன்பமும் காண்போமாக.

# 7. இறவா இன்பம்

இன்பம், அவா, ஆர்வம்!

இன்பத்தை நாடாத உயிர் இல்லை. இன்ப நாட்டமே அவா, உயிர்த்துடிப்பு. அது எழுப்பும் ஆர்வமே உயிரை இயங்கச் செய்கிறது. அதுவே உயிரின் பண்பு, உயிரின் ஆற்றல்.

இம்மூன்றும் உணவு, பசி, உடல் நலம் போன்றவை.

பசித்தவனுக்கன்றி உணவு நாட்டமும் அதுவகை முயற்சியும் இருக்கமுடியாது. பசித்தவனுக்கன்றி உணவு சுவையளிக்கவும் மாட்டாது, உடல் நலம் தரவும் மாட்டாது. ஏனெனில் பசியே சுவைநுகர்வுக்கு மட்டுமன்றிச் செரிமானத்துக்கும், உடல் வளத்துக்கும் உரிய அடிப்படைக் காரணம் ஆகிறது.

உணவு, நல்வாழ்வு ஆகியவற்றின் வகையில் பசி எப்படியோ, அப்படியே இன்ப வாழ்வு, வாழ்வின் இன்பம் ஆகியவற்றின் வகையில் அவா! அது இன்பத்தை நாடி, இன்ப முயற்சியில் ஆர்வமூட்டி, இன்பப் பேற்றில் நுகர்வளித்து, இன்பத்தின் பயனும் நிரப்புகிறது.

இங்ஙனம் இன்ப வாழ்வு என்னும் உயிர் இயந்திரத்தில் இன்பம், அவா, ஆர்வம் ஆகிய மூன்றுமே மூன்று கோணங்களையுடைய ஒரு முத்திசை ஆழியாய் இயங்குகின்றன. இவ் உயிர்ச் சக்கரத்தின் உயிர்மையாக, அதன் தொடக்கமும் முடிவும், இயக்கமும் ஆற்றலும், மூல முதலும் கருவியும் பயனுமாக இயங்குவது அவாவே.

அவா இன்றி இன்பம் இல்லை. அவாவே இன்பம். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்ற பழமொழி இவ் வுண்மையை எடுத்துக் காட்டுகிறது.

பால் இனிப்பானது. பாலே உண்டவர்க்கு, பாலே ஒவ்வொரு நாளும் உண்டு உண்டு பழகியவருக்கு அது இனிக்காது, புளிக்கும். ஏனெனில் அவரிடம் பாலின் அவாத் தளர்ந்துவிட்டது. அதன் புத்தவா ஆர்வம் போய்விட்டது. அவாவின் புதுமை, உயிர்ச் சின்னம் ஆர்வம். புதுமை தரும் உயிர் இன்பம் இன்பப் பொருளாகப் பழகிவிட்டபின், அதுவே புளிப்பாக, கசப்பாக உவர்ப்பாக மாறிவிடுகிறது.

இன்பம், அவா, ஆர்வம் ஆகியவற்றின் உயிர் உண்மை அறியாதவர்களல்லர் சமயவாணர்கள், அற நூலார்! அவர்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகிய வீட்டைப் பேரின்பம் என்றனர். இறைவன் தாள் நிழலில் வைகும் உலகை இன்ப உலகென்றனர். அதைநோக்கி மக்கள் அவாவை, புதுமை யார்வத்தை எழுப்பினர். அவா பழமையாக ஆக, ஆர்வம் தளரத் தளர, புதுப்புது வகையாக, புதுப்புது முறைகள் புனைந்து, புதுப்புதுப் பூசனை வினைமுறைகளால், விழா வேடிக்கைகளால் அதை ஊக்கவும் அவர்கள் தவற வில்லை.

'நல்ல பண்புகள் இன்பம் தருவன, நிலையான இன் பத்துக்கு இட்டுச் செல்வன; தீய பண்புகள் இன்னுமை, ஓவா இடர் தருவன' என்று அறநூலார் மேன்மேலும் விளக்குகின்றனர். இன்ப நாட்டத்தை, அவாவை எழுப் பியே பண்பு வளர்க்க அவர்கள் சற்றும் தயங்கவில்லை. வள்ளுவர் பெருமானைப்போல இன்பத்தையே குறிக் கோளாகக் கொள்ளாவிடினும், அதைத் தூண்டிலாக வேனும் பயன்படுத்த அவர்கள் தவறவில்லை!

இன்ப நாட்டமே அவா. சமயவாணர், சமய அறிவு நூலார், அற நூலார் இன்பக் குறிக்கோளை ஏற்றுள்ள னர். வளர்க்க ஒருப்பட்டுள்ளனர். ஆயினும் அதே

சமயம், அதே மூச்சில் அவர்கள் அவாவைக் கண்டிக்கத் தவறவில்லை, கண்டித்துள்ளனர்.

அவா உயிர்ப் பண்பு. அதை விலக்குதல் அரிதினும் அரிது. இதனையும் நன்கு உணர்ந்தவர்கள், வற்புறுத்தி வற்புறுத்தி உணர்த்தியவர்களே அவர்கள். ஆயினும் இன்பக் குறிக்கோளை ஏற்று, அதை நாடும் அவாவை மட்டும் பழிக்க அவர்கள் தயங்கவில்லை.

இன்பம் நாடாத உயிர் இல்லை. அதற்காக எத்தனை கடுமுயற்சிகளில் ஈடுபடவும், எவ்வளவு இன்னல்களை ஏற்கவும், துன்பங்களைக் கடந்து செல்லவும் மனிதர் தயங்குவதில்லை. வாழ்வில் இன்பம் காணுதவர்கள், காணும் வாய்ப்பற்றவர்கள், காணும் நம்பிக்கையற்றவர்கள் கூட, மாள்வின் பின் இன்பம் கைவரும் என்ற நம்பிக்கையால் ஆறுதல் பெறமுடிகிறது. சமயவாணரே இந்த நம்பிக்கையை நீர்வார்த்து வளர்க்கின்றனர். ஆயினும் அதே மூச்சில் அவாவை அறவே நீக்கவேண்டும் என்றும் அவர்கள் அறிவுரை பகர்கின்றனர்.

அவா இயங்காமல் அடக்குவதென்பது காற்றை இயங்காமல், நீரை ஓடாமல், தீயைச் சுடாமல் தடுப்பது போன்றது. இந்த உவமைகளைக் கூடச் சமய அறிவு நூல்களில் காண்பது அரிதன்று. மதயானையைப் பணியவைக்கலாம். கரடி வெம்புலிகளை அடக்கலாம். அவா அடக்குதல் அரிது, அரிதினும் அரிது என்று அவர்கள் வருணிக்கத் தயங்கவில்லை. ஆயினும் 'அவாவை அடக்கு' என்று அவர்கள் போதிக்கின்றனர்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடே' (திருவாய்மொழி)

'ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும், ஆசையறுமின்கள்' (திருமந்திரம்)

'பிறந்தார் பெறுவது பெருகிய துன்பம்,
பிறவார் பெறுவது பெரும் பேரின்பம் ;
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக' (மணிமேகலை)

என்று தமிழ்ப் பக்தி நூல்களும் தமிழ்ச் சைவ ஆகம மாகிய திருமந்திரமும் தமிழ்ப் புத்த காவியமாகிய மணி மேகலையும் ஒருங்கே வலியுறுத்துகின்றன.

திருக்குறளிலும் நாம் இதே கருத்தை, இக்கருத்துக் களையெல்லாம் ஒருங்கே காணலாம்.

**'இன்பம் இடையருது ஈண்டும் அவா என்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்'**
**'அவாவில்லார்க்கு இல்லாகும் துன்பம்'**

இக்குறட்பா வாசகங்களில், அவாவே இன்பத்துக்குத் தடை, துன்பத்துக்கெல்லாம் மூல காரணம் என்று வள்ளுவர் கட்டுரைத்துள்ளதாகத் தோற்றுகிறது. அது மட்டுமன்று. திருமந்திர ஆசிரியரான திருமூலரைப் போலவே, மற்றப் பற்றுக்களை அகற்றவே இறைவனை, பற்றற்ற கடவுளைப் பற்றுக என்றும் அவர் நயம்பட உரைத்துள்ளார்.

**'பற்றுக பற்றற்ருன் பற்றினை ; அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு'**

கீழ்த்திசைச் சமயநூலார் அனைவரிடத்திலும் கீழ்த் திசை அறநூலார் அனைவரிடத்திலும் மட்டுமன்றித் திருவள்ளுவர் திருக்குறளிலும் காணப்படும் இந்த முரண் பாட்டின் விளக்கம் யாது?

சமயக் கருத்துக்களை உய்த்துணர்வாகவும் ஒப்பீட்டு நெறியுடனும், திருக்குறளைத் திருக்குறளாசிரியரது வாழ்க் கைக் கோட்பாட்டின் பின்னணியுடனும் மொத்தமாக வும் காண்பவர்களுக்கு இம் முரண்பாட்டின் முழு விளக் கமும் மெல்லத் தென்படாமல் போகாது.

சமய நூல்களை, சிறப்பாகக் கீழ்த்திசைச் சமய நூல் களை நாம் பக்தி நூல்கள், அறிவு நூல்கள் என்று இரு வகையாகப் பிரிக்கலாம். சைவ, வைணவ அறிவு நூல்கள் (சித்தாந்தங்கள்) இவற்றின் இணைப்புப் பாலம் ஆகும்.

புத்த சமண சமயங்களுக்கு மறுபிறப்புக் கோட்பாடு அடிப்படைக் கோட்பாடு ஆகும். மற்றக் கீழ்த்திசைச் சமயங்களின் அறிவு நூல்களுக்கும் இது பொருந்தும். இவை யாவும் அவாவே பிறப்பிறப்புச் சூழலுக்கு விதை என்று கருதுகின்றன. அவா அற்றால் பிறவா வாழ்வு அல்லது பேரின்பம் பெறலாம் என்று அவை கொள்கின்றன.

கீழ்த்திசைப் பக்தி நூல்கள் யாவும் மேற்சொன்ன மறுபிறப்புக் கோட்பாட்டை ஏற்பவையே. ஆனால் மற்ற அவாக்கள் அல்லது பற்றுக்களை ஒழிக்கக் கடவுட் பற்றை அவை வழியாகக் கொண்டன.

'தனக்கெனப் பற்றுக்கொள்ளாதே, கடவுளுக்காகப் பற்றுக்கொள்' என்று கூறுகிறது பகவத் கீதை.

திருவள்ளுவர் கருத்துக்களில் பற்று இறைப்பற்று இரண்டும் கீழ்த்திசைச் சமயங்களிலும்; இறைப் பற்று மட்டும் மேல்திசைச் சமயங்களிலும் பரவியுள்ளது காணலாம்.

இந்தியாவுக்கு வெளியே எழுந்த சமயங்களில் மறுபிறப்புக் கோட்பாடு இடம் பெறவில்லை. அவா வறுத்தலும் இதனால் அதே அளவில் வலியுறுத்தப் பெறவில்லை. அவாவறுத்தலுக்காகவே கடவுட் பற்று என்ற கீழ்த்திசைப் பக்தி நூல் வாதமும் அங்கே கிடை யாது. ஆனால் கடவுட் பற்றுக்காகப் பிற பற்றுக்களை விடுதல் போற்றப்பட்டுள்ளது. இது கீழ்த்திசைக் கடவுட்பற்று வாதத்துக்கு நேர் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளுவர் திறக்குறளில் எல்லாச் சமய வாணரின் எல்லாக் கருத்துக்களையும் அவற்றின் மொத்தத் தொகையையும் காணலாம். அவற்றின் விளக்கமும் திருக்குறளை ஆராய்பவர்களுக்கு எளிதில் புலப்படும். ஏனெனில் திருவள்ளுவர் கருத்தே அவை எல்லா வற்றையும் ஒருங்கிணைப்பது. எல்லாவற்றுக்கும் நடு நாயக முதலும் அதுவே ஆகும்.

திருவள்ளுவர் அவாவைக் கண்டிக்கிறார். ஆனால் அன்பும் உலகப் பற்றும் அவர் நூல் முழுவதிலும் கமழ் கின்றன. பற்று விடுவதற்காகக் கடவுட் பற்றைக் கைக் கொள் என்ற கீழ்த்திசைப் பக்தி நூல் வாதமும் இடம் பெறுகிறது. கடவுட் பற்று எவ்வாறு பற்றுவிடுவதற்கு உதவும் என்பதும் விளக்கப்படுகிறது. கடவுள் பற்றற்ற வர். ஆகவேதான் கடவுட் பற்றுப் பற்றறுதற்கு உதவு வது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடவுட் பற்றுக்காக மற்ற உலகப் பற்றுக்களை விட வேண்டும் என்ற மேல்திசைப் பக்தி வாதத்துக்கும் இது விளக்கம் ஆதல் காணலாம். ஏனெனில் மற்றப் பற்றுக்கள் தற்பற்றுக்கள். கடவுட் பற்று இனமளாவிய பற்று ஆகும்.

கடவுள் அன்புருவினர். கல்வியின் பயனும் நோக்க மும் கடவுள் வழிபாடே. கடவுள் வழி நின்றவர் அந்த ணர், கடவுளும் அந்தணனே. 'அந்தணர் என்போர் அறவோர்,' 'எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகுவோர்'. ஆகவே கடவுள் பற்றற்றவர் என்ப தன் பொருள் அவர் தனக்கெனப் பற்றற்றவர் என்பதே யாகும். வேறு எந்த வகையிலும் அவர் பற்றற்றவர் ஆகமாட்டார். அவர் தனிப் பற்றுக்கோடற்றவர். ஆனால் உலகெலாம், உயிரெலாம் அவரையே பற்றி நிற் கின்றன. தற்பற்றற, உலகனைத்தின், உயிரனைத்தின் பற்று வளர்க்க, அவரைப் பற்றுக என்பதே வள்ளுவர் குறிக்கோள்.

திருவள்ளுவரும் சமய வாணர்போல அவா அறுத் தலை வலியுறுத்தியுள்ளார். ஆனால் அவர் அவா என்று கூறியது தன்னைப்பற்றிய, தனி உயிர்பற்றிய அவாவை மட்டுமே. அன்பு அவா, அதாவது உலகப் பற்றையோ, பொது நலத்தையோ அல்ல. தன் பற்றொழித்து, அவ் வகைப் பற்றற்ற இறைவன் வழி நின்று, அவனைப் போலவே அந்தண்மை அல்லது பொதுநலப் பாசம் கொள்வதே இன்பத்துக்கு வழி என்பது வள்ளுவர் கருத்து.

ஆசை ஒழிக்கும்படி கூறிய புத்தர் பிரான் அனைத்துயிர்களிடத்தும் நேசம் வளர்க்கப் பணித்தார் என்பதை நாம் இங்கே கவனித்தல் வேண்டும். வள்ளுவர் அவா அறுத்தலின் கருத்துமரபைப் புத்தர்பிரான் அவா அறுத்தல் மேற்கொள்ளவில்லை. ஆனால் அதன் நிழல் அவர் கோட்பாட்டில் இடம் பெறாமல் இல்லை என்பதை இது காட்டுகிறது.

அவா பிறப்புக்கு வித்து என்ற கீழ்த்திசைச் சமயக் கோட்பாட்டையும் திருக்குறளில் காண்கிறோம்.

திருவள்ளுவர் மேல் உலகம், நரகம் ஆகியவற்றைப் பற்றிச் சுட்டியுள்ளார். அவற்றைத் தம் கருத்தாக ஏற்கவில்லை, வலியுறுத்தவில்லை. அவற்றை அவர் வாதப்புனைவுரையாக, கவிதைப் புனைவுரையாகவே குறித்துள்ளார். அவர் வாழ்க்கைக் கோட்பாட்டில் அவை இடம் பெற வில்லை என்பது தெளிவு. வேள்வி, தாமரைக் கண்ணான் உலகு, இந்திரன், உம்பர் உறைவார்பதி, தேவர் முதலிய சொற்களையும் அவர் வழங்கியுள்ளார். அவர் வாழ்க்கைக் கோட்பாட்டுக்கு இவையும் புறம்பானவை என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இதுபோலப் பிறப்பு இறப்புக் கோட்பாடு அல்லது மறுபிறப்புக் கோட்பாடு பற்றியும் அவர் சுட்டியிருப்பதாகக் கொண்டாலும், அவர் வாழ்க்கைக் கோட்பாட்டில் அது ஓர் உட் பகுதியாய் அமைகின்றது என்று கூற முடியாது. உண்மையில் மற்றச் சமயக் கருத்துக்களைச் சுட்டியது போலக் கூட இதனை அவர் சுட்டினார் என்பதை நிலை நாட்டுதல் முடியாது. மறுபிறப்பை ஐயத்துக்கிடமின்றி நாட்டும் குறட்பாவையும் எவரும் காட்டல் அரிது.

அவா என்பதைத் தனி உயிர் அவா என்ற பொருளில் திருவள்ளுவர் கொண்டதுபோலவே, பிறப்பு, இறப்பு என்பதையும் அவர் தனி உயிரின் பிறப்பு, இறப்பு என்று கொண்டதாகக் கருத இடமுண்டு. அவை தனி உயிரின் பண்புகள், இன்ப நோக்காத தற்பற்றுப் பண்புகள். உயர்ந்தோர் இவற்றுக்கு மாறாக இறவாமை, பிறவாமை ஆகிய பண்புகளை உடைய இன

வாழ்வையே இன்ப நோக்கிய வாழ்வாகக் கொண்டனராதல் வேண்டும்.

**'அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**
**தவாஅப் பிறப்பீனும் வித்து.'**

புத்த சமண சமயங்களுக்கும் கீழ்த்திசைச் சமயங்களுக்கும் உரிய மறுபிறப்புக் கொள்கையின்படியே உரையாசிரியர்கள் இக் குறட்பாவுக்குப் பொருள் கண்டுள்ளனர். 'தவாஅ' என்பதற்குக் கெடுதலில்லாத என்ற சொற்பொருள் கூறி, 'கெடுதலில்லாமல் வருகின்ற, அஃதாவது ஓய்வற்ற பிறப்பு இறப்புச் சூழல் தரும் விதைப் பண்பே அவா என்று பரிமேலழகர் கொள்கின்றார். 'வருகின்ற' என்ற சொல்லை வருவிக்காவிட்டால் அஃது அவர் குறித்த நேர்பொருள் தரமுடியாது என்பது இங்கே கவனிக்கத் தக்கது.

தமிழில் பிறப்புக்கு எதிர் சொல் இறப்பு, பின்னது மிகுதல், கடந்து செல்லுதல் என்னும் பொருள் உடையது. திருவள்ளுவர் பிறப்புக்கு எதிராகச் சிறப்பு என்பதையும் பயன்படுத்துகிறார். இறப்பு, சிறப்பு; தவம், தவல் என்ற சொற்கள் தமிழில் பொதுவாகவும், திருவள்ளுவர் வழக்கில் சிறப்பாகவும் தொடர்பு உடைய சொற்கள் ஆகும். இறப்பு தனி வாழ்விலிருந்து இன வாழ்வுக்குக் கடத்தலே. சிறப்பும் புகழும் எச்சமும் அதுவே. 'தவல்' தாண்டுதல். தவம் அதற்குரிய செயல்.

**' உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்துக்கு உரு '**

என்று திருவள்ளுவரே இதற்கு விளக்கம் அளித்துள்ளது காணலாம். புத்தர்பிரான் காலத்துக்குள் தவத்தின் இந்த வள்ளுவப் பொருள் மறக்கப்பட்டுவிட்டது என்னலாம். வள்ளுவக் கருத்துப்படி தவம் என்பது தான் கெடினும் அக்கேடு மூலமே இனவாழ்வு பெருக்கும் செயல் ஆகும். 'தவல்' கெடுதல் என்னும் பொருளையும் தாண்டுதல் (தவ்வுதல்) என்ற பொருளையும்

ஒருங்கே தருதல் இதனாலேயேயாகும். தன்னலம் கெடுத்து இன நலம் பெருக்கும் செயலே அதாவது தியாகமே தவம் ஆகும். தபுதல் அல்லது தபுதார நிலை என்று பண்டைத் தமிழ் மரபு இதனை வழங்கிற்று.

திருவள்ளுவர் எழுபிறப்பு, எழுமை, எழுமை எழு பிறப்பு என்று கூறிய இடத்திலெல்லாம், அவர் கொண்டிருக்கக் கூடிய பொருள் ஏழு தலைமுறை, ஏழுபடி கடந்த உறவு ஆகியவையே யாகும். தவத்தையும் நோன்பையும் அவர் தியாகம், தியாக உறுதி என்ற பொருளிலேயே பயன்படுத்தினர். பிறப்பென்னும் பேதைமைக்கு எதிராகச் சிறப்பென்னும் செம்பொருள் என்று அவர் கூறியது தனி வாழ்வு நலன் என்னும் அறியாச் சிறு மதிக்கெதிரான இனவாழ்வின் பொதுநல நிறைவு அதாவது கடவுள் பண்பு என்பதனையே யாகும்.

"அவா என்பது தவா அப் பிறப்பீனும் வித்து" என்று வள்ளுவர் கூறியதன் பொருள் தனி அவாவை மட்டுமே சுட்டியது. 'தனி உயிர் தான் கெட்டும் இனம் வளர்க்காத அதாவது தவத்துக் குரியதல்லாத சிறு பிறப்புக்குத் தனி அவா வித்தாகும்' என்பதே அப் பொருள். தலைமுறை 'தாண்டாத' என்ற பொருளும் அமையும்.

சமய ஒப்பு நோக்கே வள்ளுவர் கருத்தை இன்னொரு திசையில் வலியுறுத்தும். இறவாமை, பிறவாமை தொடர்புடைய கருத்துக்களாயினும் ஒரே கருத்தன்று. எடுத்துக்காட்டாக, மேலைச் சமயங்களான கிறிஸ்தவ, யூத, இஸ்லாமிய நெறிகள் கடவுளும் மனிதரும் இறவாப் பண்புகள்[1] என்று கருதுகின்றன. ஆனல் கடவுளை மட்டுமே இறவாப் பிறவாப் பண்பு[2] என்று குறிக்கின்றன. அதே சமயம் கீழைச் சமயங்கள் கிட்டத்தட்ட யாவுமே கடவுளைப்போல உயிரும் உலகும் பிறவா இறவாப் பண்புகள் என்று கொண்டது குறிப்பிடத்தக்கது.

---

1. Immortality 2. Eternity

திருவள்ளுவர் இன உணர்வுடைய அதாவது கடவுட் பண்பார்ந்த உயிருக்கும், இனத்துக்கும், இன முதலாகிய கடவுளுக்கும் ஒருங்கே உரிமைப்படுத்திய பண்பு இதுவே. கீழ்த்திசையின் இருமை (துவைதம்), அக ஒருமை (சுத்த அத்துவைதம்) தனி ஒருமை (கேவல அத்துவைதம்), உறழ் ஒருமை (விசிட்ட அத்து வைதம்), ஆகிய கோட்பாடுகளை வள்ளுவர் கருத்தே ஒருமுகப்படுத்திப் பொருத்திக் காட்டுகிறது என்பதும் உற்று நோக்கத் தக்கது.

பிறப்பின் பயன் பெற்றவர் இனத் தொண்டாற்றிப் புகழ் பெற்றவர்; இறவாதவர்; இனவாழ்வே வாழ்வாகக் கொண்டவர். ஆனால் அவர் பிறவாதவர் அல்லர். தம் தனிவாழ்வு முற்றிலும் கெட்டு, இனத்தின் வாழ்வே வாழ்வாகப் பெற்றவர் பிறவாதவர் ஆகிறார். ஏனெனில் அவர் வாழ்வு பிறவா இறவா இனவாழ்வு ஆகிறது. இந்நிலையடைந்தவரே பகவர்.

சமய மரபில்கூட, தேவர்கள் அல்லது சிறு தெய் வங்கள் 'இறவாதன' என்று மட்டுமே குறிக்கப்படுகிறது. கடவுள் ஒருவரே பிறவா இறவாப் பண்பினராகப் போற்றப்படுகிறார்.

வள்ளுவர் பிறப்பைப் புறக்கணித்தவர் அல்லர். உடம்பைப் பழித்தவரும் அல்லர். ஆனால் இரண்டின் முழுப் பயனை பிறவாமை உடம்புடன் வாழும் நிலை யிலே பெறப்படுவது என்றே அவர் கருதினார். பிற வாமை பெற்ற பின்னும் உடம்பின் பயனுடன் உடம்பும் இருப்பதாலேயே, அவ்வுடம்பு 'மிகை' ஆகிறது என்று குறித்துள்ளார்.

> **' மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் ? பிறப்பு அறுக்கல்**
> **உற்றார்க்கு உடம்பு மிகை '**

இறவாமை கடவுளின் பண்புருவாகிய அந்தண்மை உருவாதலால், அது கண்டவர் இறைவனை அணுகிய வர், இறைவனைக் கண்டவர், இறைவன் கூறுனவர் ஆகின்றார்.

கீழ்த்திசையின் பழம் பெருமைகளையும் பண்பு மரபையும் படிப்படியாக மறைத்தழித்து வருகிற போலிச் சமயத் தலைவராகிய சழக்கர் கொலை சூழ்வதனை மாதக் கணக்காகக் கண்டும், காந்தியடிகள் தம் உடலைக்காக்க ஒரு சிறிதும் முயலாதிருந்தனர். மேற் குறிப்பிட்ட வள்ளுவரின் குறட்பா இலக்கணத்துக்கு ஏற்ற நம் கால இலக்கியமாக இதனைக் குறிப்பிடலாம்.

சமய வாணரின் 'அவா', 'பிறப்பிறப்பு', 'ஊழ்' சார்ந்த கொள்கைகளின் மூல முதல் வடிவையும் விளக்கத்தையும் இங்ஙனம் திருக்குறளிலே காணலாம்.

அவாக்களில் நல்லவாக்கள் இருக்கலாம். தீய வாக்கள் இருக்கலாம். இரண்டுமே விலக்கவேண்டு பவை, பிறப்புக்கு வித்தாகியவை என்று சமய நூல்கள் கூறுகின்றன. அதே சமயம் இறைப்பற்றும் நல்ல வாவே. மற்றப் பற்றுக்களின் தளையை அகற்ற அது உதவும் என்ற வாதம் கூட அதை அவாக்களில் ஒன்று என்ற நிலையிலிருந்து மாற்ருது. இப்புதிரையும் வள்ளு வர் கோட்பாடே விளக்க வல்லது. ஏனெனில் வள்ளு வர் இறைப்பற்று மற்றப் பற்றுக்களுக்கு எதிரிடையான பண்புடையது. அது தற்பற்றற்றது. மற்றப் பற்றுக்களை அது விலக்கும் வகையும் அதுவே.

நல்லவாக்கள் என்பன வள்ளுவர் கருத்தின்படி நல்ல தன்னல அவாக்கள். தீயவாக்கள் தீய தன்னல அவாக்கள். தீயவாக்கள் தீமைபயப்பது ஒருதலை. ஆனல் நல்லவாக்கள் தனி உயிரின் நலம் ஒன்றே குறியாகக் கொண்டவை. எனவே அவை பிறருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும். எவ்வளவு தொலை அறிவோடும் பண்போடும் கலந்தாலும் தீமை பயவாதிரா. அவை இனத் தீங்கு விளைவித்து, தனி உயிருக்கும் தீங்காகவே அமையும். ஆகவேதான் தனி உயிர் அவாக்கள் தீமை யாயினும் நன்மையாயினும் ஒருங்கே தீமை தருபவை ஆகின்றன. பொதுநல அவாக்களே தூய உயர் அவாக் கள். அவை நீடித்த இனநலமும் நிலையான தனி நல னும் ஒருங்கே தருபவை.

வள்ளுவர் கண்ட அவாவற்ற இன்பம், பொதுநல இன்பம். அது பிறவா இன்பம், இறவா இன்பம் ; இன்பத்துள் இன்பம். அதுவே பிறப்பு, இறப்பு என்ற தனி உயிர்ப் பண்பின் தொடர்பற்ற இன வாழ்வின் இன்பம், இன இன்பம். இன்பத்துள் இன்பமாகிய அதன் பண்பறிந்து அதில் முன்னேறுவோமாக.

# 8. பண்பும் பயனும்

உணர்ச்சி, அறிவு, மெய்யுணர்வு, மனத்திட்பம்!

உள்ளத்தின் நான்கு உணர்வுப்படிகள் என்று இவை கருதப்படுகின்றன. நான்கு படிகளின் தளமட்டத்தை அவை குறித்துக் காட்டுகின்றன என்பது உண்மையே. அவை முறையே கீழ் உயிரினப்படி, விலங்குப் படி, மனித இனப்படி, கடவுட்படி என்பன.

உணர்ச்சியை விலங்குப்படிக்கும், அறிவை மனிதப்படிக்கும் உரியதாகச் சிலர் கருதுவதுண்டு. இது முற்றிலும் சரியன்று. ஏனெனில் உணர்ச்சிப்படியின் தொடக்க நிலையில் உணர்ச்சி இயங்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில் இயற்கையின் புற ஆற்றல்கள் அவ்வியற்கையின் அக ஆற்றலாகிய உயிரின் உடலாற்றலையே இயக்குகின்றது. உடல் இயற்கையால் இயக்கப்படும் இந்நிலையே உணர்ச்சியின் இயங்கு நிலை

ஆகும். ஆனால் கீழ் உயிரினப்படியிலேயே உணர்ச்சி இயக்கும் நிலையை அடைந்து உடலாற்றலை இயக்கத் தொடங்குகிறது. இயங்குதல், இயக்குதல் ஆகிய இந்த இரண்டு உணர்ச்சிப் படிகளின் பண்புகளே கொல்லப் படுதல், கொல்லுதல்; தின்னப்படுதல், தின்றல்; அஞ்சுதல், அச்சுறுத்தல் ஆகிய இரு திசைச் செயல்களாக விளங்குகின்றன.

அறிவுப்படியின் தொடக்கத்திலும் இதுபோல அறிவு இயங்கும் நிலையிலேயே உள்ளது. உணர்ச்சியே அதை இயக்குகிறது. கோபதாபங்கள், வன்மம், காழ்ப்பு, பகைமை ஆகியவை இத்தகைய அறிவுநிலை உணர்ச்சிகளே. இவற்றில் அறிவின் செயலால் உணர்ச்சி ஆற்றல் பெறுகிறது. ஆனால் அறிவு அடிமைப்பட்டு உணர்ச்சியின் தன் முனைப்புக்கு இடம் அளிக்கிறது அறிவின் உயர்படியில் அறிவே உணர்ச்சி

களை இயக்குகிறது. ஆனால் தன் முனைப்பு இங்கே தற்பற்றாகி விடுகிறது. இந்த அறிவுநிலையையே நாம் சூழ்ச்சி என்கிறோம். நரி முதலிய விலங்கினங்களிலும், கீழ்ப்படியிலுள்ள மனிதரிடத்திலும் நாம் இதைக் காண்கிறோம்.

ஐம்புல அறிவு கடவாத இந்தப் படியையே தொல்காப்பியர் விலங்குகளுக்கும் விலங்குப் படியிலுள்ள மனிதருக்கும் உரியதாக வகுத்துரைத்தார்.

**'மாவும் மாக்களும் ஐயறிவினவே !'**

**'மக்கள் தாமே ஆறறி வுயிரே !'**

இங்கே 'மா' விலங்கினத்தையும், அதன் பண்மை போலத் தோற்றும் 'மாக்கள்' விலங்குப் படியிலுள்ள மனிதரையும் குறிக்கிறது. 'மாக்கள்' ஐயறிவு கடவாத மக்கள் ; அவர்கள் உருவில் மட்டும் மக்களான விலங்குகள் என்று வள்ளுவர் வழிநின்று தொல்காப்பியர் கட்டுரைத்துள்ளார்.

உணர்ச்சியும் அறிவும் கடந்த படியே மெய்யுணர்வுப் படி. இதில் உணர்ச்சி அறிவையும், அறிவு உணர்ச்சியையும் இயக்கி, இன உணர்வு தோற்றுவிக்கின்றன. அதுவே மெய்யுணர்வு. இந்தப்படியும் உயிரினங்களிலேயே தோன்றி விடுகிறது. கவிஞர் புகழ்ந்து பாடும் பண்புடைய தும்பிகள், பறவைகள் ஆகியவற்றின் குடும்ப வாழ்க்கைப் பண்பிலும்; எறும்பு, தேனீ, நாரை, அன்னம் ஆகியவற்றின் சமுதாய வாழ்விலும் ; இரண்டும் நிலவும் யானை, குரங்கு, மனிதன் முதலிய உச்ச உயர் உயிரினங்களிலும் இதன் முதற்கூறு தொடங்குகிறது. உணர்ச்சியும், அறிவும் இன உணர்வை இயக்குகின்றன. ஆனால் பண்பட்ட மனித இனத்தில் இன உணர்வு உணர்ச்சியையும் அறிவையும் இயக்கி இன உணர்வை மெய்யுணர்வாக வளர்க்கின்றது. இதன் உணர்ச்சிக் கூறு மொழியாகவும் இலக்கியமாகவும் கலைகளாகவும் மலர்கின்றது. இதன் அறிவுக் கூறு மொழியை வளர்ப்பதுடன், இயல் நூல்களாக, ஆராய்ச்சி யறிவாக வளர்கின்றது. முந்திய கூறு

கலைஞர் இனமும், பிந்திய கூறு அறிஞர் இனமும் வளர்க்கின்றது. இரண்டும் இணைந்து இனத்தை நீடித்தியக்கும் இன முதல்குழு அல்லது பண்புக் குழுவை ஆக்குகிறது.

இனமுதல் குழுவே இனத்தின் உயிர். இனம் அதன் உடல். இன முதற் குழுவின் உயிர்ப் பண்பு மெல்ல மெல்ல இன உடல் முழுதும் பரவுகிறது. ஆனால் தொடக்க நிலையில்—இதுவே தற்போதைய உலக நிலை...உடற் பண்புக்கு உயிர் அடங்கி நடைபெறுகிறது. இன முதற் குழு இந்தப் படியில் இன நலத்துடன் குழு நலமும் பேணுகிறது. இனம் இதனால் அக்குழுவையும் உடற் கூருகக் கருதித் தனித்து இயங்க விடுகிறது. இயேசுபிரான், காந்தியடிகள் ஆகியோரின் வாழ்வில் இனம் அவர்கள் அருமை யுணராதுபோன தன் காரணம் இதுவே. இன முதற் குழுவின் மனிதப் படி கடந்து அவர்கள் கடவுட்படிக்கு உயர்ந்த நிலைக்கு இது சான்று. இனமுதற் குழுவும் மனித உணர்வும் முற்றிலும் இந்தப்படியை அடைந்தபின், அதுவே மனிதப்படி கடந்த தெய்வப்படி, மெய்யுணர்வுப்படி கடந்த மனத்திட்பப்படி ஆகிறது. இந்தப்படியை அமைத்தவரே பகவர். அவர்கள் உலகை இயக்கும் திறம்படைத்தவர் ஆகிறார்கள்.

இங்ஙனம் உயிரினமுதலாக மனித இனம் கடந்த இன வளர்ச்சியில் உணர்ச்சியிலிருந்து அறிவும், அறிவிலிருந்து உணர்வு அல்லது மெய்யுணர்வும் மெய்யுணர்விலிருந்து உரம் அல்லது மனத்திட்பமும் படிப்படியாக வளர்ந்து உருப்பெறுகின்றன. ஆயினும் அவை முற்றிலும் வளர்ச்சிப்படிகள் அல்ல. அவை வளர்ச்சியின் நான்கு தளமட்டங்களைக் குறித்துக் காட்டும் பண்புகள் மட்டுமே. ஏனெனில் அவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றியவை மட்டுமல்ல. ஒவ்வொரு பண்பும் அடுத்த பண்பைத் தோற்றுவித்தவுடன் ஓய்ந்துவிடுவதில்லை. தொடர்ந்து ஒன்றருகே ஒன்றாக ஒருங்கிணைந்து அலைகளாக அவை இயங்குகின்றன. அத்துடன் அலையோடு அலை கலந்து பல்வேறு புதியபுதிய அலைகளைத் தோற்று

விப்பதுபோல, அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஒன்றை ஒன்று தூண்டிப் புதுப்புது உணர்ச்சி, அறிவு அலைகளாக வளர்கின்றன. உணர்ச்சியின் செயலால் அறிவு அலை உயர் அறிவலைகளாகவும், அறிவின் செயலால் உணர்ச்சியலை உயர் உணர்ச்சியலைகளாகவும், வளர்ந்துகொண்டே செல்கின்றன. இதனால் உணர்ச்சி, அறிவு முதலிய பண்புகளைப் படிகள் என்று கூறுவதைவிட, பல படிகளையும் பல தளங்களாகக்கொண்டு பின்னிப் பிணைந்து வளர்ந்து செல்லும் அலைப் பின்னல்கள் என்று கூறலாம்.

உணர்ச்சி, உணர்வு என்ற இரு தமிழ்ச் சொற்களும் 'உணர்' என்ற ஒரே பகுதியிலிருந்தே தோன்றுகின்றன. உணர்தல் என்ற ஒரே சொல் இதனால் முதற் புலனுணர்வு முதல் ஆறும் புல உணர்வுவரை, உணர்ச்சித் தொடக்க முதல் மனத்திட்பப் படியின் கடைசித் தளம்வரை உள்ளத்தின் எல்லாவகைப்பட்ட செயல்களையும் குறிக்கும் சொல்லாக இயங்குகிறது. உணர்வு என்ற சொல் அதன் தொடக்க நிலையையும் முழு நிறைவான கடைசிப் படியையும் குறிக்கிறது. இவற்றை வேறு வேருகப் பிரித்துணரவே நாம் பின்னதை மெய்யுணர்வு என்கிறோம்.

உணர்வே உயிர். ஏனெனில் உணர்வற்ற நிலையில் உயிர் இயற்கையின் ஒரு கூறுமட்டுமே. உணர்வே அதை இயற்கையினுள் ஒரு சிறு இயற்கையாகச் செயற்பட வைக்கிறது. ஆனால் உணர்வற்ற நிலை என்பதும் உண்மையில் உயிரின் இயற்கைநிலை அல்லது துயில் நிலையேயாகும். ஏனெனில் இத்துயில் நிலையில் உணர்வற்ற நிலைக்கும் இயற்கை நிலை அல்லது விழிப்பு நிலைக்கும் இடைப்பட்ட ஒரு கனவுநிலையைக் காண்கிறோம். இதுவே நினைவுநிலை, கனவின்போது செயலாற்றும் நிலை. அவாக்கள் பிறந்து வாழும் இடமும், நிறைவேருத அவாக்கள், அறிவின் செயலால் அடக்கப்பட்ட ஆர்வங்கள் ஆகியவை அடங்காது தனி வாழ்வு வாழும் இடமும் இதுவே என்று உளநூலார் கூறுகின்றனர். மேலும்

அவர்களே உணர்வற்ற நிலை[1], உணர்வு நிலை[2] ஆகிய இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இந்நினைவு நிலையை உள்ளுணர்வு நிலை[3] என்பர்.

இன உயிர் குறிக்கொண்ட பொதுமையிலிருந்து தனி உயிரைப் பிரிப்பது இதுவே யாதலால், இந்தத் தனி நோக்கமாகிய அவா 'பிறப்புக்கு' அதாவது தனியுயிர்த் தன்மைக்கு வித்தாகிறது.

இன வாழ்வில் இன்பம் அருமையாய் இருப்பதற்குக் காரணமான புதிர் ஒன்று உண்டு. அது இன வாழ்வின் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இரண்டு குறிக்கோள்கள் இருப்பதே. ஒன்று தனி மனிதன் உள்ளத்தின் உள்ளுணர்வுத் தளமாகிய அவாத்தளத்தில் ஆட்சி செய்யும் உள்ளவா நோக்கம். மற்றொன்று குடும்ப சமுதாய ஆட்சிகளில் பரவியுள்ள இன முதல்வர் குறித்கோளாகிய இறைக் குறிக்கோள். நிறைவேரு அவாக்களையுடைய உயிர்களில் உள்ள ஆட்சியே இரண்டக ஆட்சியாய் அமைவதாலுல், அவர்கள் குறிக்கோள்கள் இன்னும் பல. ஆங்கிலப் புனை கதைப் பேராசிரியரான 'தாக்கரே'[4] என்பவர் 'முனைவர் ஜெக்கிலும் திருவாளர் ஹைடும்' என்ற புனைகதை மூலம் இத்தகைய ஓர் இரண்டக உள்ளத்தின் வாழ்வு தாழ்வுகளைத் திறம்படத் தீட்டியுள்ளார். இரண்டுபட்ட உள்ளம் இரு உள்ளங்களாக ஒரே மனிதனை இரு வேறுபட்ட ஆட்களாகச் செயலாற்றவைக்கிறது. இப்படம் முனைப்பாகப் பெருக்கிக் காட்டப்பட்ட ஒன்றுனலும், இனவாழ்வில் சற்றேறக்குறைய எல்லா மனிதரின் அகப்புற வாழ்வுகளின் முரண்பாட்டை இது நன்கு சித்திரித்துள்ளது என்னலாம். தனி மனிதர் வாழ்வில் அவாவிய இன்பங்கள் துன்பங்களாவதற்கும், பல சமயம் இனவாழ்வு வளங்கெடுவதற்கும் உரிய அடிப்படைக் காரணம் இத்தகைய முரண்பாடே என்னலாம்.

---

1. Unconscious State
2. Conscious State
3. Sub-conscious State
4. W. M. Thacheray

குதிரைவண்டிக்காரன் வண்டியை ஒரு திசையில் ஓட்ட விரும்பும்போது, குதிரை வேறொரு திசையில் செல்ல விரும்பி அடம்பிடிப்பது நாம் காணுதகாட்சி யன்று. வண்டிக்காரன் அச்சமயம் ஆத்திரம் காட்டினாலோ அல்லது கோபங்கொண்டு அடித்தாலோ, குதிரையின் சண்டித்தனம் ஒன்றுக்கு இரண்டாகுமே யன்றிக் குறையாது. அறிவும் அனுபவமும் உடைய குதிரைக்காரன் குதிரையின் மனப்போக்கறிந்து, அப் போக்குக்குப் பாதி விட்டுக்கொடுத்து அதன் பின்னும் தட்டிக்கொடுத்தே தன்வழிக்குத் திருப்புவான். வாழ் வில் தனி மனிதனுக்கும் இனவாழ்வுக்கும் இடையே யுள்ள தொடர்பு குதிரைக்கும் குதிரைக்காரனுக்கும் உள்ள இந்தத் தொடர்பு போன்றதேயாகும்.

திறமையுடைய ஆட்சியாளர் வலிந்து மக்களைத் தம் வழிக்குத் திருப்ப முயலமாட்டார்கள். வலிமையால் மக் களை அடக்க முடிந்தால்கூட, அதனால் ஆட்சி பய னுடைய ஆட்சியாய் அமையாது. ஏனெனில் ஆட்சி யின் வெற்றி மக்கள் செயலில் இல்லை, சொல்லில் இல்லை. அவர்கள் கருத்தில், அவாவில், ஆர்வத்திலேயே இருக் கிறது. தம் செயலை மக்கள் செயலாக ஆக்கவல்ல— இன்னும் சிறப்பாக, தம் ஆர்வத்தையே மக்கள் ஆர்வ மாக மாற்றியமைக்கும் திறமுடைய—மக்கள் ஆர்வம் தூண்டி அதைத்தம் ஆற்றலாக்கிக் கொண்ட ஆட்சியே அத்தகு வெற்றிகாண முடியும். புறஆட்சியாளர் முறை இதுவானால், இனத்தின் அக ஆட்சியாளராகிய இன முதல்வர் முறை இதனினும் அரியதாய் இருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் ஆட்சி உரிமையாட்சியாய் இராமல், வலிமை நாடிய ஆட்சி யாய் இல்லாமல், அன்பாட்சியாகவே அமைவது இவ் வகையில் பெரும் பயனுடையதாகும். ஏனெனில் அவர்கள் மக்கள் அவா வழி அவர்கள் ஆர்வம் பெருக்கி விடுகின்றனர். அவ்வவாக்கள், ஆர்வங்கள் ஆகிய வற்றையே தம் இனக்குறிக்கோள்வழி திருப்பிவிடுகின் றனர். இந்த அவா ஆர்வங்களால் மக்கள் நாடிய வளமேயன்றி அவர்கள் நாடாத வளமும் அளித்து,

அவர்கள் அக உள்ளத்தையே ஆட்கொண்டு இன வாழ்வில் அவர்களை இயக்குகின்றனர்.

திருவள்ளுவர் நாட்டின் புறஆட்சியை இனமுதற் குழுவினர் அகஆட்சி வழிநிற்பதாகவே கொண்டார். இதனாலேயே அது நாடும் வளம் மட்டுமன்றி, நாடாவள மும் தருவதெனவிதந்துரைத்தார்.

'நாடென்ப நாடா வளத்தன, நாடல்ல
நாட வளந்தரும் நாடு'

இங்ஙனமாக இந்த நாட்டு ஆட்சி விளக்கம் 'நாடு' என்பதன் தமிழ்ச்சொற் பொருள் விளக்கமாகவும் அமை கிறது.

தனிமனித அவாநோக்கம், இனக்குறிக்கோள் ஆகியவற்றின் இணைவே பண்பு. அதன் பரப்பே பண் பாடு. அதன் புறவாழ்க்கைப் படிவே நாகரிகம். வாழ் வில் அது பரப்பும் இன்னலைகளே பண்புநயம் அல்லது நயத்தக்க நாகரிகம்.

பண்பு உணர்ச்சியில் தளிர்க்கிறது. அறிவில் மலர் கிறது. உணர்வில் கனிவுறுகிறது. அது குடும்பத்தில் தழைக்கிறது. சமுதாயத்தில் படர்கிறது. இனமுதல் குழுவில் செறிந்த உயிருருப் பெற்ற இனவாழ்வு ஆகி றது.

பண்பு குடும்பச் சூழலில் அன்பாகவும், பாசமாகவும் செயலாற்றுகிறது. சமுதாய வாழ்வில் நேசமாகவும், நேர்மையாகவும் ஒப்புரவாகவும் படர்கிறது. குடும்பத் தையும் சமுதாயத்தையும் இனத்தையும் இயக்கும் இன முதல் வாழ்வில் அது அருளாகவும், அன்புத் தன்மறுப் பாகவும், மொழி, கலை, இயல்நூல்கள், சமுதாய சமய அரசியல் அமைதியின் மூலப் பண்பு மரபுகளாகவும் வேரூன்றிப் பெருக்கமுறுகிறது.

தனி உயிரின் அவா இன்பமே நாடுகிறது. ஆனால் அது எப்போதும் இன்பம் அடைவதில்லை. இன்பம் எய் தினாலும் அது எப்போதும் நிலையான இன்பமாய் இருப்ப

தில்லை. பலசமயம் மாய இன்பத் தோற்றமுடைய துன்பமாகவும் அமைகிறது. இது ஏன்?

இனங்களும் சமுதாயமும் எப்போதும் எங்கும் வளர்ச்சியடைய வேண்டும், தழைக்கவேண்டும் என்பதில்லை. வளர்ச்சி குன்றி அலைக்கழியும் இனங்களும், தளர்ச்சியுற்று நலியும் இனங்களும் உண்டு. தம் பண்பின் அழிபாட்டைப் பிறஇனங்களுக்கு உரிமையாக விட்டுவிட்டுத் தடமழிந்துபோன இனங்கள்கூட உண்டு. பண்பிலும் கலையிலும் நாகரிகத்திலும் சிறந்த சுமேரிய, எகிப்திய, கிரேக்க, உரோம நாகரிகங்கள்கூட இந்நிலைக்கு ஆளாயின. இதன் விளக்கம் யாது?

பண்பு உணர்ச்சியினின்றும், அறிவினின்றும் தோன்றி இன உணர்வு நோக்கி வளர்வது. ஆனால் அது இன உணர்வுப்படி வரை எப்போதும் சென்றெட்டுவதில்லை; எட்டுமுன்போ, எட்டிய பின்னோ கூட அது மேலும் வளராமல் நின்றுவிட்டால், அது அழிந்துபடவே நேரும். ஏனென்றால் 'வளர்ச்சி நின்றால் தளர்ச்சி, அழிவின் தொடக்கம்' என்பது உயிரியக்கத்தின் நியதி. வளர்ச்சியற்ற நிலை என்பதோ, நிறைவு பெற்ற நிலை என்பதோ அதன் அமைதிக்குப் புறம்பானது. வளர்ச்சியின் நிறைநிலையில் புதுவளர்ச்சித் தொடக்கத்துக்குரிய ஓய்வு நிலை அல்லது இனத்துயில்நிலை கண்ட இனங்கள் மட்டுமே இதற்கு விலக்கு ஆகும்.

தமிழ் இனம் இத்தகைய துயல்நிலை கண்ட இனம் மட்டுமல்ல, கண்டுவரும் இனம். பிற இனங்கள் தாண்டி அது வாழ்வதன் மறைதிறவு இதுவே. மூவாயிர நாலாயிர ஆண்டுகளாக நீடித்துவரும் அதன் துயில் நிலையில் இனத்தாயாகிய வள்ளுவரின் குரல்—திருக்குறளின் முப்பால் இசை—அதனைத் தாலாட்டி வந்துள்ளது. முப்பால் வழி எழும் மறுமலர்ச்சி அதை விரைந்து துயிலெழுப்பும் என்று நாம் நம்பலாம்.

தனிமனிதன் நாடும் தன்னலச்சார்பான அவா இன்பமும், இனமுதல்வர் நாடிய இன நலமான பயனும் இணைந்த இணைவே பண்பு. அதுவே இன உணர்வு.

எல்லா இனங்களின் இனநலங்களும் ஒன்றேயானாலும், இனவளர்ச்சிப்படிக் கேற்பப் பண்புகள் இனத்துக்கு இனம், கிளையினத்துக்குக் கிளையினம் பொதுவாக மாறுபடுகின்றன. எந்த இனப்பண்பு இடையறாது வளரும் திறமுடையதாய், மனித இனமும் அது கடந்த உயிரினமும் இயற்கையும் அளாவிச் செல்ல இயல்கின்றதோ, அந்த இனம் மற்ற எல்லா இனங்களின் உயிர்ப்பாற்றலையும் தனதாக்கி, மற்றெல்லா இனங்களையும் வாழ்வில் ஊக்கித் தானும் புதுப்புது வளம் காணும்.

இந்த எல்லையற்ற பண்பு வளர்ச்சியே இன்பம். அதன் நிழல்களாகவே இனங்களும் சமுதாயங்களும் தனிஉயிர்களும் சிறிதளவான அல்லது தற்காலிகமான இன்பம் காண்கின்றன. அதன் பின்னணியான மூலமுதல் இன்பம், இன்பத்துள் இன்பங் காண, அதை உலகுக்குக் காட்டத் தமிழர் கிளர்ந்தெழல் வேண்டும். அவ்வினிய, இன்றியமையாப் பேரினப் பேரின்பப் பொறுப்பை இயற்கை தமிழ் மீதும், தமிழன் மீதும் சுமத்தியுள்ளது. ஏனெனில் முப்பாலமிழ்தம் தமிழமிழ்தமாகவும், தமிழர் கையமைந்த அமிழ்தமாகவுமே இயல்கின்றது. அதன் வாயிலாகத் தமிழர் இன்பத்துள் இன்ப உணர்வுபெற்று, இன்பத்துள் இன்பமாகிய பேரின்ப அலை இயக்கம் காண்பார்களாக!

## 9. மனநிறைவு

அவா, மன நிறைவு, ஏக்கம்!

அவாவால் எழுப்பப்படும் ஆர்வம் அவாவின் நிறைவேற்றத்துடன் முடிந்துவிடுகிறது. அந்த ஆர்வத்தின் அளவில், அவா நிறைவேற்றத்தின் கடு முயற்சி; அரு முயற்சியின் அளவில், இன்ப நுகர்வு ஏற்படுகிறது. ஆனால் நாடிய இன்பம் நீடிப்பதில்லை; நிலைப்பதில்லை. ஏனெனில் நீடித்த, நிலையான இன்பத்தின் உருவம் மன நிறைவே.

அவா நிறைவேற்றம் புதிய அவா எழுப்பலாம். பெரும்பாலான உயிர்களின் சிற்றின்ப அதாவது சிறுதிற இன்ப வாழ்வில் ஏற்படும் நிலை இதுவே. புதுப்புது அவாவால், புதுப்புது இன்ப நாட்டத்திலேயே பொதுவாக உயிர் இயங்குகிறது. நாடிய இன்பம் கைகூடாத இடத்திலும் பொதுவாக நிலைமை இதற்கு மாறுபட்டதன்று. விடா முயற்சியுடையவர் அல்லது ஒரே இன்பமேவிடாது'நாடுபவர் அதே இன்பநாடி மேலும் மேலும் முயல்வர். ஆனால் இதற்கும் ஓர் எல்லையுண்டு. முயற்சியினளவு நீடுந்தோறும் இன்பம் நீளுமானாலும், அவா, முயற்சி, இன்பம் ஆகிய மூன்றுமே எல்லை வரையறைக்குட்பட்டவை. இங்ஙனம் பலவகையிலும் நிலையற்ற சிற்றின்ப நாட்டத்திலேயே சிறுவாழ்வுகள் கழிகின்றன.

வள்ளுவர் பெருமான் அவாவை நல்லவா, தீயவா என்றும் வகுக்கவில்லை. தனிஉயிர் அவா, பொதுநல அவா என்றும் பிரிக்கவில்லை. நன்மை தீமை வேறுபாடின்றி, தன்னல அவாவை மட்டுமே அவா என்று குறித்தார். பொதுநல அவா தன்னல அவாவிலிருந்து அத்தன்னலந் துறந்த துறவு மூலமாக மெய்யுணர்தல், அன்பு, அருள், அந்தண்மை எனப் பல்வேறு பெயர்களுடன் விரிவுறுகிறது. தன்னல அவாவிலிருந்து

அவற்றை அவர் வேறுபடுத்தியதற்கு ஒரு காரணம் உண்டு.

அவாவுக்கு மன நிறைவு அல்லது நிலைத்த நீடின்பம் என்ற ஒன்று அதன் இயல்பிலேயே என்றும் இருக்க முடியாது. ஏனெனில் மன நிறைவு என்று ஏற்பட்டதோ, அன்றே அவா முற்றுப்பெற்றுவிடும், வளர்ச்சியுறாது; அதன் உயிர்ப்பண்பு ஓய்வுற்றழியும். மன நிறைவு தரும் அவா இங்ஙனம் அவாவுக்கு மாறான அல்லது அதி னின்றும் அடிப்படையிலேயே வேறுபட்ட ஒரு பண்பு ஆகிறது. பொதுநல அவா அவாவின் உயிர்த்தன்மை யுடையதாயினும், அதன் நிறைவேற்றம் இத்தகைய அடிப்படை வேறுபட்ட பண்பு உடையது அன்று.

அவா நிறைவேற்றமும் ஏற்படாமல், அவாவிய உயிர் புத்தவாவிலும் ஈடுபடாமல் இருந்தால், உயிர் ஒரே அவாவில் நீடித்து இடையறாது முயலவேண்டும். இத்தகைய அவாவுக்கு உயிரவாவின் பண்புகளில் ஒன்று—வளர்ச்சி—இருக்கமுடியாது. அத்துடன் உயிரின் விடாமுயற்சிக்கு ஓர் எல்லையுண்டு. அதன் முயற்சியில் எப்படியும் தளர்ச்சி ஏற்படாமலிராது. முயற்சி தளராத விடத்தும் ஆர்வம் தளராமலிராது. தளர்ச்சி ஓய்வுக்குக் கட்டாயம் வழி வகுக்கும். அவா நிறைவேறுமென்ற நம்பிக்கை கெடுமளவு ஆர்வக்கேடு ஏற்பட்டால், அதுவே, ஏக்கம், மனக்கசப்பு, மனமுறிவு, ஏமாற்றம்! அந்நிலையே அவா அழிவு, உள்ளத்தின் அழிவு, உயி ரழிவு ஆகும்.

தன்னல அவாவில் எதுவும் இங்ஙனம் நீடித்து உயிர் அவாவாக, நிலையான வளர்ச்சியுடைய அவாவாக உலவமுடியாது என்று காண்கிறோம். ஆனால் இன உணர்வு ஏற்பட்டபின் பொதுநல அவாவுக்கு இப் பண்புகள் யாவும் உண்டு. பொதுநல அவாவில் முயல் பவனது ஆர்வம் தோல்விகளால் சோர்வுறமாட்டாது; வெற்றி கிட்டும்வரை அது தளர்வுறாது; தோல்விகள் முயற்சியின் அருமையையே பெருக்கி ஆர்வம் வளர்ப் பது உறுதி. இது மட்டுமன்று. வெற்றியில் ஏற்படும்

அதே மனநிறைவு தோல்வியிலும் ஏற்படும். பொதுநல அவா எல்லையற்ற பரப்புடையதாதலால், வெற்றியிலோ தோல்வியிலோ ஏற்படும் இம்மனநிறைவு அவாவின் உயிர்வளர்ச்சிக்கு ஊறு விளைவிப்பதில்லை. அது இன எல்லையளாவி, பேரின எல்லை நாடி, கால இடம் கடந்து விரிந்துகொண்டே செல்கிறது.

பொதுநல அவா இங்ஙனம் அவாவின் உயிர்த் தன்மை மட்டும் உடையதாய், அதன் நச்சுச் சுழற் பண் பற்றதாய் இலங்குகின்றது. அதையே வள்ளுவர் பெருமான் அவாவடக்கம், அவாவற்ற நிலை, பிறப் பிறப்புக் கடந்த நிலை, கடவுள் நிலை என்று கருதினர்.

தன்னல அவா பொதுநல அமைதிகளுடன் பண்பாக இயன்ற இடத்திலன்றி, தனி உயிர் இன்பங் கூடத் தருதல் அரிது. அது தரும் தற்காலிக இன்பங் கூடப் பொதுநலப் பண்புடன் அது இணைந்ததனாலன்றி வேறன்று. இன்பத்தின் இம்மறைதிறவு அறியாதவர், இன்பத்தின் இவ்வுயிர்முதல் காணுதவர், தன்னல அவாக்களில் உழன்று, அவாவிய அவா நிறைவேறப் பெருது உழல்வர்.

முயற்சியுடையவர்க்குக் கூட, தன்னல அவா அம் முயற்சியினளவே வெற்றி தரும். தனி மனிதன் முயற்சி சிறு முயற்சியாதலால், அது தரும் வெற்றியும் சிறிது. நேர்மாருகப் பொதுநல முயற்சி அளவில் சிறிதாயினும், பெரிதாயினும், அலைஎதிர் அலையாக இனமுழுதும் தனி உயிர்களின் எண் கடந்து, இடங்கடந்து, காலங்கடந்து செயலாற்றுவதால், அது எல்லையற்ற நிறைந்த நீடு பயனுடையதாகின்றது. அது இனநலத்தை மட்டு மன்றித் தனிநலத்தையும் நிலையாக உண்டுபண்ணுவது. சில இடங்களில் தனிநலன் பயவாதது போலத் தோன்றுவது போலித் தோற்றமே. ஏனெனில் மன நிறைவு தனி உயிருக்கு உடனடிப் பயனுகவே கிடைக் கிறது. இது அவாவால் பெறமுடியாத பயன். புகழும் உடனடியாகக் கிடைக்கிறது. ஏனெனில் உண்மையான புகழ், வள்ளுவர் கருதிய புகழ், இனப்பயனே. உலகின்

புறப்புகழ்கூட அதன் புறப்பயனுகை, இவற்றின் மிகையாக வந்தடைவதேயாகும்.

மன நிறைவு, அவாவின்மை, இன்பதுன்ப நடுநிலை ஆகிய பண்புகளை வள்ளுவரும் போற்றுகின்றுர்; இடைக்கால, பிற்காலச் சமயவாணரும், மற்ற உலக அற நூலாரும் போற்றக் காண்கிறேம். ஆனல் வள்ளுவர் சொல் மரபை இவர்கள் அனைவரும் பேணுகின்றனரே யன்றி, அவர் பொருள் மரபை மறந்துவிடுகின்றனர். அதற்குத் தற்கால உலகின் உணர்ச்சி நிலையிலிருந்தே சான்றுகள் காணலாம்.

மற்றச் சமயவாணரும், அறநூலாரும் இக்கருத்துப் பற்றித்தரும் விளக்கங்கள் எல்லாரும் ஏற்கும் உரைகளாக இயங்கவில்லை. ஏற்றுலும், எல்லாரும் உண்மை எனப் பாராட்டிச் செயலில் போற்ற விரும்பும் கருத்துக்களாகக் காட்சி தரவில்லை. ஓர் உயர் கருத்து, சமயக் கருத்து, பழங்கருத்து அதாவது ஒரு தெய்வப் பெரியார் உரை என்றே அவை மதிக்கப்பெறுகின்றன. வள்ளுவர் வாயுரைகளே கருத்து வேறுபாடின்றி அனைவரும் ஏற்கத் தக்கனவாய் உள்ளன. ஏனெனில் உலக அறிஞர், கலைஞர், அறவோரிடையே அவர் ஒருவரே உணர்ச்சிக்கு அறிவு விளக்கம், அறிவுக்கு உணர்ச்சி விளக்கம், இரண்டுக்கும் உணர்வு அல்லது செயல்துறை விளக்கம் தருபவர் ஆகின்றுர்.

இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் கூறலாம்.

'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்பது மன நிறைவின் மாண்பு போற்றும் ஒரு தமிழ்ப் பழமொழி. இதுபோன்ற பழமொழிகள் எல்லா மொழிகளிலும் உண்டு. இவற்றுக்கு விளக்கம் தரும் இடைக்காலக் கதைகளும் பல. ஆனல் இப்பழமொழியும் இக்கதைகளும் போற்றும் மனநிறைவு வேறு. வள்ளுவர் போற்றும் மன நிறைவு வேறு என்பதை வள்ளுவர் குறட்பாக்களை ஒரு சிறிது புரட்டிப் பார்த்தால்கூடத் தெரிய வரும்.

இப் பழமொழி மரபுகளும் கதை மரபுகளும் காந்தியடிகள், டால்ஸ்டாய் ஆகியோர் பின்பற்றி வாழ்ந்த, போற்றிய எளிய வாழ்வின் பண்பேயாகும். இன்னமுதம் கூட மனநிறைவுற்றவனுக்கு இன்பம் தராது. கூழ்கூட மனநிறைவுடையவனுக்கு இன்பம் தரும். மனநிறைவு ஓர் அகப்பண்பு என்றும், அது விரும்பத்தக்க பண்பு என்றும் இப்பெரியார்கள் போதித்தனர், நம்பினர், உறுதியாகக் கொண்டு வாழ்ந்தனர். இதற்காக அவர்களைப் பெரும்பான்மையான பொதுமக்கள், பல பெருமக்கள் அருளாளர், தெய்வப் பிறவிகள் என்று போற்றத் தயங்கவில்லை.

ஆனால் போற்றுபவருள் ஒருசிலர்கூட இதைப் பின்பற்ற விரும்பியவரல்லர். அறிஞருள் பலர் இதன் உயர்வு தெரிந்தோ, தெரியாமலோ, மதித்தோ, மதியாமலோ, அது செயலுக் கொவ்வாத கருத்தென்று ஒதுக்கத் தயங்கவில்லை. அவர்கள் தரும் விளக்கமும் தவறென்று கூறமுடியாது. ‘காந்தியடிகள், டால்ஸ்டாய் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்கள் இந்த உலகுக்கு உரியவர்களல்லர். அந்த உலகுக்கே உரியவர்கள். அவர்கள் கூறும் ஒழுக்கமுறை சமயவாதிகள், வைதீகர்களுக் குரியது!’ இவ்வாறு சிலர் கூறுவர். ‘இல்லாமையையே ஒரு போற்றத்தக்க பண்பாக்கினால், அது ஏழைகள் முயற்சியைத் தடுத்து, ஆதிக்கவாதிகளுக்கு இன்துணையாகிறது!’ என்று காந்தீயத்தைப் பழிப்பவர் கூட உண்டு. அவர்களே இன்றைய உலகில் முற்போக்குவாதிகள் என்று குறிக்கப்படுவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

காந்தியடிகள், டால்ஸ்டாய் வள்ளுவர் பண்பில் நின்றவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் காந்தியடிகளையும், டால்ஸ்டாயையும் கண்டிப்பவர்கள் கருத்துக்களுக்கும் திருக்குறளில் மேற்கோள் காட்ட முடியும்.

**‘பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை, அருளிலார்க்கு**
**அவ்வுலகம் இல்லா கியாங்கு’**

இக்குறட்பா முந்திய கண்டனத்தை நினைவூட்டுகிறது.

**' உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல், மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து '**

இது உயிர் அவாவின் அருமை குறிக்கிறது. அதே சமயம் காந்தியடிகள், டால்ஸ்டாய் போன்ற அருளாளர் பணிகளைக் கண்டிக்கும் இக்கால முற்போக்காளர் உட் கருத்துக்கு இது வலிமை தருவது என்பதில் ஐயமில்லை. இப்புதிருக்கு விளக்கம் யாது?

இவ்வருளாளர்கள் பின்பற்றிய பண்புகள் திருவள் ளுவர் விளக்கிய பண்புகளே—அதற்கு அவர்கள் தந்த விளக்கங்கள் மட்டுமன்றி நாம் தரும் விளக்கங்களும் கூடத் திருவள்ளுவர் பண்பு விளக்கத்தின் சறுக்கல்கள் ஆகும். ஏனெனில் திருவள்ளுவர் பாராட்டியது முற்றி லும் எளிய வாழ்க்கையையோ, போதுமென்ற மனத் தையோ அன்று. தனக்குப்போதும் என்ற தன்னெளிமை வாழ்க்கையையே! அவாவையும் பேரவாவையும் உயர் அவாவையும் அவர் பொதுநலத் துறையிலேயே, அதற் குகந்த பண்புகளிலேயே, திறங்களிலேயே செலுத்தும் படி அறிவுறுத்தினர்.

' உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் ' என்ற அற ஆணை பொருட்பாலில், அரசியலில் தரப்பட்டது குறிப்பிடத்தக்கது. அது பொது வாழ்வும் இனவாழ்வும் இனமுதல் குழுவினர் பண்பும் குறித்தபால் ஆகும்.

இன்ப துன்பங்களில் அசைவிலாதிருத்தலே உயர் நெறி என்று போற்றுத கீழை உலகச் சமய நூல்கள், இதிகாச காவியங்கள், அறநூல்கள் இல்லை.

**'' மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும்**
**ஒத்திருக்கும் உள்ளத்து உரவோன் ''**

என்று நளவெண்பா தருமனை விதந்து புகழ்கின்றது. இது அழகிய கருத்தை அழகு மொழிகளில் வருணிப்ப தென்பதில் ஐயமில்லை. பகவத் கீதை இந்நிலையையே

பொன்நடு நிலை அல்லது சமாதி நிலை என்று பாராட்டுகிறது. மேனாட்டிலும் இக்கருத்தை வலியுறுத்திய பண்டை உரோம அறிஞர் இருந்தனர். ஆனால் இன்றைய மேலையுலகம் பொதுவாக இக்கருத்தை ஏற்பதில்லை. இதையும் இதுபோன்ற கீழைச் சமய அறிவுநெறிக் கருத்துக்கள் பலவற்றையும் அவர்கள் அறிவார்ந்த, ஆனால் இதயமற்ற, கலைப்பண்பற்ற, உண்மை ஆத்திகக் கடவுட்பற்றற்ற கருத்துக்களென்று கூறத் தயங்கமாட்டார்கள். ஏனெனில் அது பல உயர் அறிஞரைத் தீமையிலிருந்து மட்டுமன்றி, நன்மையிலிருந்தும் விலக்கி, அவர்களை வெறுப்பு வேதாந்திகாளகச் செய்துள்ளது. இக்கருத்துக் கடந்தும் இந்தியாவில் புத்தர்பிரான், மகாவீரர், காந்தியடிகள் போன்ற அருளாளர் நிலவியுள்ளனரென்றால், அது இக் கருத்தின் பெருமையன்று, இக்கருத்துக் கடந்த கீழ்த்திசையுலகின் பெருமையே எனலாம்.

ஒரு சாராரே ஏற்கக்கூடிய இதே வரண்ட கருத்துரையை நாம் வள்ளுவரிடத்திலும் காண்கிறோம். ஆனால் அவர் பண்பு அதன் வரட்சியை அகற்றி மூல முதல் அறிவுக் கருத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. இறைவன் இருள்சேர் இருவினையும் சேராதவன். வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் என்று அவர் கூறுகிறார். அதுபோலவே அவர்வழி நின்றவரும் வேண்டுதல் வேண்டாமை அற்றவரே. ஆனால் அவர் பிறர்க்கென வேண்டுபவர் ஆதலாலே, அவர் வேண்டாமை மட்டும் உடையவர் என்று குறிக்கப்பட்டார். வேண்டாமை தமக்கென வேண்டாமை என்பது தெளிவு.

> ‘வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை ;
> யாண்டும் அஃது ஒப்பது இல்’

> ‘வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை ; மற்றுஅது
> வேண்டாமை வேண்ட வரும்’

தமக்கென வேண்டாதார் பிறர்க்கென வேண்டுவன யாவும் எளிதில் கிடைப்பன: இப் பண்புடையார் கிடைத்தல்தான் அரிதென்பது தோன்ற, ‘வேண்டாமை

யன்ன விழுச் செல்வம்' என்ற வாய்மொழி வகுக்கப் பட்டது. தமக்கென வேண்டாதார் பிறர்க்கென வேண்டுதல் உடையவர் என்பதுதோன்ற 'வேண் டாமை வேண்ட வரும்' என்றும் குறிப்பிட்டார்.

சமய நூல்கள், அறநூல்களின் மெய்ம்மரபிழந்த வரட்டு வேதாந்த நீதி வள்ளுவர் மூலமெய்ந்நூலில் முழு தும் நல்லுணர்வார்ந்த பொன்னுரையாதல் காணலாம். அதன் உட்பண்பையறியாத இடைக்கால, பிற்கால அறிஞரின் கிளிப்பிள்ளைக் கூற்றுக்களிலேயே நாம் முரண்பட்ட கருத்தலைகளைக் காண்கிறோம்.

இயற்கையின் இயற்கையமைதி ஊழ் ஆகின்றது. அது எதிர்த்து வெல்லுதற்கரியது. ஆனால் இயற்கையின் உயிராகிய இறைவனே கதிரவனை இயக்கி, அதன் விளைவாக, வான் (மழை) மூலம் இயற்கையின் ஊழில் 'உயிர்' என்ற ஒரு புதிய ஆகூழைப் படைத்துள்ளார். சமுதாயத்திலும் இனத்திலும் அரசியலினத்திலும் இது போல இறைவன் கூறுன அந்தணரும் அரசரும் பண்பு என்ற மற்றோர் ஆகூழைப் படைத்து வளர்க்கின்றனர். இயந்திரங்கள் இயற்கையின் ஊழைக்கடக்கத் தன் கருவி மூலம் இயற்கையாற்றலையே பயன்படுத்துவது போல, உயிர் உயிர்க் கருவியாகிய உடல் மூலம் அதே ஊழைப் பயன்படுத்தி அவ்வூழை ஓரளவு வெல்கிறது. அதுபோல, சமுதாயத்தில் தனி மனிதன் முயற்சிகள் இந்த இரு ஊழுடன் இனமுதல்வர் ஆக்கிய பண்பாகிய சமுதாய ஆகூழையும், அரசனாக்கிய சட்டதிட்டங்க ளாகிய அரசியல் ஆகூழையும் பயன்படுத்தி ஊழ் கடந்து வளரலாகும். இவற்றை எதிர்த்தவழி, இவையே முயற்சியின் போகூழ், இழவூழ் ஆகிவிடும்.

வள்ளுவர் அவாவறுத்தலின் பின் ஊழ் அதிகாரம் அமைத்ததும், அவ்வதிகாரங்கள் அறம், பொருள் ஆகிய இரண்டு பால்களின் சந்திப்பில் இடம் பெற்றதும் இதனாலேயே யாகும்.

வள்ளுவர் வகுத்த மனநிறைவு இங்ஙனம் தன்னல மறுத்த மனநிறைவு ஆகும். அது தனி மனிதனுக்கு

இன்பமும் அமைதியும் தருவது. நடுநிலையளிப்பதால் அது அறிவு வளர்ப்பது. பொதுநல அவா வளர்ப்பதால் உயிர்நலம் உடையது. தனி மனிதனுக்கும் இனத்துக்கும் அது புகழும் வலிவும் தருவது ஆகும்.

வள்ளுவர் வகுத்த மனநிறைவுப் பண்பைத் தமிழர் இழந்து ஊழூழிக் காலம் ஆய்விட்டது. ஆனால் தமிழன் படிப்படியாகத் தட்டுக்கெட்டு வந்துள்ள ஊழிகளே இவை. தன்னலப் போட்டியும் பொறுமையும், ஆதிக்கப் பேரவாவும், இவற்றுக்கு நேர்மாறான அடிமைத் தனமும் தன்மதிப்பின்மையும் இன்றுவரை தமிழினத்தினிடம் செறிந்துள்ளன—பிற இனங்களைப் பார்க்கிலும் மிகுதியாகத் தோய்ந்துள்ளன என்பதில் ஐயமில்லை. விழிப்புற்றுவரும் தமிழகம் எல்லா வகைப்பட்ட நேரிடை ஆதிக்கவாதிகளின் ஆதிக்கத்திலிருந்தும்; மறைமுக ஆதிக்கவாதிகளின் பசப்பிலிருந்தும், மாயங்களிலிருந்தும்; இவற்றுக்கு உறுதுணையாயிருந்து இவற்றை வளர்க்கும் அடிமைத் தனத்திலிருந்தும், குறுகிய தன்னலத்திலிருந்தும் விடுபடவேண்டும். விடுபட்டு, பொதுநலப் பேரறிஞரான திருவள்ளுவரின் வள்ளுவப் பொற்சுரங்கம் கண்டெடுத்து அறிவுழைப்பால், ஆராய்ச்சியால் அதன் அறிவு மரபு துலக்கி, இன்பத்துள் இன்பத்தைத் தானும் உண்டு உலகுக்கும் வழங்குமாக.

## 10. இன வாழ்வு

இன்பம், இனம்!

இன வாழ்வு, இன்ப வாழ்வு!

இன்பத்துக்கும் இனத்துக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? உண்டாயின், அத்தொடர்பு யாது?

தனி உயிர் அல்லது தனி மனிதன் இன்பக் குறிக்கோளுடன் இணைந்த சிறு குழுவே குடி அல்லது குடும்பம். தனி மனிதன், குடும்பம் ஆகிய இரண்டின் இன்பக் குறிக்கோளில் இணைந்த அகல் குழு, பெருங்குழுவே சமுதாயம், இனம்! ஊர், நகர், நாடு ஆகிய எல்லை கடந்து உலகளாவியும், தலைமுறை கடந்து கால எல்லையளாவியும் வளரும் சமுதாயத்தின் வளர்ச்சியையே நாம் இனம் என்கிறோம்! எனவே இனம் என்பது தனி உயிரின் இன்பக் குறிக்கோளின் கால இடங் கடந்த உச்ச உயர் எல்லை விரிவேயாகும்.

இன்பம், இனம் ஆகியவற்றின் தொடர்பு இதுவே.

இன்பம், இனம் ஆகிய தமிழ்ச் சொற்கள் ஒரே மூலத்திலிருந்து தோன்றிய தொடர்புடைய சொற்கள். தமிழ் மரபின் இத்தொடர்புக்குரிய விளக்கமும் இதுவே.

தமிழ் மரபில் நின்று, அறிவு மரபில் முன்னேறி இவற்றின் தொடர்புகளை இன்னும் ஆழ்ந்து ஆராய்வோம்.

இன்பங்கள் யாவற்றையும்—இன்ப நாடிய அவாக்கள் அனைத்தையும்—கீழ்த்திசைச் சமய அறிவு நூலார் மூன்று என வகுத்தனர். அவை மண், பெண், பொன் என்பன.

இவற்றுள் மண் அவா என்பது நில அவா அன்று. ஏனெனில் நில உடைமை உடைமைகளுள் அதாவது செல்வங்களுள் ஒன்று. அது செல்வ அவாவாகிய

பொன்னவாவினுள் அடங்கும். எனவே மண் அவா என்பது நிலத்தில்வாழும் மக்களை ஆட்கொள்ளும் உரிமையை, ஆட்சி உரிமையை, ஆதிக்கச் செல்வத்தைக் குறிப்பது ஆகும்.

பொன் அவா இதுபோல உலோகங்களில் ஒளிமிக்கதான தங்கத்தைப் பற்றியதன்று. தங்கத்தால் எளிதில் விலைகொள்ளத்தக்க எல்லாவகைச் செல்வத்துக்கும் தங்கம் இங்கே அறிகுறி ஆகும். எனவே பொன் அவா என்பது செல்வ அவாவேயாகும்.

பெண் அவா பெண்பாலரை விரும்பும் அவா அன்று. ஏனெனில் உலகில் ஒரு நேர்பாதி உயிர்கள் பெண்பால் உயிர்களே. இந்த ஒருபாதியும் பெண்பாலரை அவாவ முடியாது. எனவே இங்கே பெண் அவா என்பது குடும்ப வாழ்வின் அவாவைச் சிறப்பாகவும், புலனெறி இன்ப அவாக்களைப் பொதுவாகவும் குறிப்பது ஆகும். இது ஆண், பெண் உயிர் அனைத்துக்கும் பொதுவே.

இம்மூவகை அவாக்களிலும்—பிற உயிர்களை அடக்கியாளும் அவா, புலநுகர்வு இன்ப அவா, பொருளவா ஆகிய இந்த மூன்றிலும்—முக்கியமான அவா எது!

இதை அறிந்தால் நாம் இன்பத்தின் தன்மையையும், இனத்துடன் அதற்குள்ள தொடர்பையும் இன்னும் ஆழ்ந்து காணலாம்.

தமிழ்ப் பாகவத புராணமுடையார் இம்மூன்றினுள் ஒன்றை முற்றிலும் நழுவவிட்டுவிட்டு, புதிதாகக் குழந்தை அவா என்ற ஒன்றைச் சேர்த்து, அம்மூன்று அவாக்களும் வளரும் வகையைக் கவின் நய அழகுடன் புனைந்துரைத் துள்ளார்.

**'விழைவு எனப்படுகின்றது மென்மெலத்**
**தழல் விரிந்த கனகத்து அரும்பி, மென்**
**மழலை மாதர் மருங்கிற் படர்ந்து பைங்**
**குழவி மீது கொழுந்துவிட்டோங்குமால் ;'**

'அவா என்பது ஒரு பொற்பூங்கொடி. தழலில்

அல்லது தீயில் பட்டு உருகி மாசகன்று ஒளி வீசும் தங்கத்தில் அது தளிர்க்கிறது. குழந்தைகள் பேச்சுப் போல இனிய மொழிபேசும் பெண்டிர்ப்க்கமாகக் கொடி போல் படர்கின்றது. பின் தழைத்துக் கொழுந்துவிட்டுக் குழந்தைமீதே சென்று கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்குகின்றது!

புராண இலக்கியத்தில்—தமிழ்ப் புராண இலக்கியத்தில்—தமிழ் இலக்கிய முழுவதிலுமேகூட எளிதில் காண முடியாத இனிய சொல்லழகுடைய இசை ஓவியம் இது—ஆழ்ந்த பொருள் பொதிந்த மெய்யோவியமும்கூட! வெறுப்புத் துறவும் கட்டுக் கதையும் பாடவந்த புராண முடையார் தமிழ் மரபில் சறுக்கி அதன் இன்பச் சேற்றில் குளித்தெடுத்த ஒரு முத்து இது!

இப்பாடல் காட்டும் மெய்ம்மைகளில் ஒன்று—வள்ளுவர் முறையிலேயே, ஆசிரியர் கூறிய மெய்ம்மைமட்டுமன்றி, கூறுதுவிட்ட மெய்ம்மைகளில் ஒன்று—அவர் மண் அவாவை மூன்றவாக்களிலிருந்து முற்றிலும் நழுவ விட்டதே யாகும்.

ஆட்சியவா எல்லா உயிர்களுக்கும் உரியதுதான்—குடும்ப எல்லையிலிருந்து உலக எல்லைவரை, சிறு குழந்தையிலிருந்து மாளும் தறுவாயிலுள்ள கிழவர்வரை, பண்படாப் பழங்குடிகளிலிருந்து பண்பட்ட உயர் வகுப்பினர் வரை, குகை மனிதர் காலத்திலிருந்து தற்காலப் பறவை மனிதன்வரை—பிறரை ஆள விரும்பாத உயிர் இல்லை. ஆயினும் இது உள்ளார்ந்த அக அவாவேயன்றி வெளிப்படக் கிளர்ந்த அவாவல்ல. வெளிப்படக் கிளர்ந்த உருவில் அது உச்ச உயர்படி அவா, உச்ச உயர்படி உயிர்களும் மனிதனுமே நாடும் அவா ஆகும்.

இவ்வவா மற்ற இரண்டு அவாக்களையும் தன்னகம் கொண்டதாக மக்கள் எல்லாராலும் கொள்ளப்படுகிறது. மண்ணுள்பவருக்கு மற்ற இரண்டும் எளிது என்று கருதாதவர், கூறுதவர், பாடாதவர் இல்லை. ஆயினும் ஆட்சியாளர் ஆதிக்க ஆட்சியாளராயிருந்தால் அவர்கள் இரண்டில் எதுவும் பெறுவதில்லை. அன்பாட்சியாளரா

யிருந்தால் இரண்டும் பெறுவர். எனவே இது சிறு பான்மையவா ; சிறுபான்மையிலும் ஆதிக்க நீங்கிய வழியன்றி நிறைவேருத அவா. நிறைவேறிய வழியோ, அது மற்ற இரண்டு அவாவின் இணேவேயன்றி வேறன்று. பாகவத புராணமுடையார் அதை விலக்கிய தற்கு இவையே காரணங்களாய் இருத்தல் கூடும்!

எப்படியும் ஆதிக்க வடிவிலேயே மண் அவா எண்ணப்படுவதாதலால், இது நாடுபவருக்கும் இன்பம் தருவ தில்லை, பிறருக்கும் இன்பம் தரமாட்டாது. அதைப் பாடுவதும் பிழைப்புக்கு வழியன்றி இன்பமாக மாட்டாது. பாகவத புராணமுடையவர் அழகிய கவிதை வருணனே அதைத் தீட்டாது விட்டது இயல்பேயாகும். அவர் கவிதை மொழியிலே மற்ற அவாக்களின் அன்புப் பிணேப்புடன் இது இணேயாதது என்பது தெளிவு.

புலனுகர்வின்ப அவா, செல்வ ஆவா ஆகிய மீந்த இரண்டு அவாக்களில் செல்வ அவாவே பெரும்பாலான வர் நாடுகிற அவா என்பதில் ஐயமில்லை. புலனுகர் வின்ப நாடுபவர் அவ்வின்பத்துக்கும் அடிமைப்படு கின்றனர், பிறர் இன்ப நாட்டத்துக்கும் எளிதில் அடி மைப்படுகின்றனர். ஆகவே ஆதிக்க நாடிய உச்ச உயர் அவாவாளரைப்போலவே அவர்களும் தொகை யில் சிலர். அச்சிலரும் உண்மை இன்பம் பெறுவதில்லை. ஆதிக்க வாதிகள் பெறும் மதிப்பைக்கூடப் பெறுவ தில்லை. அவர்கள் எல்லாராலும் இழிக்கப்பெறுவர். இந்நிலையில், இன்பங்கள் அனைத்துக்கும் அடிப்படை யான செல்வத்தையே, பொன் அவாவையே உலக மக்களில் மிகப்பெரும்பாலார் நாடுவதில் வியப்பில்லை.

மூன்று அவாக்களிலும் அடிப்படை அவா பொன் அவா. ஆனல் அதன் தன்மையறிந்தே தமிழர் அதற்கு அப் பெயரிட்டுள்ளனர் என்னலாம். அது பொன் போலப் பகட்டான அவா. ஆனல் பயன்தரும் அவா வன்று. பொன் செல்வத்துக்கு அறிகுறி. அது செல்வ மன்று. அதுபோலவே செல்வம் இன்பத்துக்குக் கருவி, இன்பமன்று. பொன்னும் செல்வமும் மனித உலகி

லன்றி உயிருலகில் இன்பந்தராமை இதை வலியுறுத்தி விளக்கும். அறிவுடைய மனிதன் படைத்த செயற்கை அவா அது. அது அவன் செயற்கை அறிவுத் திறம். கருவியைப் பொருளாகவும், குறியீட்டை முதலாகவும் கொள்ளும் அவனுடைய இரட்டிப்புக் கண்கட்டுமாயம். அவன் இயற்றிய அம்மாயத்தில் அவனே கிடந்து உழன்று எல்லையிலாத் துன்பங் காண்கிருன்.

இன்பநாடிய மூன்று அவாக்களும் இன்பந்தரமாட்டாமை அறிந்தே வள்ளுவர் அவா அகற்றுக, பற்று நீக்குக என்று கட்டளைப்படுத்தார். தன்னல அவாக்குறிக் கொள்ளும் இன்பத்தைக்கூட நாடாதே என்று அவர் கூறினர்.

' இன்பம் விழையான், இடும்பை இயல்பு என்பான்
துன்பம் உறுதல் இலன் '

'இன்பத்தை நாடி ஏங்காதே. துன்பம் வந்தபோது, வருவதுகண்டு பதைக்காதே, துன்பம் இயற்கையானது தான் என்று எண்ணு. அப்போதுதான் நீ துன்பம் அடையமாட்டாய். (இன்பம் அடைவாய்)' என்று வகுத்துணர்த்தினர். பிற்காலச் சமயவாணர், இதன் முழுமைக் குறிப்புணராமல், இன்பமும் துன்பம் போல வெறுக்கத்தக்கது என்று கொண்டனர். 'இன்ப நாட்டமே தவறு, வெறுப்பே அல்லது விருப்பு வெறுப்பற்ற உணர்ச்சியற்ற கல் தன்மையே உயர்நிலை' என்று நாட்ட முற்பட்டனர்.

இது தவறு என்பதைச் சமயவாணர்களின் உரைகளும் உயர் பண்பாளர் செயல்களும் ஒருங்கே காட்டும்.

உலகு நலம்பெற உழைப்பது உயர்ந்தோர் பண்பு. இதனைப் போற்ருத சமயவாணர் இல்லை. ஏனெனில் இதுவே உண்மைச் சமயம். ஆனல் இது விருப்பு வெறுப்பின்மையாகாது. தற்பற்று தன்னலமின்மை மட்டுமேயாகும்.

புத்தர்பிரான் உயிர்களனைத்தையும் நேசி என்ருர். இதுவும் அப்படியே. அது தற்பற்றின்மை ஆகலாம்,

பொதுநலப் பற்று ஆகலாம். விருப்பு வெறுப்பின்மை ஆகமாட்டாது.

வள்ளுவர் பெருமான் தனிஉயிர் அவாவும் தனி உயிர் இன்பமும் தவிர்த்து, தனி உயிர்த் துன்பத்தை இயல்பாக ஏற்று, பொதுநல இன்பமும் பொதுநல இன்ப நாட்டமும் பெருக்கவே ஆணையிட்டார். அதுவே வள்ளுவக் கருத்துப்படியான உண்மை இன்பம் ஆகும்.

மூன்று இன்ப நாட்டங்களுக்கும் தமிழர் கொடுத்த பெயர்—மண், பெண், பொன்—இந்த உண்மையைச் சுட்டிக் காட்டுபவை ஆகும்.

பொன் அவா வேறு, கவர்ச்சி வேறு, செல்வ விருப்பம் வேறு, அழகு விருப்பம் வேறு. செல்வ விருப்பம் கருவி கடந்த இன்பக் கவர்ச்சி நோக்கி மனிதனை இழுக்கிறது.

சிற்றின்ப நுகர்வு படிப்படியாக மனிதனைக் குடும்ப வாழ்வை நோக்கி, அதனைப்பேணும் 'பெண்மை' நிலை நோக்கி முன்னேறச் செய்கிறது.

மண்ணாசை மண்ணாளும் மன்னனாசையாய், மன் பதையின் எல்லைநோக்கி மனித அவாவை விரிவுறச் செய்கிறது.

மூன்றிலும் மனிதனின் இன்பம் படிப்படியாக அக நாடுகிறது, இனம் நாடுகிறது.

பொன், செல்வம் ஆகியன இன்பக்கருவி, இன்ப மன்று.

பெண் அவா அதாவது குடும்ப அவா புலனுணர் வின்ப அவா, தனிஉயிர் அவா, புறஅவா! அது தற்பற்றி லும் தன்னலத்திலும் தொடங்கிக் குடும்ப அளவுக்கே மனிதனைக் கொண்டுவிடுகிறது. குடும்பப் பண்புடன் இணையும்வரை அது அக அவா ஆவதுமில்லை. தற்பற்றை முற்றிலும் அழிக்க உதவுவதுமில்லை. ஆனால் அது மற்ற அவாக்களைப் போன்றதன்று. குடும்பப் பண்பில்

ஈடுபட்டகணமே, அது அக நாடுகிறது. எல்லை விரிவுறுகிறது.

'பெண் அவா' பொதுவாகக் குடும்பம் கடந்து செல்வதில்லை. ஆனால், பெண்ணின் அவா, 'பெண்மை' அவா குடும்பங்கடந்து செல்லும்! இந்த அவாவின் பெயராகப் 'பெண்' என்ற சொல் வழங்கப்பட்டதன் காரணம் இதுவே. அத்துடன் பெண் வழிநின்ற பெண் அவா தலைமுறை கடந்து செல்லும். இதனையே பாகவத புராண முடையார் வள்ளுவர் வழிநின்று மக்கள் இன்பமாக அழகுபடச் சித்தரித்தார்.

மண்ணாட்சி அவா, ஆதிக்க அவா, அக அவாவே. ஏனெனில் அதில் தன்முனைப்பு மிகுதி. அத்துடன் அது இனமளாவப் பரவும் அவா. ஆனால் அது விரும்பும் ஆட்சி ஆதிக்கத்தால் நிலைபெறுவதன்று. குடும்பத்தில் மெல்லப் பயின்ற அன்பாட்சியாலேயே அது நிறைவு பெறுவது ; மண்ணில் வாழ் உயிர்கள் பற்றிய அவாவாக அது குறிக்கப்படுவதன் காரணம் இதுவே.

மூன்றவாவும் விட்ட இடம் உண்மையில் மூன்றவாவும் நிறைவுற்ற இடமே—இன ஆட்சி, ஆனால் இனமளாவிய அன்பாட்சி அவாவேயாகும். இனக்குறிக்கோளே கடவுளாதலால், அதுவே கடவுட் பற்றும் ஆகும்.

தற்பற்றொழித்தவன்கடவுட்பற்றை, இனப்பற்றைக் கைக் கொண்டு முழுநிறை இன்பம்—தனக்கும் யாவருக்கும் இன்பம் நாடுகிறான். வள்ளுவர் கோட்பாட்டின் அடிப்படை இதுவே.

மண், பெண், பொன் ஆகிய மூன்றிலும் பாகவத புராணமுடையார் மண்ணை நீக்கியதுடன், பெண்ணைக் கூடக் கவர்ச்சிக்குரிய நிலமாகமட்டுமே காட்டினார். அத்துடன் பெண் அவாவையே விரித்து மக்கள் அவா என்று அதன் வளர்ச்சி காட்டினார் இதன்மூலம் வள்ளுவர் வழிநின்று இன்பவாழ்வின் முழுநிறைவைப் 'பெண்மை' அவாவாக அவர் உணர்ந்தார் என்னலாம்.

பெண்மை அவா மனிதரைத் தற்பற்றிலிருந்து தன் துணையுடன் வாழும் குடும்ப வாழ்வில் ஈடுபடுத்துகிறது. குடும்ப வாழ்விலேயே தற்பற்றும் தன் தலைமுறைப் பற்றும் கடந்து மகவின்பம் நாட வைக்கிறது. பின் அது சமுதாயம் நோக்கி விரிவுறுகிறது. இன்பக் கருவியாகிய பொன்னும், அன்பாட்சி யற்ற மண்ணும் இங்ஙனம் விலக்கப்பட்டு, உண்மை அன்பாட்சியாகிய மன்பதை இன்பம் 'பெண்மை' உருவில் குருத்துத் தளிர்த்து மலர்ச்சி யடைந்து வளர்கின்றது.

பெண்மையின் இவ்வுயர்வு கருதியே வள்ளுவர் பெண்மைக்குமட்டும் திண்மையை உரிமையாக்கினர். பெண்மை வழிநின்ற ஆணும் இத்திண்மை பெற்றுத் திண்ணியன் ஆகிறுன். திண்மை வாய்ந்த கற்புடைய மாதர் பெய்யென மழை பெய்யும். அதுபோலவே திண்ணிய எண்ணமுடையார் எண்ணிய எல்லாம் பெறுவர் என்று வள்ளுவர் குறித்தார்.

**'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பு என்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்'**

**'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'**

**'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்'**

இந்த மூன்று குறட்பாக்களும் இக்காலத்தில் பலருக்குப் புதிராகத் தோற்றுவது இயல்பு. ஆனால் மூன்றையும் ஒரு சேர நோக்கினால், புதிரில் பாதி தெளிவாகி விடும். பெண்மை, கற்பு, திண்மை என்பவை இனப் பண்பில் உறுதி, இன நலத்தில் உறுதி, இன ஆர்வத்தில் உறுதி என்ற பொருள்கள் உடையவை. இவை யுடையோர் அவ்வச் சூழலில் செயற்கரிய செய்பவர் ஆவர்.

செல்வம் நிறையப்பெற்றவர் பலர் கல்வியுடையவரைப் பார்த்து அழுக்காறு கொள்ளல், காணலாம்.

கல்வி நிறையப் பெற்றவரும் அவ்வாறே செல்வரைக் கண்டு அழுங்குதல் அரிதன்று. இரண்டும் உடையவரோ இன்ப வாய்ப்புடையாரையும், அவ்வாய்ப்புடையார் ஆதிக்க வாய்ப்புடையாரையும் கண்டு ஏங்குவர். இச்சுழலில் அனுபவ அறிவைச்சுழலவிடுவோர் உண்மை இன்பம் இவற்றின் நாட்டத்தில் இருக்கலாம், இவற்றைப் பெறுவதில் இல்லை என்று காண்பர்.

இன்பத்தின் மறைதிறவு தன்னலமல்ல, தற்பற்றல்ல; இரண்டும் கடந்தது. அது புறநோக்கி உலகளாவியது கூட அன்று, அக நோக்கியது. ஆனல் அது செல்லும் தளம் அகத்தின் அகம்—அங்கே அகம்புறம் என்ற வேற்றுமை கிடையாது. உயிரின் தற்பற்றுத் தன்னைத்த இனம், தன்னைக் கடந்த தன் விரிவாகிய ஓர் அகப் பண்பை நாடுகிறது. இதுவே இனப் பற்று, இன நலம், இன்பம்.

ஆதிக்கவாதி பிறர் மதிப்பை விரும்புகிருன். செல்வனும் அப்படியே. ஆனல் மனமார்ந்த மதிப்பு இல்லாவிடில், மறைவில் தூற்றதலுக்கு ஆளாவதறிந்தால், அவன் சீறுகிருன், சினங்கொள்கிருன், புண்படுகிருன். உண்மையான மதிப்பு அன்பு என்று கண்ட மன்னர் பலர் புகழ் நாடினர். பிறர்—வல்லாட்சியால் அடக்கியாண்டு மக்கள் வெறுப்பை ஏற்ற பலர்—இயல்பாக ஒருசில நண்பரிடம் அல்லது இன்பத்துணைவரிடம் பாசம் பெருக்கி அவர்கள் வயப்பட்டு ஆண்டது காண்கிருேம்.

ஆதிக்கத்தாலும் செல்வத்தாலும் பெறமுடியாத அன்பு மதிப்பைப் பொதுநலப் பற்று ஒன்ருலேயே பெறமுடியும். அதுவே உண்மை ஆட்சி. அதுவே உண்மைச் செல்வம். அதுவே உண்மை இன்பம். இன்பத்தைப் பெருக்குவதும் அது. துன்பத்தில் ஆறுதல் தருவதும், துன்பத்தை இன்பமாக்குவதும் அது. எல்லாவற்றையும் பொன்னுக்கும் வள்ளுவர் கண்ட சிந்தாமணி அதுவே.

வள்ளுவர் குறிப்பிட்ட இன்பம், இன்பத்துள் இன்பம் பொதுநலத் தொண்டால் வரும் மனநிறைவமைதியே. உலகில் வள்ளுவ ஆட்சி, காந்தீய ஆட்சி, டால்ஸ்டாயிச ஆட்சி பரப்பி அந்த இன்பத்தின் இன்பம் பெருக்குவோமாக.

## 11. மலர்ச்சி, மறு மலர்ச்சி, புது மலர்ச்சி

கருநிலை, முதிரா இளமை, கட்டிளமைப் பருவம், முதுமை !

தனி உயிர் வாழ்வில் காணும் வளர்ச்சிப்படிகள் இவை.

இந்த வளர்ச்சிப்படிகள் எல்லாம் எல்லா உயிரினங்களிலும் இருப்பதில்லை. ஏனெனில் உயர் உயிரின வாழ்வில் மட்டுமே இந்தப்படிகள் உண்டு. இனவாழ்வின் கருநிலைக் காலத்தில் இந்தப்படிகள் எதனையும் நாம் காண்பதில்லை. ஏனெனில் தனி உயிருக்கு இந்த இன, வாழ்வுப்படியில் கருநிலைப்படி ஒன்று மட்டுமே உண்டு. தனி உயிர் வாழ்வின் கருநிலை, முதிரா இளமை, கட்டிளமை முதலிய பருவங்கள் இனவாழ்வின் அதேவகைப் பருவங்கள் கழிந்தபின் அவற்றின் கூறுகளாக அமைபவையே யன்றி வேறல்ல என்பதை இது நமக்கு விளக்குகிறது.

இனவாழ்வின் கருநிலைக் காலத்தில் தனி உயிர் வாழ்வே இனவாழ்வின் ஒரு தலைமுறையாய் அமைகின்றது. அந்தப் படியிலுள்ள உயிரினங்களில் இன்னும் அவ்வாறே இருக்கிறது. ஏனெனில் கருநிலையிலேயே உயிர் ஒரு தலைமுறை கடந்து அடுத்த தலைமுறையின் கருநிலைக்குத் தாவுகிறது. இளமை, மூப்பு, சாக்காடு அதற்கு இருப்பதில்லை. ஏனெனில் இனம் அந்நிலைகளைச்சென்று எட்டவில்லை. தொடக்க அணு உயிர்களின் நிலை இது. இன வாழ்வின் முதிரா இளமைப் பருவத்தில் கருநிலைப் பருவம் முட்டைப் பருவமாயிற்று. இனவாழ்வின் கட்டிளமைப் பருவத்திலோ கருநிலை கருப்பை நிலையாகவும், முதிரா இளமை வளர்ப்புப் பருவமாகவும், கட்டிளமை இன வாழ்வுப் பருவமாகவும் மாறின். முதுமையும் சாக்காடும் இன உயிரின் தனி

வாழ்வு கடந்த இனப் பொது வாழ்வு நிலைகள்—இனத்தின் அடுத்த தலைமுறை அல்லது தலைமுறைகளை நோக்கியும், எதிர்கால இனவளர்ச்சி நோக்கியும் திரும்பும் பருவங்கள் ஆகும். பழைய தலைமுறையில் தோன்றி, தனிஉயிர் வாழ்வுவேறு, தலைமுறை வேறு என்று ஆகிய உயிரின்படி இதுவே.

நாம் கட்டிளமை, பருவ மலர்ச்சி என்று கூறுவதன் பொருள் இதுதான்—தனியுயிர் வாழ்வும் தலைமுறை வாழ்வும் இனவாழ்வின் முழு மலர்ச்சியுடன் ஒன்று படுகிற பருவம் அது என்பதே. இது கடந்த தனி உயிர் வாழ்வு அதன் தளர்ச்சி, ஓய்வுக் கூறு மட்டுமே—அடுத்த தலைமுறையின் கருநிலை, முதிரா இளமைப் பருவங்களைப் பேணி வளர்ப்பதற்காகவே அது இத் தளர்நிலையை மேற்கொண்டுள்ளது.

இளமையைப் பாடிய புலவர், கவிஞர் பலர்—முதுமையைப் பாடியவர் சிலர், மிகச்சிலர், கிட்டத்தட்ட இலர் என்னலாம்! இளைஞர் நங்கையரின் காதலைப் பாடிய கவிஞர், அதைத் தீட்டிய கவிதை, காவிய எழுத்தாளர் மிகப்பலர்—முதுமையில் கருத்தைச் செலுத்தியவர் அறவோர், அவர்கள்கூட மிகமிகச் சிலரே. ஆயினும் முதுமையில்தான் உயிரினத்தின் முழுநிறை இலக்கு—தாய்மை அன்பு—தந்தைமை வீறு கருக்கொண்டுள்ளது. கடவுளை அறவோர், அருளாளர் இந்தத் தாய் வடிவிலும், தந்தை வடிவிலுமே காண்கின்றனர்

காதலை இளமைக்குமட்டுமே உரிய உணர்ச்சியாகக் கொள்வர் கலைஞர். உலகின் பிற இனங்களிலெல்லாம் கலைஞர் கவிஞர் மட்டுமின்றி அறிஞர் அறவோர் இந்நிலை கடந்து உயர்வடையவில்லை. அவர்களிடையே உள்ள வேற்றுமையெல்லாம் கலைஞர், கவிஞர் அதில் ஈடுபடுகின்றனர் என்பதும்; அறிஞர் அதன் பக்கம் கருத்துச் செலுத்தவில்லை என்பதும்; அறவோர், அருளாளர் அதனை இழிபண்பாகக் கருதுகின்றனர் என்பதும் மட்டுமே. ஆனல் தமிழினம் ஒன்று மட்டும்—சிறப்பாகத் தமிழினத்தின் முழுநிறை இனஅறிஞர், இனக்கலைஞர்,

இன அறவோர், அருளாளர் ஆன திருவள்ளுவர் ஒருவர் மட்டும்—காதலை இளமை கடந்த, உணர்ச்சி கடந்த, அறிவு கடந்த பண்பாகக் கண்டார். காதலைக் குடும்ப வாழ்வின் கூறாகக்கொண்டு, அதிலே தாய்மை அறிவையும், தந்தைமை அருளையும் ஒருங்கே கண்டார். அதிலேயே குடும்பத்தின் அன்பையும், சமுதாயத்தின் அறிவையும், இரண்டும் கடந்த மெய்யுணர்வையும் மலர்விக்கக் கருக்கண்டார்.

உயிரின வளர்ச்சிப் படிகளில் கீழ்ப்படியிலிருந்து மேற்படியைப் பிரிப்பது இக்காதலுணர்ச்சி, இவ் இளமைப் பருவமே! அவ்வுணர்ச்சி மனித இனத்திலேயே—அதுவும் பண்பட்ட மனித இனத்திலேயே—முழுவதும் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் உரிய அடிப்படை உணர்ச்சியாய் இயங்குகிறது. இதன் பயனாக, முதிரா இள உயிரையோ, முதிய உயிரையோ புறக்கணித்து விடும் பல விலங்கினங்களின் போக்கு மனிதக் குடும்பத்திலும், மனிதச் சமுதாயத்திலும் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது. கருவுற்ற தாயைத் தந்தை காப்பதும், குழந்தைகளைத் தாய் தந்தை காப்பதும், இளையருக்கு முதியவர் வழிகாட்டுவதும், முதியரை இளைஞர் பேணுவதும் யானை முதலிய உயர் விலங்குகளிலேயே தொடங்கிவிட்டாலும், அவை குடும்ப சமுதாயத் திட்டமாகவும், அரசியல் சட்டமாகவும், சமய அடிப்படையாகவும் அமைவது மனித இனத்தில் மட்டுமே. முதுமையின் அனுபவ அறிவை இளமைக்கும், முதிரா இளமைக்கும்; முந்திய தலைமுறை அல்லது தலைமுறைகளின் அனுபவ அறிவை அடுத்த தலைமுறை அல்லது பிந்திய தலைமுறைகளுக்கும் விட்டுச்செல்ல மனித இனம் முதுமையின் அறிவு மலர்ச்சிச் செல்வமான இனமுதல்வர் அல்லது பகவர் மூலம் கண்டு விளக்கிய முறைகளே ஆகூழ் வகைகள்—மொழி, இலக்கியம், கலைகள், இயல்கள், கல்விமுறைகள், சமயங்கள், அரசியல் சட்ட திட்டங்கள் ஆகிய நாகரிக சாதனங்கள் என்பதை நாம் ஓர்ந்து காண்டல் வேண்டும்.

உயிரின வாழ்வின் கட்டிளமை மலர்ச்சியின் விளைவாகத் தோன்றிய இனம் மனித இனம்.

ஆனால் மனித இனம் இனவாழ்வின் கட்டிளமை, மலர்ச்சி கடந்த ஒரு மறுமலர்ச்சிப் பருவத்தைத் தன் முதுமையில் ஆக்கி, இளமையின் ஆர்வத்துடன் முதுமையின் ஆக்கத்தை இணைத்துப் புதுமலர்ச்சிக்கு வழி வகுத்துள்ளது.

முதுமையிலே மனித இனம் கண்ட இப்புது மலர்ச்சியை உணர்ந்து பாடிய கவிஞர் மிகச் சிலர்—அவருள் ஆங்கிலக் கவிஞர் **பிரௌனிங்** குறிப்பிடத்தக்கவர்.

**' இளமை மலர், முதுமை அதன் இன்கனி '**

என்று அவர் கவிஞர் பாணியில், ஆனால் கவிஞருக்குத் தோன்றாத மெய்க்கவிதை உவமையுடன் கூறுகிறார். அக்கூற்றில் கவிதை அழகுமட்டுமன்று, அதுகடந்த ஆழ்ந்த அரும்பெரு மெய்மைகள் அடங்கியுள்ளன.

மலர் அழகியது—அழகு என்றால் என்ன ?

மலர் மணமுடையது—மணம் எதனால் ஏற்பட்டது?

மலர் இளமையை நினைவூட்டுகிறது—இளமையின் பொருள் யாது ?

பிரௌனிங் தரும் கவிதையுவமை இவற்றுக்கு முழு விளக்கம் தருகிறது. மலரின் அழகு கனியும் அழகுக்கு முன்னோடி. மலர் மணம் கனியின் மணத்துக்கு ஒரு முனைமுகம். முன்னது தூண்டும் சுவை, உயிர்ச்சுவை. பின்னது நுகர்சுவை, இனச்சுவை. அது தனி உயிர் நாடாத வளத்தை அதற்கு அளித்து இனவளம் ஆக்குகிறது. மலர் உயிரின் சின்னம். கனி இனத்தின் சின்னம். மலர் தலைமுறையின் மலர்ச்சி. கனி இனவாழ்வின் மலர்ச்சி, உயிரின் மறுமலர்ச்சி ; இனத்தின் புதுமலர்ச்சியின் விதையை அது தன்னகம் கொண்டுள்ளது.

வள்ளுவர் பெருமான் இதே உண்மையைப் பலப் பல வகையில் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

காதலின் முழு அருமை பெருமைப் பண்பறியாத பிறஇனக் கவிஞர்போல அவர் இன்பத்துப்பாலை 'அணங்கு கொல்? ஆய்மயில் கொல்லோ?' என்றுதான் தொடங்குகிறார். அது வெறும் இனக்குரல் மட்டுமன்று, முதிரா இளமைக் குரல் மட்டுமன்று. ஆண் இனக் குரல், உணர்ச்சிக்குரல் என்பது குறிப்பிடத்தக்கது. காதலில் தன்வயமின்றி ஈடுபடுபவன் ஆண், அதன் அருமை பெருமை அறிபவன் அவனல்லன் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. வள்ளுவர் தம் அறிவுக்குரலை முதலில் பெண் குரலிலேயே எழுப்புகிறார். களவு கடந்த கற்பு, கூடல் கலந்த ஊடல் குரலே பெண் குரல்; சிறப் பாகத் தமிழ்ப் பெண் குரல்; இன்னும் உயர் சிறப்பாகத் தமிழ் வள்ளுவன் கண்ட பெண் குரல். உணர்ச்சி வசப் பட்ட ஆணை அது அறிவு நோக்கி, அன்பு நோக்கி; குடும்பமென்னும் நிலத்தில் நின்று, சமுதாயமென்னும் அரங்கிலாடும்படி தூண்டுகிறது.

ஆண் பெண் குரல் கடந்து வள்ளுவர் தமிழினக் குரலையும், வள்ளுவக் குரலையும் இல்லறவியலிலிருந்து எழுப்புகிறார். தம் குரலில் பெண் அருமை கூறுகிறார். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று ஆணிடம் இடித்துக் கூறுகிறார். திண்மையின் உருவே பெண்மை, அதன் சமுதாயப் பண்பே கற்பு என்று எவரும் அளிக் காத, கருதாத, கனவுகாணாத கருத்து விளக்கமும் தருகி றார். 'பீடு' என்பது முழுவதும் பெண்பாலில் வருவதுதான் என்று அவர் நயமுறச் சுட்டுகிறார்.

பெண் இன்பம் கடந்து ஆணுக்கு, ஆணின்பம் கடந்து பெண்ணுக்கு ஒரு இன்பம்—தனி உயிர் காணும் 'பேரின்பம்' கடந்த 'பெரும் பேரின்பம்' ஒன்று உண்டு. இதைப் பெண்ணுக்கும் ஆணுக்கும் சுட்டிக் காட்டும் உலகின் ஒரே ஒரு கவிஞர், அறிஞர், அறவோர் திருவள் ளுவர்தாம்! அந்த இன்பம்தான் குழந்தை இன்பம். குழந்தை வாழ்வுக்காகத் தன்னையல்ல, தன் காதலியை, மனைவியை—தன் காதலனை, கணவனை—துறக்கத் துணிந்த நம்பியரை, நங்கையரைக் காண்டல் அரி தன்று. 'தாய் அன்பு, தந்தை பாசம்' என்ற சொற்க

ளின் பொருளே அதுதான். ஆனால் அந்தத் தாய் அன்பு, தந்தை பாசம் கண்டு பாடிய கவிஞர்—அதைக் கவிதை யாக மட்டுமன்றி, அறிவுரையாகவும், அறிவுரை கடந்த அறவுரையாகவும், அது கடந்த மெய்யுணர்வுரைகளாக வும் கட்டுரைத்த இனமுதல்வர்—உலக முதல்வர்—பக வர்—ஆதிபகவர்—தெய்வ மனிதர்—திருவள்ளுவர் ஒருவரே!

**'குழலினிது யாழினிது என்ப, தம்மக்கள்**
**மழலைச்சொல் கேளாதவர்.'**

இங்கே இனிமையூட்டுவது உவமை மட்டுமன்று; சொல் ஓசைமட்டுமன்று. இவை இணைந்த பொருள் மட்டிலும் கூட அல்ல. 'இன்பம்' என்பது இனம் சார்ந்தது, இனவளர்ச்சி சார்ந்தது என்ற 'வள்ளுவ'ப் பெருமெய்மை இங்கே தொனிக்கிறது!

குறட்பா மட்டுமன்று, அதன் ஒவ்வோரு எழுத்தும் ஒலியும் இங்கே பேசுகிறது. 'குழலினது, யாழினிது' என்று கூறுவார்கள்—'என்பர்' என்று வள்ளுவர் குறிக்க வில்லை, 'என்ப' என்று இருதிணைப் பொதுப்பாலிலேயே குறித்தார்! கேளாதவர் என்பதிலும் இதே அருளார்ந்த வசையின் நகைச்சுவை ததும்புகிறது. உணர்வுச்சுவையு டன் கேளாதவர் அவர்கள், கேட்டாலும் கேளாதவரே என்ற குறிப்புத் தொனிக்கிறது. புறச்செவிடில்லா விட்டாலும் அகச்செவிடே என்னும் ஏளனவசையும் ஒலிக்கிறது.

**'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்!'**

வள்ளுவர்கால உயர்தமிழ்ச் சொற்களில் ஒன்று 'ஆற்ற' என்பது. வள்ளுவர் பெருமான் கவிதையின் ஆர்வ ஆத் திரத்தை அது குறிக்கிறது. அமிழ்தின் தன்மை உண வின் புறச்சுவையிலில்லை, அதன் உயிர்ச் சுவையிலேயே இருக்கிறது என்றும் 'சிறுகை', 'அளாவிய', 'கூழ்' என்ற சொற்கள் வலியுறுத்துகின்றன.

'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், மற்றுஅவர்
சொல் கேட்டல் இன்பம் செவிக்கு'

ஐம்புல நுகர்வைப் பெண்மையில் கண்ட இதே புரட்சிக் கவிஞரே, குழந்தையின்பத்தையும் அதே வடிவாகக் கண்டார். இனவாழ்வின் மறுமலர்ச்சியே பெண்ணுரு, அதன் புது மலர்ச்சியே குழந்தை என்பதைக் காண உணர்ச்சிக் கவிஞர் புனைவாற்றல் மட்டும் போதாது—அறிவு, அறம், அன்பு, அருள் கடந்த மெய்யுணர்வுக் கவிதை தேவைப்படுகிறது என்பதை இங்கே காணலாம்.

இதே இனிய தொடர்கள், கருத்துகளைச் சங்கப் புலவர் பலரிடம் காணலாம்—தொல்காப்பியரிடம் காணலாம். ஆனால் அவர்கள் அனைவரும் தமிழர்—தனித் தமிழ்க் காலத்தினர். அதுமட்டுமன்று. அவர்கள் வள்ளுவர் வழிநின்று கூறியவர்களே. இதை வருங்காலத் தமிழகமும் வருங்கால உலகமும்தான் கண்டுதெளிய வேண்டும். ஆனால் அவர்கள் சென்றெட்டாத அடுத்த உயர் படியையும் வள்ளுவர் கண்டார் என்பதை நாம் சுட்டிக் காட்டமுடியும். ஏனெனில் அது அக்காலத் தமிழர் மட்டுமல்லர், இன்றுவரை தமிழரும் சரி, பிற இனத்தவரும் சரி, எவரும் என்றும் காணாத, கருதாத தளம் ஆகும்.

ஒருவர் வாழ்வின் மலர்ச்சி—மணம், அவர்களது பெருமைக்கு, உயர்வுக்குச் சான்று யாது? இந்தக் கேள்வியைக் கேட்டுத் திருவள்ளுவரே விடையும் தருகிறார்.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்'

'இவர் தகுதியுடையவர், இவர் தகுதியற்றவர் என்று அறுதியிட்டுரைப்பது எவ்வாறு? இது அவரவர் 'எச்சத்'தால் உணரப்படும் என்று அவர் கூறினார். இங்கே வள்ளுவர் கருத்தை அறிய, 'எச்சம்' என்ற சொல்லின் பொருள் காண்டல் இன்றியமையாதது.

அதன் சொற்பொருள் 'மீந்து நிற்பது' என்பது. 'புகழ்,' 'பின் மரபினர்' என்ற பொருள்களிலும் வள்ளுவர் அதை வழங்கியுள்ளார்.

பரிமேலழகர் பின்மரபினர் என்ற பொருளையே கொண்டுள்ளார். 'அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்பதற்கு 'அவரவருடைய நன்மக்களது உண்மை யாலும் இன்மையாலும்' என்றே அவர் பொருள் கொண்டுள்ளார். மணக்குடவர் 'அவரவர் ஆரவாரத் தொழிலினாலே காணப்படும்' என்று பொருள் கொண்டார். ஆயினும் விளக்கவுரையில் 'தம் மளவிலே நிற்பதல்லாது தம் மக்களையும் விடாதென்பது கூறிற்று' என்று அவர் குறிப்பதால், அவர் முடிபு வேறன்று என்று அறிகிறோம். எச்சம் என்பதற்குப் புகழ் என்று இங்கே கொண்டாலும் முடிவு மாறவில்லை. ஏனெனில் புகழ் நிறுவுபவர் பின் மரபினர் அல்லது மக்களே.

பரிமேலழகர்கூட இங்கே மக்கள் உண்மையாலும் இன்மையாலும் என்று கூறத் துணியவில்லை. உரை கூறுவது மனுநீதிபோன்ற சிற்றறிவுடைய ஏடுகளுக் கல்ல, தெய்வப்புலவர் திருவள்ளுவர் குறளுக்கு என்ற உள்ளுணர்வு அவரை எளிதில் விட்டகலுவதில்லை என்பதைப் பலவிடங்களிலும் காணலாம். 'நன்மக்களது உண்மையாலும் இன்மையாலும்' என்ற உரைத்தொடர் இதற்குச் சான்று.

வள்ளுவர் இங்கே கொண்ட உண்மைக் கருத்தை மற்றச் சில குறட்பாக்களே சுட்டிக்காட்டும்.

**'ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.'**

**'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.'**

**'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என் நோற்றான்கொல் என்னும் சொல்.'**

'தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'

'தம் பிள்ளை கற்றறிந்தவர்களால் போற்றப்படுகிருன் என்று கேட்ட தாய் மகிழ்வாள். தந்தை அவ்வாறு மகிழும்படி செய்யவேண்டும்'. இது முதல் இரு குறட்பாக்களின் பொருள். இங்கே 'தாய்', 'கேட்ட' என்ற சொற்களை வைத்து மனுநூல் கருத்தின் வழிநின்று பந்தாடுகிருர் பரிமேலழகர். தாய் பெண்ணுதலால், கல்வியறிவும் மூளையும் அற்றவளென்றும், ஆகவே கேட்டுத்தான் அறிய வேண்டுமென்றும் தம்கால அறியாமை வழி உரை கண்டார். ஆனுல் தந்தை மகிழ்வு கூருமல் தாய் மகிழ்வு மட்டும் வள்ளுவர்கூறிய நுட்பத்தை அவர் உணரவில்லை. இனஉணர்வு தாய்க்கே இயல்பு. ஆயினும் பாசமுடையவளாதலால் தன் மகன் மதிப்பீட்டை அவளே மதித்தறிதல் இயலாது. இனமும் இனமுதல் வரும் சமுதாயமும் மதிப்பதுணர்ந்து அவள் மகிழ்கிருள். இதே சமயம் தந்தைக்கு இந்நிலையில் ஒரு கடமையே கூறப்பட்டது. ஏனெனில் அவனே சமுதாய உணர்வுக் கட்பாடுடையவன். சமுதாயத்தின் நன்மதிப்பைக் குடும்பத்தில் காத்துக் குடும்ப ஆட்சி செய்பவள் பெண். குடும்பத்தின் நன்மதிப்பைச் சமுதாயத்தில் காத்துச் சமுதாய ஆட்சியில் பங்கு கொள்பவள் அவள். இடைக் காலமும் இக்காலமும் வள்ளுவர் காலத்தைப் போல இதை மதித்துணர்வதில்லை.

அடுத்த இருகுறட்பாக்களும் தந்தை கடமையை வலியுறுத்துகின்றன அத்துடன் தந்தையினும் மகன் அறிவுமிக்கவனுக, புகழ்மிக்கவனுக இருத்தலே தந்தைக்குப் புகழ் ஆகும். அதுவே தந்தையின் இனக்கடமை என்றும் விதந்துரைக்கிறது.

இனம் தொடர்ந்து உயிருடன் வாழ்வது மட்டுமன்று, வளர்வது. தாயின் இயல்பு இந்த இனவளர்ச்சியில் நாட்டம் செலுத்துவது, மகிழ்வது. தந்தையின் கடமை இதைச் செய்து முடிப்பது. இருவருமாகச் சேர்ந்து தம் தலைமுறையைவிட அடுத்த தலைமுறையை ஒரு படி

வளம்பட மேம்படுத்த வேண்டும். தலைமுறையின் இக் கடமையை வலியுறுத்திய அறிஞர், பழைய தலைமுறை சார்ந்த முதுமையின் கடமையையும், அதன்மூலம் முதுமைக்கு ஏற்படும் இன்பத்தையும் புதுவாழ்வையும் தலைமுறை கடந்த புதுமலர்ச்சி அல்லது வளர்ச்சியை யும் சுட்டிக்காட்டிய ஒரே உலக அறிஞர் வள்ளுவர்.

இளமை மலர்ச்சி, முதுமை அதன் கனி அல்லது மறுமலர்ச்சி, அடுத்த தலைமுறை அதன் புதுமலர்ச்சி!

இனவாழ்விலும் நாட்டுவாழ்விலும் நாம் இவ்வாறான அடுக்கு மலர்ச்சிகளை—ஒன்று, இரண்டு, மூன்று—சில சமயம் மூன்றுக்கும் மேற்பட்ட மலர்ச்சி, மறுமலர்ச்சி, புது மலர்ச்சிகளைக் காணலாம். உயிரினங்களில் இன வாழ்வின் கருநிலையில் ஏற்பட்ட இத்தகைய பல மலர்ச்சி களே நீள்துயில், செறிதுயில், மணித்துயில் நிலை களாயின.

உயிரினங்களில் இவ்வாறு ஏற்பட்ட மலர்ச்சிகள் மனித இனத்தின் இளமைப் போதினுள்ளேயே மூவகை விரைவு வளர்ச்சிப் பருவங்களை ஏற்படுத்தியுள்ளன. குழந்தைப் பருவம், பால்மாறு பருவம், விளையாட்டுக் குறும்புப் பருவம் என்பன இவை. இனவாழ்வின் இந்த முதிரா இளமைப் பருவ மலர்ச்சிகளே பத்து வயது, பதி னான்கு வயது, பதினெட்டு வயது, முப்பத்திரண்டு வயது ஆகிய காலங்களில் ஆணுக்கும்; அதற்குச் சற்றுமுன் பெண்ணுக்கும் ஏற்படும் முதிர்ச்சிப் பருவங்கள் ஆகும். இவை கடந்து மனித இனம் முதுமையில் காணும் மலர்ச்சிகள் கூட உண்டு.

இனவாழ்வின் முழு உறுப்புக்களாகிய தேசீய இனங்கள், அல்லது நாடுகளிலும் இதுபோன்ற மலர்ச்சி களை நாம் காண்கிறோம். மனித நாகரிகத் தொடக்கக் கால நாடோடி இனங்களில் குடும்பமும் சமுதாயமும் இல்லாதிருந்தது. முதிராத் தேசீயங்கள் புறத்தோற்றத் தில் குடும்பமும் சமுதாயமும் உடையவையானாலும், அவற்றின் சின்னமான ஒன்றுபட்ட வாழ்வும் வாழ்வின் சின்னமாகிய தேசிய மொழியும் அமையும்வரை இந்

நிலையிலேயே இருப்பன. மலர்ச்சியுடன் அவற்றின் இனவாழ்வு தொடங்குகின்றன. பிரிட்டனில் ஷேக்ஸ்பியர் காலமும், கிரீசில் பெரிக்ளிஸ் காலமும், கங்கை நாட்டில் காளிதாசன் காலமும் இத்தகைய மலர்ச்சிக் காலங்கள் ஆகும். மலர்ச்சியுருத தேசீய இனங்கள் பல கருவிலேயே அழிந்துள்ளன.

உயிராற்றலும், இன ஆற்றலும் மிக்க இனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மலர்ச்சி பெறுவதுண்டு. மலர்ச்சியின் தொகை மிகுந்த இனம் இறவா இனமாகவும் பிறவா இனமாகவும் வளர்ந்தோங்குகிறது. சில இனங்கள் பொதுவான மனித இனவாழ்வில் பெருந்தொலை சென்றும் தனி இனவாழ்வில் முதிர்வுருமல் அழிவதனுல், அவ்வினவாழ்வு கடந்தும் அத்தகைய இனங்கள் பேரினவாழ்வில் அதாவது பிற இன வாழ்வில் மறுமலர்ச்சியூட்ட முடிந்துள்ளன. இவ்வாறே கிரேக்க உரோம இன வாழ்வுகள் தம் இனவாழ்வுகள் கடந்து பொதுவாக 12-ஆம் நூற்ருண்டில் தென் ஐரோப்பாவில் ஒரு மறுமலர்ச்சியும் ; 15-ஆம் நூற்ருண்டில் தெற்கு, தென் மேற்கு ஐரோப்பாவில் மற்ருெரு மறுமலர்ச்சியும், 18, 19-ஆம் நூற்ருண்டுகளில் வடமேற்கு ஐரோப்பாவில் மூன்ருவதொரு மறுமலர்ச்சியும் தூண்ட முடிந்தது. ஆனுல் இவை அவ்வினங்கள் வாழ்ந்த தென் ஐரோப்பாவுக்கு ஒரு மறுமலர்ச்சியே தூண்டின.

மனித இன முதல்வரான வள்ளுவரை ஈன்ற இனம் தமிழினம். அது கண்டுள்ள மலர்ச்சி, மறுமலர்ச்சி, புது மலர்ச்சிகளுக்கு அளவே இல்லை என்னலாம். இவை ஐரோப்பிய மறுமலர்ச்சி, மலர்ச்சிகள் போல ஒன்றிரண்டல்ல, பிற இனங்களால் தூண்டப்பட்டனவல்ல. ஏனெனில் இவை உலகமலர்ச்சி, மறுமலர்ச்சி, புதுமலர்ச்சிகள் ; இனமலர்ச்சி, மறுமலர்ச்சி, புதுமலர்ச்சிகள். அவை உலகின் பிற இனங்கள் அனைத்தின் மலர்ச்சி மறுமலர்ச்சிகளை ஊக்கியுள்ளன—அவை கடந்து ஓயாது புதுமலர்ச்சிகளையும் தோற்றுவித்துள்ளன, தோற்றுவித்து வருகின்றன.

வரலாற்றிலேயே சங்ககாலம்—பல்லவ பாண்டியர் காலம்—சோழப் பேரரசர் காலம்—நம்காலம் ஆகிய நான்கு மலர்ச்சிகளை நாம் கண்டுள்ளோம். அவற்றுக்கு முற்பட்ட மலர்ச்சிகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் புதையுண்டு மறைவுற்றுள்ளன. ஆனால் வரலாற்றிலே பழைய மலர்ச்சிகளின் ஓய்வு கடந்து நாம் காணும் மலர்ச்சிகள் மூன்றும் மறுமலர்ச்சிகளே. நம் காலத்திலும் ஒரு மறுமலர்ச்சி அலை எழுந்துள்ளது. ஆனால் இம் மறுமலர்ச்சிகளினூடாகத் தமிழகம் ஒரு புதுமலர்ச்சியையும் அணிமை வருங்காலத்தில் காண இருக்கிறது. அதுவே வள்ளுவர் முழுநிறை மெய்ம்மை தமிழினத்தில் உணரப்படத் தொடங்கும் காலமாகும்.

தமிழினம் பல இனவாழ்வு கடந்து, பல் இனங்களின் மலர்ச்சி, மறுமலர்ச்சி கடந்து புதுப்புது மலர்ச்சிகள் கண்டு வரும் புத்திளங் கன்னி இனம். அது இறவா, பிறவா இனம் மட்டுமன்று—இறவா, பிறவாக் கன்னி இனம்—என்றும் இளமை மாறா இனம். சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக அது பண்படாத ஒரு இடைக்காலப் புத்துலகில் அடிமைப்பட்டுக் கிடப்பது கூடத் தமிழினத்தின் ஒரு நீள்துயில் நிலை அல்லது செறிதுயில் நிலை மட்டுமே. இது கடந்து தமிழினம் புது வாழ்வுகாண, புதிய இன இன்பம், புது மலர்ச்சி இன்பம், இன்பம் கடந்த இன்பம் காணத் தமிழர் வள்ளுவர் வழி நின்று முயல்வார்களாக.

## 12. இன்பம் என்பது இனவாழ்வே!

பீடபூமியில் வாழ்பவன் அதன் எல்லைக் கோடியில் சென்ற பின்னன்றித் தான் இருப்பது உயர் மேட்டு நிலத்திலே என்பதை உணரமாட்டான். ஆழ்சுரங்கத் தடத்திலிருப்பவன் ஏறும்போதோ, இறங்கும்போதோ தான் ஆழத்தின் அளவை அறிவான். அதுபோல இன்ப துன்பச் சூழல்களின் நடுவே வாழ்பவன் அவற்றின் எல்லை கண்டாலன்றி இன்ப துன்பத் தன்மைகளையோ, இயல்பையோ அறியமாட்டான். அவற்றின் உயிர் நுட்பமும் அவனுக்குத் துலங்கமாட்டாது.

துன்ப நீக்கமே இன்பம் என்று பொதுவாகக் கூறப்பட்டாலும், உண்மை இன்பம் துன்ப நீக்கத்தில் இருக்க முடியாது. ஏனெனில் நீங்கிய கணத்தில் மட்டுமே அது இன்பம் தரக்கூடும். இன்ப நுகர்வில் இன்பம் இருக்கிறதென்றும் கூறமுடியாது. ஏனெனில் புது நுகர்வின் போதுதான் அது இன்பமாகத்தோன்றும். இது போலவே, இன்பம் அகப்பண்பு என்று கூறப்பட்டாலும், அது முற்றிலும் நுகர்பவனைச் சார்ந்தது என்றும் கூறமுடியாது. ஏனெனில் தனிமையில் ஒருவனுக்கு இன்பம் இருக்க முடியாது.

கவிஞர் தனிமை இன்பத்தைப் பாடுவதுண்டு. முனிவர் போன்ற தனிச்சிந்தனையாளர் தனிமை வாழ்வில் மகிழ்வதுண்டு. அவ்வப்போது மனிதர் தனிமைக்காக ஆர்வம் கொள்வதுமுண்டு. ஆனால் இத்தகைய இடங்களில் புறவாழ்க்கையின் சில துன்பங்களிலிருந்து விடுதலை நாடியோ, சமுதாய வாழ்வில் பெற்ற கருத்துலகின் தங்குதடையற்ற தோழமை நாடியோதான் இத்தகையோர் தனிமை நாடுவர். விரும்புவர். அத்தனிமை இன்பம் சமுதாயத்திலிருந்து ஒருவர், இருவர் வந்த காலையில் இரட்டிக்கும் என்பதைக் கவிஞரும் முனிவரும் காண்பர். இத்தனிமைகள் குறுகிய புறச்

சமுதாயத்திலிருந்து அகன்றுயர்ந்த ஓர் அகச் சமுதாயம் நாடியேயன்றி வேறன்று.

இன்பம் என்பது உண்மையில் நுகர்பவனுக்கும் நுகர்பொருளுக்கும் உள்ள தொடர்பு அன்று. நுகர்பவனுக்கும் சமுதாயம் அல்லது இனத்துக்கும் உள்ள தொடர்பேயாகும். பெரும்பாலும் சமுதாயத்தில் புகழ் அல்லது மதிப்பு, குடும்பத்தில் அன்பு ஆகிய மூவகைப் பட்ட உணர்ச்சியே இன்பங்கள் எல்லாவற்றின் அடிப் படை ஆகும். துறவோரும் அருளாளரும் குடும்பத்தில் உள்ள அன்பையே சமுதாயத்திலும் நாடுவர்—அவர் களுக்குச் சமுதாயமே, இனமே குடும்பமாய் அமைவதன் காரணம் இதுவே. நுகர் பொருள்களும் இன்பக் கருவி களும் எப்போதும் இன்பம் அளிக்காததற்கும் நிலையான, இடையரு வளர்ச்சியுடைய உயிர் இன்பம் அளிக்காத தற்கும் கூட விளக்கம் இதுவே.

இன்பத்தின் மெய்யுருவம் தனி மனிதனிடத்தில் முதலில் குடும்ப பாச ஆர்வமாகவும், பின் சமுதாய மதிப் பார்வமாகவும் அன்பார்வமாகவும், அதன் பின் இனத் தின் மதிப்பார்வம், அன்பார்வம் ஆகிய புகழின் அவா வாகவும் செயலாற்றுகிறது. இவை படிப்படியாக உயர்ந்த பண்பளாவி, மக்கள், இன அன்புப் புகழார்வ மாக மிளிர்கின்றன. ஆனால் வள்ளுவர் குறிக்கொண்ட புகழார்வம் இன்னும் உச்ச உயர்படிகள் காண்கின்றது. குடும்பம் சமுதாயம், இனம் ஆகியவற்றின் அன்பைக் கூட வள்ளுவர் பாராட்டிய அருளாளர் எதிர்பார்ப்ப தில்லை. அவர்கள் சமுதாயத்தினிடமும் இனத்தினிட மும் தாம் கொண்ட வரம்பிலா அன்பினாலேயே செயலாற்றுகின்றனர். சமுதாயமும் இனமும் அதை யறிந்து அவரை மதிக்கலாம், போற்றலாம், அன்பு காட்டலாம்; அதை அறியாமல் இருக்கலாம், புறக் கணிக்கலாம்; அவர் அன்பறியாது அவமதிக்கவோ, தூற்றவோ, வெறுக்கவோகூடச் செய்யலாம். தம் அன்பு காரணமாக, தாம் நலம் செய்த உணர்வு ஒன்றே அவர் களுக்குப் போதிய தூண்டுதலும் பரிசும் ஆகும். இத்தகைய தகுதியையே வள்ளுவர் புகழ் என்கிறார்.

வானம் வழங்குவதுபோல, கைம்மாறு கருதாத இத்தகைய அருட்பண்புடையாரையே வள்ளுவர் ஒழுக்கத்துநீத்தார், அந்தணர், பகவர் எனச் சிறப்பித்தார். அவர்கள் இன்பம் கலப்பற்ற இன்பம், அழிவில் இன்பம், என்றும் வளரும் இன்பம். ஏனெனில் அது அவர்கள் தோல்வியிலும் மாள்விலும், வெற்றியிலும் வாழ்விலும் ஒருங்கே இன்பம் பயப்பது—இனவாழ்வுடன் ஒன்றுபட்ட இன்பமாக அது நிலவுவது ஆகும்.

உயிர்களும் மனிதனும் பொதுவாகத் தத்தமக்கென்றே இன்பக் கருவிகளையும் இன்பத்தையும் நாடுவது இயல்பு. ஆனால் இயற்கை இன்பத்தை இனவாழ்விலேயே புதைத்து வைத்திருக்கிறது. தமிழர் இன்பத்தின் இந்த நுட்பத்தை மிகப் பழங்காலத்திலேயே கண்டுணர்ந்திருக்க வேண்டும். இன்பம், இனம் என்ற சொற்களின் தொடர்பு இதைக் காட்டுகிறது. ஆனால் திருவள்ளுவர் அரியதோர் இயற்கை உயிருவமைகண்டு அதன் மூலம் இவ்வுண்மையை விளக்குகிறார், அடிக்கடி வலியுறுத்துகிறார்.

> **‘ அன்போ டியைந்த வழக்கென்ப, ஆருயிர்க்கு**
> **என்போ டியைந்த தொடர்பு ’**

> **‘ அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு ! ’**

இங்கே இரண்டு குறட்பாக்களிலும் ‘ என்பு ’ என்பதை ஆகுபெயராக ‘உடல்’ என்ற பொருளுடையதாக உரையாசிரியர்கள் கொண்டுள்ளனர். ஆனால் முதல் குறட்பாவில் உயிர்க்கு என்பது உடலோடுகூடிய உயிருக்கு அல்லது உயிரினத்துக்கு என்றே நேர்மையாகப் பொருள் படுவது. என்போடியைந்த தொடர்பு உயிருக்கு அன்று, உடலில் எலும்புகள் இணைந்த தசைக்கே. உயிரினத்துக்கு அன்புடன் கூடிய இணைவு உயிரினத்தின் உடலில் எலும்பும் தசையும் கூடிய இடையரு இணைவுபோன்றது என்பதே கருத்து. இரண்டாவது குறளில் ‘ என்பு’ என்றதனுடன்வரும் ‘உம்’மை உயர்வு சிறப்பும்மை. அன்புடையவர் எல்லாமே—

உடம்புகூட—எலும்புகூடப் பிறருக்கே உரியதாகக் கொண்டு வாழ்வர் என்று அது பொருள்படும்.

எலும்பு உள்ளுடற் பகுதி. தசையழிந்த பின்னும் நீடித்து நிற்பது. இடுகாட்டில் மண்ணுண்ட பின்னும், சுடுகாட்டில் எரியுண்ட பின்னும் மீந்து நிற்கும் பகுதியும் அதுவே. தோல் தசை குருதி மூளை மட்டுமல்ல, எலும்புகூடப் பிறருக்குரித்தாக்கி வாழ்வர் மேலோர்! உயர்வு சிறப்பு உம்மையின் தனித்திறம் இதுவே.

பிறருக்காக வாழ்பவர், தம் உடம்பும் பிறருக்கு உரிமைப்படுத்துபவர் நாடும் புகழ் புறப்புகழ் அன்று என்பது தெளிவு. அவர்கள் பெறும் இன்பம் மக்கள் நலன் அல்லது அகப்புகழேயாகும்.

அன்பு இயல்பாக உடையவரே 'சிறப்பாக' இன்பம் உடையவர் என்பதையும் வள்ளுவரே வலியுறுத்தியுள்ளார்.

**'அன்புற் றமர்ந்த வழக்கென்ப, வையகத்து**
**இன்புற்ருர் எய்தும் சிறப்பு '!**

இந்த இன்பம், இந்த அகப்புகழ் இன இன்பமே. அதுவே இறவாப் பிறவா இன்பம், பேரின்பம். அதுவே இறைப்பண்பு. சிறப்பென்னும் சொல் இக்குறட்பாவில் இன்பத்தைக் குறித்த அடைமொழியாகக் கூறப்பட்டுள்ளது. இதே சொல் பேரின்பத்தைக் குறிக்கும் சுட்டாகப் பிறிதொரு குறட்பா கையாண்டுள்ளது.

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப தறிவு.**

தனிமனிதன் இன்பம் தனிமனிதனைச் சார்ந்த தன்று, அது தனிமனிதன் கடந்த அகப்பண்பு என்பதை அனுபவ வாயிலாகவே காணலாம். இன்பத்தை ஒருவன் மற்றொருவனுடன் பகிர்ந்து கொள்ளும் போது, அந்த இன்பம் பாதியாவதில்லை. இருமடங்கு, பன்மடங்கு பெருக்க முறுகிறது. அதே சமயம் துன்பம் அவ்வாறு பகிரப்படும் சமயம் அது தன் பாதியள

விலல்ல, பேரளவிலேயே குறைகிறது. உண்மையில் அன்புடையாருடன் பங்கு கொள்ளும் துன்பம், துன்பத்தில் ஆறுதல் தரும் அரையின்பம் ஆகிறது. பிறருக்காக ஏற்கும் துன்பமோ, அன்பை எதிர்பாராமல், அன்பைப் பரப்பிவழங்கி ஏற்கப் படுவதாகலின், இன்னும் பெரிதான, எல்லையற்ற இன்பம் அளிக்கிறது. துயர் நாடகங்களில், உயர்வீறுடைய பண்பாளர்படும் துன்பம்—அழிவுகூட—காண்பவருக்குச் சிறுதிற இன்ப துன்பங் கடந்த ஓர் உயர் அமைதி தருதல் இதனாலேயேயாகும். பாரிய கலையமைதியுடைய கட்டடங்களைக் கண்டு களிப்பவர் அடையும் வீறமைதியுடன் இது ஒப்புடையது. பேரின்பத்தின் ஒரு சாயலே இது என்னலாம்.

குடும்ப இன்பமும், சமுதாய இன்பங்களும், அருளாளர் இன்பமும் இனச்சார்புடையவை என்பதைப் பலர் எளிதில் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் எல்லா இன்பமும் இனச்சார்புடையதே என்பது மேலீடாக எளிதில் தோற்றுவதில்லை. சிறப்பாக, செல்வத்திலும் ஆதிக்கத்திலும் நாட்டம் உடையவர் வாழ்வில் இனப்பாசம் இடம்பெறுவது எவ்வாறு என்று எவரும் கேட்கத் துணிவர். ஆனால் மேல்திசை அருளாளரான கார்லைல், ரஸ்கின், டால்ஸ்டாய் ஆகியோர் இலக்கியப் பண்புகள் முழுவதும் இதனை வலியுறுத்திப் பலவகை விளக்கங்கள் தர முயன்றுள்ளன. மனிதப்பண்புடன் தொடர்பற்ற நிலையில் செல்வ இயலும், அரசியலும் ஆய்ந்த மேலை ஆராய்ச்சியாளர் சூழலில், இதனை வலியுறுத்தும் தேவை அவர்கட்கு மிகுதி ஏற்பட்டது. அவர்கள் வலியுறுத்திய பின் கூட, மேலையுலகமும் அதைப் பின்பற்றித் தற்கால நாகரிக உலகமும் அவ்வுண்மையை இன்னும் காணாது உழன்றே வருகின்றது என்னலாம். ஏனெனில் அவ்வருளாளர் உரைகள் இலக்கிய அழகுரைகளாக, சமயப் புனைவான உயர்வு நவிற்சியுரைகளாக கொள்ளப் பட்டு வருகின்றனவேயன்றி ஆய்வுரைகளாக மதிக்கப் படுவதில்லை. கீழ்த்திசையில் காந்தியடிகளின் கோட்பாடுகளும் இதுபோலவே உயர்சமய உரையாக ஒதுக்கப்

படுகின்றதேயன்றி வாய்மையுரையாக உணரப்பட வில்லை.

செல்வத்தையும், வறுமையையும் மேலைச் செல்வ நூலார் இயல் ஆராய்ச்சிகளோடொப்ப உயிரிலா இயற்கையாற்றல்களாகவே ஆய்ந்துள்ளனர். இது முற்றிலும் சரியன்று. அத்துறை உயிர் நூல், சமுதாய நூல்களுடன் தொடர்பு படுத்தியே ஆராயப்படுதல் வேண்டும்.

செல்வமும் வறுமையும் மனித இனத்துக்கு மட்டுமே உண்டு. விலங்கு பறவை உயிரினங்களுக்குக் கிடையாது. இவை மனிதர் செயற்கையாக வளர்த்துக் கொண்ட சமுதாயப் பண்புகள் என்பதை இது தெள்ளத் தெளியக் காட்டுகிறது.

விலங்கு, பறவை முதலிய உயிரினங்களுக்குச் செல்வம் என்பது இயற்கை வளமும் தம் சூழல் வாய்ப்பு மன்றி வேறன்று. வறுமை என்பதும் இவற்றின் குறை யன்றி வேருகாது. மனித சமுதாயத்திலே இயற்கை வளத்துக்கும் தனி மனிதனுக்கும் அதாவது நுகர் பவனுக்கும் இடையே சமுதாயம் 'செல்வம்' என்ற தடையரணை எழுப்பியுள்ளது. இயற்கை வளத்தைத் தனி மனிதன் பெறமுடியாமல் அது இரண்டு வகையில் தடுக்கிறது. முதலில் அது இயற்கை வளமிருந்தும் செல்வமில்லாமல் தனிமனிதன் அதனை நுகர முடியாமல் செய்கிறது. இரண்டாவது செல்வம் சமுதாயத்தில் ஒரு புறம் ஒரு சிலரிடத்தில்—சிறப்பாக உழையாதவரிடம் குவிவதால், பெரும்பாலோர், சிறப்பாக உழைப்பவர் அந்தச் செல்வத்தைப் பெறமுடியாமல் இயற்கை வளத்தையோ தம் உழைப்பின் பயனையோகூடப் பெற முடியாமல் தடுக்கிறது.

இதனுல் உலகுக்கு ஏற்படும்—ஏற்பட்டு வரும்—அழிவு இவ்வளவு அவ்வளவு அன்று. ஒருபுறம் உழைத்துச் செல்வம் உண்டுபண்ணுபவர் உணவு உடை உறையுளின்றி அழிகின்றனர் மற்றொருபுறம் உழையாதவர் கழிமிகை நுகர்வால் அழிவுறுகின்றனர்.

இதுபற்றிச் சிந்தித்த மேலையுலகின் முதல் சமுதாய, பொருளியல் அறிஞர் கார்ல் மார்க்ஸ்தான். ஆனால் கார்ல்மார்க்ஸ் கூடச் செல்வத்தைச் சமுதாயப் பண்பாக, மனிதப் பண்பாக, இனப் பண்பாகக் காணவில்லை. அது இயற்கைக்கு மாறான செயற்கைப்பண்பு என்ற புதிரையும் அவர் முற்றிலும் விடுவிக்கவில்லை.

செல்வத்தால் இன்ப நாடுபவர் அதனைப் பெருமலே போவதில்லை. சிறிதளவான இன்பம், மகிழ்ச்சி அல்லது மன நிறைவு கொள்வதுண்டு—அதுவே உலகில் செல்வச் சகடத்தை ஓட்டி வருகிறது. இந்த இன்பத்தின் இயல்பை நாம் ஆராய்ந்தால், இன்பத்தின் அடிப்படை இயல்பை அதுவே காட்டும்.

செல்வத்தில் மகிழ்ச்சி காண்பவர் அதனால் வறுமை, பசி, விடாய், வாழ்விடப் பஞ்சம் நீங்கப் பெறுகின்றனர். அவர்கள் தற்காலிக மகிழ்ச்சி இத்துன்ப நீக்கமே. இதன் மூலம் அவர்கள் பெறும் பயன் சமுதாயத்திலும் இனத்திலும் அவர்கள் பெறும் இடமும் தொடர்புமே. ஏனெனில் இவை குறைந்தால்கூட, மக்கள் சாக விரும்பு வதில்லை. நோய்களில் அலைக்கழிவுற்றால், முதுமை நலிவுகளால் தொல்லைப்பட்டால் கூட, எவரும்—இனத் துக்காக மாள முற்படும் அறவோர், அருளாளர் நீங்கலாக வேறு எவரும்-மாள ஒருப்படுவதில்லை. இந்த உயிரவா இன அவாவேயாகும்.

செல்வத்தில் மனநிறைவு கொள்பவர் வறுமை நீக்கம் கழிந்தும் செல்வம் ஈட்டுவர். போட்டி, இறுமாப்பு ஆகிய பண்புகள் உடையவர் மேன்மேலும் செல்வம் ஈட்டிக் குவிப்பதிலேயே வாழ்வு முழுவதும் போக்குவர். செல்வம் வாழ்வுக்கு ஒரு கருவிமட்டுமே என்பது தெரிந்தும், கருவி பெருக்குவதிலேயே அவர்கள் இன்பங் காண்பர். இந்த இன்பத்துக்கு—மன நிறைவுக்கு—காரணமான போட்டி, இறுமாப்பு ஆகியவை சமுதாயப் பண்புகளே என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இது எளிதில் ஆதிக்கமாகவும் மாறிச் செயலாற்றவல்லது. இம்மூன்று குணங்களும் அன்பின் தன்மை உணராதவர்

களின் இயற்கையான இன ஆர்வமேயன்றி வேறன்று. போட்டி நட்புக்கும், இறுமாப்பு ஒப்புரவுக்கும், ஆதிக்கம் அடிமைத்தனத்துக்கும் எதிர்பண்புகள் மட்டு மல்ல—அவற்றுக்கு இனமான பண்புகளும் ஆகும். இன எதிர்பண்பாக இவை மாறுவதை நாம் வாழ்வில் பல இடங்களிலும் காணலாம். உண்மை இன்பம் அன்பு ஒன்றினுலேயே பெறப்படும் பண்பு என்பதனை இவை விளக்க வல்லன.

மனிதன் இன்ப நுகர்வுக்குரிய உண்மையான கருவி செல்வமன்று, அன்பே. அவ்வின்ப நுகர்வுக்குரிய பொருள் உயிரிலா இயற் பொருள்களும் அன்று: தன்னில் தாழ்ந்த உயிரினங்களும் அன்று. தன்னொத்த உயிரான மனிதனே. மனிதத் தொடர்பே இல்லாத இடத்தில் மனிதன் இதை உணர்கிருன். இனம், மொழி, நாடு, நாகரிகம் கடந்து தனி மனிதன் தன்னொத்த மனிதஇனத் தோழமைக்கு ஏங்குகிருன். மனித இனத் தோழமையே கிட்டமுடியாத இடத்தில், உயிரினத் தோழமை கூட அவனுக்கு அரும் பொருளா கின்றது. இதுவும் இல்லாத இடத்தில் இவற்றின் தொடர்பேனும் அவனுக்குத் தேவையாகிறது.

இன்பப் பொருள்களிலும் இன்பத்துக்குரிய தோழ மையிலும் சிலசமயம் சமுதாயப் பண்பே போட்டி யையும் தற்பெருமையையும் ஆதிக்கத்தையும் வளர்க் கிறது. இவை தன்முனைப்போடுகூடிய இன ஆர்வமே யன்றி வேறன்று ஏனெனில் இப்போட்டியே பொருள் மீது ஆர்வம் வளர்க்கிறது. கிட்டாத பொருளில் ஆர்வம் ஏற்படுவதன் காரணம் பிறருக்குக் கிட்டாதது தனக்குக் கிட்டவேண்டும் என்பதற்காகவே. பல இடங்களில் போட்டி அகன்றபின் இந்த ஆர்வம் குறைவது காணலாம். ஆதிக்கமும் இதுபோன்றதே யாகும். ஆதிக்கத்திற்கு உதவும் அடிமை நிலை இல்லாதபோது ஆதிக்க வாதியின் நிலையும்; ஆதிக்கத்தை வெறுத் தொழித்த பின் ஆதிக்கவாதியின் தொடர்பு அற்ற நிலையை எளிதில் ஏற்கமுடியாத அடிமையின் நிலையும்

உண்மையில் தோழமையிழந்தவன் அடையும் நிலையில் வேறன்று.

மனிதன் அடையும் உண்மை இன்பங்கள் யாவும் குடும்பம், சமுதாயம் பற்றியவையே. இரண்டிலும் இனம் நோக்கிய இன்பத்தின் இருபகுதிகள் நிலவுகின்றன. குடும்பத்தின் எல்லை சிறிது. ஆனால் இனத்தின் எல்லை யற்ற அன்பு அச்சிற்றெல்லைக்குள் பேரளவு செறிவுற்று வளர்ந்துள்ளது. சமுதாய எல்லை பெரிது. ஆனால் இனத்தின் கீழ்நிலைப் பண்புகள்—விலங்குப் பண்புகள் —போட்டி, ஆதிக்கம், கொடுமை, இறுமாப்பு, தன் முனைப்பு, வஞ்சகம்—ஆகியவையே அதில் மிகுதி நிலவு கின்றன. முன்னதன் உயர் பண்பும் பின்னதன் எல்லையும் கலந்த இணைவே இனப்பண்பு, இன இன்பம் அதுவே ஆகூழின் அடிப்படை. அதை வகுத்தமைப்பவரே அந்தணர், பகவர்.

மனிதன் அடையும் துன்பங்கள் யாவும் குடும்பப் பண்பின் குறைபாடும், சமுதாயப் பண்பின் குறை பாடுமே யாகும்.

மேலைநாட்டில் இயல்பாக வளர்ந்த பண்பாடு களுள் நாம் மூன்று வகைகளைக் காணலாம். ஒன்று ஆங்கிலேயர் பண்பாடு. அதில் குடும்பப் பண்பு பேரளவில் நிறைவுடையது. ஆங்கிலேயர் ஒழுக்க முறை, சமுதாயப் பழக்க வழக்கங்கள், அரசியல் வாழ்வு அல்லது தேசியக் குடியாட்சிப் பண்பு ஆகிய யாவும் குடும்பத் தளத்தை அடிப்படையாகக் கொண்டவை. இதை அவர்கள் வாழ்விலும் அரசியலிலும் இலக் கியத்திலும் சமயத் துறையிலும்கூடக் காணலாம்.

பிரஞ்சு மக்களிடம் குடும்பப் பண்பு குறைவு, சமுதாயப் பண்பு நிறைவுடையது. பிரஞ்சுப் புரட்சி இதனை நன்கு எடுத்துக்காட்டிற்று. பிரஞ்சு மக்கள் வாழ்வு, அரசியல், சமயம், இலக்கியம் ஆகிய யாவற் றிலும் இதனைக் காணலாம்.

இத்தாலியரிடம் குடும்பப் பண்பும் குறைவு. சமுதாயப் பண்பும் குறைவு. ஆனால் இனப்பண்பு,

மனிதப்பண்பு மிகுதி. இத்தாலிய இலக்கியத்தில்மட்டு மன்றி, தென் ஐரோப்பிய இடைக்கால இக்கால, இலக்கிய முழுவதிலும் இதனைக் காணலாம்.

கீழ்த்திசையில் குடும்பப் பண்பின் நிறைவு, சமுதாயப் பண்பின் நிறைவு, இனப்பண்பின் நிறைவு ஆகிய முத்தளங்களின் முழு வாழ்வைத் தமிழர் குறிக் கொண்டனர். காதல் (களவியல்), கற்பு, வீரம், அறிவு ஆகிய நான்கும் நிறைந்த அகப்புற இலக்கிய ஓவியங்கள் இதனைக் காட்டும். ஆனால் இந்நிறை பண்பை ஒரே வாழ்க்கை இலக்கணமாக வகுத்து, ஒரே இன்பக் குறிக்கோளின் படிகளாக்கி, அந்த இன்பக் குறிக்கோளையே இறைப் பண்புகளாகக் காட்டியவர் தமிழரின் ஆதி பகவனாகிய திருவள்ளுவரே. அவர் தாம் கூறும் ஆதிபகவன் வழி வந்த ஒரு புத்தூழியின் ஆதிபகவரே ஆவர்.

சிரிக்காதவன், தாய்நாட்டுப்பற்று இல்லாதவன், வீர விளையாட்டுப் பண்பற்றவன்—இவர்கள் கொலை காரர்கள் என்று ஆங்கிலேயரும் ஆங்கிலக் கவிஞரும் கூறுவதுண்டு. இனம், சமுதாயம், குடும்பம் ஆகிய மூன்று துறைகளின் உள்ளார்ந்த பண்புகளை இவை குறிக்கும். பெருங் குற்றவாளிகள் வாழ்க்கைப் பின்னணிகளை ஆராய்ந்தால், அவர்கள் குற்றவாளி களல்லர், குற்றத்துக்கு ஆட்பட்டவர்கள் என்பது காணப்படும். அவர்கள் குடும்ப வாழ்வின் குறை, சமுதாய வாழ்வின் குறை, இன வாழ்வின் குறை நீக்கப் பட்டால், அவர்கள் குற்றங்களும் குறைவது உறுதி. இவ்வகைச் சீர்திருத்தம் அண்மையில்தான் கனவு காணப்பட்டுள்ளது. ஆனால் கனவாளர் சிலர் தவிரப் பொதுவாக உலகம்—உலக ஆட்சியாளர்—அதை இன்னும் நன்கு உணரவில்லை.

இன்பம்—இன இன்பம் இன்னதென்ற அறிவு— வள்ளுவர் வாழ்க்கை ஒழுக்க அறிவு—உலகில் வளர்ந்தால், குற்றங்கள் மறையும். வறுமை தங்காது. மனித இனம் மனிதப்பண்பு கடந்து மீமனித அல்லது

தெய்வப்படி அடையும். இடையறு இன்பமாகிய எல்லை யற்ற வளர்ச்சி அப்போது உலகுக்குக் கைவந்த பொருளாய்விடும்.

வள்ளுவர் கண்ட இந்த இன இன்பம்—உயிர் இன்பம்—இன்பத்துள் இன்பம் கண்டு அதை உலகில் பரப்புவோமாக.

## 13. உடல்நலம், உளநலம், இனநலம்

ஐம்பொறி புலன்கள் ; தோல், தசை, குருதி, நரம்பு நாடிகள், நிணம், எலும்பு, உள்ளெலும்பு ; தலை, கை கால், நடுவுடற் பகுதி ; உணவு, செரிமானம், கழிவு ஆகியவற்றுக்குரிய உறுப்புக்கள், உயிர்ப்புஉறுப்புக்கள், இனப்பெருக்க உறுப்புக்கள்—இவை உயிருடற் கூறுகள், உறுப்பு உள்ளுறுப்புக்கள்.

ஐம்புல உணர்ச்சிகளுக்கு வாயில்களே மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பொறிகள். இவை புறஉறுப்புக்களாயினும் இவற்றின் உணர்வுகளாகிய புலன்கள்—ஊறு, சுவை, காட்சி, முகர்வு, கேள்வி என்ற ஐம்புலன்கள்—அக உறுப்புக்கள் ஆகும். ஆறும் அறிவாகிய உள்ளம் புறமும் அகமும் கடந்த உள்ளுயிருறுப்பு ஆகும்.

தலை, கை கால், நடுஉடற் பகுதி ஆகியன உடலின் புறப்புற உறுப்புக்கள், பெரும்புற உறுப்புக்கள். உயிரினத்துக்கு உருவம் தருபவை இவையே.

தோல் தசை, குருதி, நரம்பு நாடிகள், நிணம், எலும்பு, உள்ளெலும்பு, மூளை ஆகியவை உறுப்புக்களல்ல. உடற்கூறுகள். ஐம்பொறிகளுள் ஒன்றாய்—முதன் முதல் எழுந்த பொறியான மெய்—இவற்றால் ஆக்கப்பட்டதே. மற்றப் பொறிகளுக்கு இடமாவதும், கால் முதலிய புறப்புற உறுப்புக்களால் ஆக்கப்படுவதும், உடலின் முழுப்பெரும் பகுதியாவது இதுவே.

புறப்புற உறுப்புப்போலன்றி, உடற்கூறாக, உடலின் மொத்த உறுப்பாக இயங்கும் இந்த மெய் உண்மையில் உடல் மொத்தத்தின் நிறை உறுப்பேயாகும். இதில் தோல், தசை, குருதி, நிணம் ஆகியவை புறக்கூறு அல்லது புற உறுப்பாக இயங்குகின்றன. உணவு, செரிமான, கழிவுறுப்புக்கள் அக உறுப்புக்கள். உயிர்ப்பு

உறுப்புக்கள், புறஉறுப்பின் உயிர்க்கூருகிய குருதியோட்டத்தை இயக்குபவை. அவை அகஉறுப்பிலும் அகநிலைவாய்ந்த உள்ளுறுப்புக்கள். இவையனைத்தையும் தாங்கும் உள்ளுடல் போல்வது எலும்புக்கூடு. அது உடலுக்கு வலுவும் வடிவும் தருகிறது.

உள்ளுறுப்புக்களையே இயக்கும் உயிர்ப்பகுதி நாடி நரம்புகள். இவை உள்ளுடலின் உள்ளிருக்கும் உயிர்ப் பகுதியாகிய உள்ளெலும்பு, மூளை ஆகியவற்றால் இயக்கப்பட்டு, உள்ளுறுப்புக்களை இயக்கிப் புற உறுப்புக்களையும் புறப்புற உறுப்புக்களையும் ஆட்சி செய்கின்றன.

குருதியோட்டம், உயிர்ப்பு உடலின் புறஉயிரியக்கம். அவை உடலென்னும் சிற்றுலகுக்குரிய போக்குவரவுத் துறையாகவும், தேவை மிகைச் சரக்குகளின் புடைபெயர்ப்பரங்கமாகவும் செயலாற்றுகின்றன. நாடி நரம்புகள் அதன் அகஉயிரியக்கம்—உடலின் செய்தியனுப்பு அரங்கமாகவும் ஆணையாட்சி அரங்கமாகவும் இயங்குகின்றன, அவை. மூளை உள்ளெலும்புகள் கிட்டத்தட்ட உயிர்மையங்களாய் இயங்குவன.

உயிர்மையத்திலிருந்து நேரே அகஉறுப்பு, புற உறுப்புக் கடந்து இயற்கையுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் உயிருடலின் வெளிநாட்டரங்கமே ஐம் பொறிகள்.

புறப்புறம், புறம், அகம், உள்ளகம், உயிர்ப்புறம், உயிரகம், உயிர்மையம் என்ற இந்த உடலுயிர்க் கூறுகளைப் பிரித்துணராமலே உடலியல் நூலார் நுணுக்க ஆராய்ச்சிகள் செய்வர். அவர்கள் உறுப்பாராய்ச்சி, கூறு நுண்கூருராய்ச்சிகள் நடத்துவர். ஆனால் முதல்—சினைத் தொடர்பு, உயிர் உடல் தொடர்புகளின் ஆராய்வில் அவர்கள் இன்னும் முனையவில்லை.

உயிருடலின் இந்தக் கூறுபாட்டமைதியும் உறுப்பமைதியும் எல்லா உயிரினங்களிலும் ஒரேபடியாக இல்லை. அதுமட்டுமன்று. இவ்வமைதிகள் உயிரின வளர்ச்சிப்படி உயருந்தோறும் வெங்காயத்தின் அகப்

புறத்தொடர்பு போலப் படிப்படியாகப் புறமிருந்து உள் நோக்கி, தொடக்கத்திலிருந்து முதிர்ச்சி நோக்கி விரிவுற்று மலர்ச்சியுறுவது காணலாம்.

ஐம்பொறிப் புலன்கள் உயிரினங்களில் ஓரறிவு முதல் ஐந்தறிவு, ஆறறிவுவரை வளரும் வளர்ச்சியைத் தொல்காப்பியர் குறிக்கண்டார். ஓரறிவாகிய முதல் பொறிப்புலன் முழுவடிவான மெய்யே என்றும் கண்டோம். புறப்புற உறுப்புக்களும் உள்ளுறுப்புக்களும் எலும்புக்கூடும் மூளையும் ஆகிய உறுப்பமைதி முழுதும் ஓரறிவு நிலைக்குப் புறம்பான உள் வளர்ச்சிகளே. தனி உயிரின் வளர்ச்சி பொதுவாக உள்நின்று புறம்நோக்கிய வளர்ச்சி. ஆனல் காலத்தில்வளரும் இந்தப் படி வளர்ச்சி புறநின்று அகநோக்கிய வளர்ச்சி என்பதை நாம் இங்கே குறித்துக் காணல் வேண்டும். உயிர் நூலாரும் உயிரியல் நூலாரும் உயிர் வளர்ச்சி நூலாரும் கூட இப்பண்பில் கருத்துச் செலுத்தவில்லை.

ஐம்பொறிப்புலன்கள்—புறஉறுப்புக்கள்--அகஉறுப்புக்கள்—உள்ளுறுப்புக்கள்—உயிர் உறுப்புக்கள் இவை உறுப்பமைதி சார்ந்த உயிர்வளர்ச்சிப் படிகள். ஐம்பொறிகளின் வளர்ச்சி இவ்வளர்ச்சிகளில் முதல் வளர்ச்சி மட்டுமல்ல—கடைசிவரை வளர்ந்துவரும் தனி வளர்ச்சியும், முழுநிறை வளர்ச்சியும் ஆகும். ஐம்பொறிப் புலன்களின் ஆக்கமே உள்ளம், உணர்ச்சி, அறிவு ஆகிய எல்லாவற்றுக்கும் அடிப்படை. தனி உயிருக்கும் இயற்கைக்கும்; தனிஉயிருக்கும் இனத்துக்கும் தொடர்பு வகுக்கும் உயிரின் செயற்கூறு இதுவே; மீந்த உறுப்புக்கள் உயிர் வாழ்வுக்கும் இயற்கை வாழ்வுக்கும் தொடர்பு வகுத்து உயிர் இயங்கச் செய்பவை மட்டுமே. இவ்விரண்டு தொகுதிகளின் வேறுபாட்டையே சமயவாணர் உயிர்—உடல்வேறுபாடு என்று வகுத்தனர்.

மனிதன் இன்பவாழ்வுக்கு உயிர்வாழ்வு அடிப்படை. இனவாழ்வு அதன் கட்டமைப்பு. அவ்வடிப்படையைப் பேணவிட்டால், கட்டமைப்புப் பேண முடியாது. தன்னலம் இந்த அளவிலேயே பொது

நலத்தின் இன்றியமையா முதற்படி ஆகின்றது. பண் பார்ந்த இத்தன்னலத்தை உடல்நலம், உளநலம் என்று இரண்டாக வகுக்கலாம்.

உடல்நலம் உடல் வலுவையும், உடல்வலு உணவின் ஊட்டத்தையும் பொறுத்ததென இக்கால இயல்நூலார் கருதுகின்றனர். பழங்காலச் சமயவாணர் அனைவரும் திருவள்ளுவரும் இவ்வாறு கருதவில்லை. அளவான உணவு—நிறையளவான உணவல்ல, உடல் வளர்ச்சியைப் பெருக்கும் உணவல்ல—உடல் வளர்ச்சி யைக் கட்டுப்படுத்தும் உணவு—தேவைக்கு மட்டுமே உரிய உணவின் இன்றியமையாமையை அவர்கள் வற்புறுத்தினர். குறைந்த அளவில், ஆனால் இன்றிய மையா அளவுக்குக் குறையாத இடத்தில், உணவு குறையுந் தோறும் நலம் மிகுதி. உடல் வலுக்குறையுந் தோறும் ஆன்மவலு மிகுதி என்றுகூடச் சமயவாணர் வலியுறுத்தினர்: இந்நாளில் இயல்நூல் இத் திசையில் கருத்துச் செலுத்தவுமில்லை. இதுவகையில் அவர்கள் வள்ளுவர் பொருளையோ, சமயவாணர் கருத்தையோ கூடத் துருவிக் கண்டிலர்.

உடல் வலிமை வேறு, உடல் நலம் வேறு, உடலின் இனநலம் அல்லது இன்னலம் வேறு. உடல் வலிமை யுடையார் உணவின் ஊட்டத்தாலேயே வலிமை பெறு கின்றனர் என்பதில் ஐயமில்லை. இவ்வலிமை நோய் நலிவுகளைத் தடுக்க உதவக்கூடும் என்பதும் உண்மையே. ஆனால் வலிமையுடையவர்கள் திடுமென நோய்க்காளாதலும் இடருக்கு உள்ளாதாலும் காணக் கூடாத செய்தியன்று. உடல்வலிமையற்ற பலர் நோயற்ற வாழ்வும், நலமும், நீடித்த வாழ்நாளும் இனப் பெருக்கமும் உடையவராயிருத்தலும் காணக்கிடையாத காட்சிகளல்ல. இவற்றின் விளக்கம் இயல்நூல் கருதாத ஒன்று.

உடல் வலு பெரிதும் புறப்புற உடலின் தசை வலிமை சார்ந்தது. ஆனால் உடல் நலம் அதுமட்டும் சார்ந்ததன்று. புறஉறுப்புக்களின் வளர்ச்சி சரிசம வளர்ச்சியாய் இருத்தல் வேண்டும். இதுவே உடல்நலம்

பெறும் நிலை. பழங்காலக் கலைத்தொழில்கள் இதைப் பேணின. இயந்திரத் தொழில் தொழிலாளர்க்கு இந் நலம் அளிப்பதில்லை என்பதைக் காந்தியடிகளும் மேலை அருளாளரும் சுட்டிக் காட்டியுள்ளனர். தவிர, புற உடலின் தசை ஆற்றலைத் தாங்குவது உள்ளுறுப்புக்கள், உயிர் உறுப்புக்கள், நாடிநரம்புகள் ஆகியவற்றின் ஆற்றலே. உடல்வலு பெரியதாயினும் சிறியதாயினும், இவ்வுள்ளுறுப்புக்களின் வலு அதைவிட உரமிக்க தானால், உடலின் சமநிலை அடிப்படைச் சமநிலையா யமையும். அதுவே நீடித்த வாழ்வுக்கு வழிவகுப்பது. இதுபோல, புறஉறுப்பு, உள்ளுறுப்புக்கள் ஆகிய இரண்டையும் தாங்கும் வலிமை அக உடலுக்கு இருந்தா லன்றி நீடித்தவாழ்வு, இனநலம் ஆகிய இன்னலங்கள் ஏற்பட மாட்டா. கீழ் உயிரினங்களில் இனப்பெருக்கம் மிகுதியாயிருப்பதும், மேல் உயிரினங்களில் அது குறை வுற்று உயிர்ப் பண்பு மேம்படுவதும் இதனாலேயே. இம் மூன்றன் வேறுபாட்டினையும் ஓர் உவமையால் விளக் கலாம்.

புற உறுப்பின் வலிமையினால் உரம் பெற்ற உடலானது மேல்மாடி உறுதியாகக் கட்டப்பட்ட கட்டடம் போல்வதாகும். அதன்வலுவே கட்டடத்தின் சமநிலை கெடுத்து அதற்கு நிலையாமையையும் விரை அழிவையும் தருவதாகும். புற உறுப்பின் சமநிலையாலும் புற அகச்சம நிலையாலும் நிலையான அமைதியுடைய உடலானது சுவரும் தளமும் உறுதியாயமைந்த கட்டத் தைப் போன்றது. ஆனால் உள்ளுடல் மற்ற இருபகுதி களையும்விட உறுதி வாய்ந்ததாய், அதன் மூலம் இன நலம் இன்னலம் உடையதாயமைந்தால், அது மேலும் எத்தனை மாடி எழுப்பினாலும் தாங்கும்படி ஆழ்ந்தகன்ற அடித்தளம் உடைய கட்டடம் போன்றதாகும்.

மூவகை உடற் கூறுகளையும் பேணும் உணவு களையும் பழக்க வழக்கப் பண்புகளையும் பண்டைத் தமிழர் முக்குணக் கூறுகளாக—ஆற்றல் (தமம்), ஆர்வம் (இராசதம்), உணர்வு (சாத்துவிகம்) எனவகுத் தனர். இக்கூறுகளின் முழு மெய்மை காணாமலே இம்

முக்கூறுகளையும் பகவத்கீதை வகுத்துக் கூறுவது காணலாம். வள்ளுவர் உச்ச உயர் கூருன உணர்வையே விதந் தோதிஞராதலால், உணவு, மருந்து ஆகிய செய்திகளில் இம்முறையையே ஓதிஞர்.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு, அருந்தியது
அற்றது போற்றி உணின்.
அற்ருல் அளவறிந் துண்க, அஃதுஉடம்பு
பெற்ருன் நெடிதுஉய்க்கும் ஆறு.'

உணவு அற்று அதாவது முற்றிலும் செரிமான முற்றுப் பசிக்கேற்ற தேவையளவும் பண்புமுடைய குறையளவு உணவு உண்ணுதலாலேயே உடல்நலமும் நீடு வாழ்வும் எய்தப்பெறும் என்று வள்ளுவர் கூறு கிருர்.

உணவின் அளவு மட்டுமன்றி வகையும் உயிர் முக் கியத்துவம் உடையது. 'மாறல்ல துய்க்க, துவரப் பசித்து' என இதனைக் குறள் வகுக்கின்றது. குறை யளவு தேவை உணவு இது பேணுகிறது. வேண்டிய உணவு மட்டும் ஏற்கும் ஆற்றலை இது செரிமான உறுப் புக்களுக்குத் தருகிறது. 'இழிவறிந்து உண்பான்' என்று வள்ளுவர் இதனை வலியுறுத்துகிருர்.

உடல் நலத்தை அடிப்படையாகக் கொண்டதே உளநலம். ஆனல் அது உடல் வலிமையைமட்டும் பொறுத்ததன்று. சமநிலையால் வரும் நலத்தையும், அச் சமநிலையால் வரும் இன்னமைதியையும் பொறுத்த தாகும். உள நலத்தின் மூன்றுபடிகள் உணர்ச்சி நலம், அறிவு நலம், இன நலம் என்பன. அகப்புறச் சம நிலையால் உணர்ச்சி நலமும்; அக உடலாற்றலாலும் உள்ளமைதியாலும் அறிவு நலமும்; உள்ளுயிர், உள்ளுடல், அக உடல், புற உடல் ஆகியவற்றின் இன்னமைதியால் இன நலமும் பேணப்படுகின்றன. சிறப்பாக இன உணர்வுடையவன் இனத்தின் மதிப் பையோ அன்பையோ உதவியையோ தான் எதிர் பாராமல், தன் மதிப்பும் அன்பும் உதவியும் அதன்மீது

பொழிகிறன். இன்னல்களையும் அதற்காக ஏற்கிறன். இவற்றாலன்றி எவரும் உள நலம் அடைதல் அரிது. ஏனெனில் உள நலம் என்பது இறுமாந்த வெறுப்புத் தன்னிறைவன்று. அவ்விறுமாப்புத் தன்னைச் சுற்றிலும் வெறுப்பு உண்டுபண்ணி, வீழ்ச்சிக்கே வழிவகுக்கும். மதிப்பும் அன்பும் அது கோருவதன்று. இவை தற்காலிக ஆறுதலே தரும். இனங் கடந்த இன்னலத்தாலேயே, இனத்துக்கே உதவும் இன நலத்தாலேயே அதைப் பெறமுடியும்.

**'இனம்பேண உளம்மேணு,**
**உளம்பேண உடல்பேணு,**
**உடல்பேணச் சமநிலைபேணு'**

என்பதே வள்ளுவர் கண்ட முழுநிறை இன்பத்தின் நுட்பம். இதனை ஒட்டியே திருமூலரும்.

**'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சாரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**

**உடம்பை வளர்த்தேன் உளம் வளர்த்தேனே'**

என்று பாடினர்.

உடம்பை வளர்க்காதிருப்பது தவறு. ஆனல் உடம்பை வளர்ப்பது ஒரு முடிந்த முடிவன்று. மேலும் உடம்பின்றி உயிர் இயங்காது. அதேசமயம் உயிர்ப் பண்பு அல்லது உள்ளுடல் வளர்த்தாலன்றி உடல் மெய் வளர்ச்சி பெருது. திருமூலர் கூறிய 'உடம்பை வளர்க்கும் உபாயம்', 'மெய்ஞ்ஞானம்' இதுவே. சமயவாணர் கூறும் 'உடம்பினில் ஈசன்' இன நிலையடைந்தோர் காணும் நிறை இன்பக் குறிக்கோளே.

உடலுயிர் கடந்து வள்ளுவர் கண்ட உள்ளுயிர் இன்பம், இனநல இன்பமாம் நிறைஇன்பம் பேணி மனித வாழ்விலே ஒளியூட்டுவோமாக.

## 14. குடும்ப வாழ்வு

"உலகெலாம் ஒரே குடும்பம்!" இதற்கு மேல் உயர்ந்த உலகக் குறிக்கோள் கிடையாது.

'நாட்டுக்கு ஒரு தந்தை!'—இதைவிட அரசனுக்குச் சிறப்புக் கூற எவராலும் ஆகாது.

'அனைத்துலகுக்கும் தாயான தயாபரன்!'—இதைக் காட்டிலும் உயர்ந்த ஓர் உவம உருவகம் கடவுளுக்கு வேறு கூறமுடியாது.

'உடன் பிறந்தார் போன்ற நேசபாசமும், ஒற்றுமையும் உடையவர்கள்!'—இதனிலும் சிறந்த புகழுரை மனிதர் நட்புக்குக் கிடையாது.

சமுதாயம், சமயம், நாடு, உலகம்—இனத்தின் மிகப்பெரும் பரப்புக்கள் இவையே. குடும்பம் இனத்தின் சிற்றுருப்பு மட்டுமே. ஆயினும் இனத்தின் உச்ச அளவான பரப்புகளுக்கெல்லாம் குடும்பம், குடும்பத் தலைவரான தந்தை தாய், குடும்ப உறுப்பினரான உடன் பிறந்தார் உவம உருவில் சிறப்புரையாக, புகழுரை புனைந்துரைகளாக அமைவானேன்? இந்த உச்ச எல்லைகளுக்கெல்லாம் உவமை கூறத்தக்க அதன் உயர் தனிச் சிறப்புக்கள் யாவை?

இன வாழ்வின் அடிப்படைக்கூறு, குடும்பமே. ஏனெனில் இனத்தின் சிற்றுறுப்பு, மூல அடிப்படைக் கூறு தனி உயிரன்று, குடும்பமே. குடும்பத்தின் கூட்டே சமுதாயம். அதன் தொடர்ச்சி, தலைமுறை ஆகிய இரண்டும் கூடியதே இனம். குடும்பத்தில் கால் வைத்தவுடன் தான் உயிர் இனவாழ்வில் புகுகிறது.

குடும்பம் என்பது பால்வேறுபாட்டால் மட்டும் ஏற்பட்டதன்று. அதேசமயம் பால்வேறுபாடு தோன்று முன் அது ஏற்படமுடியாது. அது பால்வேறுபாட்டின்

அடிப்படையில் அமைந்ததேயாகும். பால்வேறுபாடற்ற தொடக்க உயிரினங்களில், இனம் பெயரளவில் தான் நிலவுகிறது. உண்மை இன வாழ்வு என்பது கிடையாது. அது உயிர்களின் ஒரு கும்பல். அதன் இனப் பெருக்கம் என்பது தொகைப் பெருக்கமும் அழியாத் தொடர்ச்சியும் மட்டுமே. ஒவ்வொரு தனி உயிருமே ஒரு தனிமுறையாக வளர்ச்சியின்றி ஏற்றத் தாழ்வின்றி நீடிக்கிறது. வாழ்வோ, வளர்ச்சியோ, இனப்பண்போ, அவற்றில் இடம்பெறவில்லை. இந் நிலையில் தொகைப் பெருக்கம் ஒன்று தவிர, இத் தொடக்க உயிரின்த்திற்கும் உயிரிலா இயற்கைப் பகுதிக்கும் வேறுபாடு கிடையாது. இப்பருவத்துக்குரிய உயிரின் இறவாமை பிறவாமை இறப்புப் பிறப்புக் கடந்த நிலையன்று. அது பிறப்பு இறப்பு அற்ற நிலை மட்டுமே—இயற்கையின் வளர்ச்சிப் பண்பற்ற அழியாமைப் பண்பு மட்டுமே.

பாலினம் தோன்றிய பின்னும் மனித இனத்தில் நாம் காணும் குடும்ப வாழ்வு உயிரினத்தில் உடனே தொடங்கவில்லை. பாலினம் இரண்டு என்ற உயிரின வாழ்வின் இன்றைய பொதுநிலையும் உடனடியாக ஏற்பட்டு விடவில்லை. சில உயிர்களில் ஒரே உயிரில் ஆண் பெண் இருபாற்கூறுகளும் நிலவின. சில உயிர்களில் ஒரே உயிர் முதலில் ஒரு பாலாகவும் பின் மற்றொரு பாலாகவும் மாறின. சிலவற்றில் ஆண், பெண் என்ற இருபால்களேயன்றி அலி என்ற மூன்றாவது பால் வகையும் நிலவிற்று. தேனீ இனத்தில் அலி இனமே இன்முதல் பாலினமாய் அமைந்துள்ளது.

இருபால் வேறுபாடு தெளிவாக உருவான பின் தொடக்கத்தில் பெண்பாலே இனமுதல் பாலாய் இயங்கிற்று. உயர் உயிரினங்களில் இனமுதன்மை மெல்ல இருபாலுக்கும் பொதுவான பண்பாக வளர்ந்தது. இன முதல்வராகிய அறிஞர் இனத்தின் பெண்மைக் கூறு ஆவர் என்று திரு. வி. கலியாணசுந்தரனார் கருதியது இவ் ஆழ்ந்த உயிரியல் பண்பு நோக்கியேயாகும்.

கீழ் உயிரினங்களில் பால்வேறுபாடு தோற்றி, அதனையடுத்துத் தெளிந்த ஆண், பெண் வேறுபாடு ஏற்பட்டபின்னர், சில உயிர்களில் அவ்வேறுபாட்டின் அடிப்படையிலே சமுதாயமும், வேறு சிலவற்றில் குடும்பமும் தோற்றின.

குடும்பமில்லாச் சமுதாயத்தில் இன்ன ஆணுக்கு இன்ன பெண் என்ற தனி வகைமுறைத் தொடர்போ, கூறுபாடோ இல்லை. அதுபோலவே ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்ற வரையறையும் கிடையாது. கூட்டு வாழ்வும் நிலையான தொடர்பும் இல்லை. நாகரிக மற்ற பல மனித இனங்களில்கூட இன்றளவும் இந்நிலை நீடிப்பது காணலாம். இத்தகைய மனித இனங்களிலும் உயிரினங்கள் பலவற்றிலும் தங்குதடையற்ற விலங்குக் கூடலும் பிரிதலும் நிலவுவதுண்டு. பொது மகளிர் அல்லது விலைமகளிர் போன்ற வாழ்வு அத்தகைய இனங்களில் இருபால்களிலும் நிலவுகின்றது. இன்னும் சிலவற்றில் பெண்டிர் பொதுவுடைமை, ஆடவர் பொதுவுடைமை நிலவுவது காணலாம்.

குடும்பமில்லாச் சமுதாயத்தைவிடச் சமுதாயமில்லாக்குடும்ப வாழ்வு உயர்வுடையதே. ஆயினும் அது மனித இனம் 'குடும்பம்' என்ற சொல்லால் அறியும் இனப்பண்புடைய குடும்பம் அன்று. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கூடு கட்டி வாழும் அன்றில் போன்ற பறவையின் வாழ்வு இத்தகையதே. கவிஞர் குடும்ப வாழ்வின் உயர்வுக்கு இதனை உவமையாகக் கூறுவதுண்டு. ஏனெனில் குடும்பம் இங்கே சமுதாயத் தொடர்பற்றதாதலால், குடும்ப உறவு மிகவும் வலிமையுடையதாகிறது. கவிஞர் மனிதக் குடும்பத்துக்கு அதனை உயர் குறிக்கோளுவமையாகக் கூறுவதன் காரணம் இதுவே. ஆயினும் உண்மையில் அது உச்ச நிலைக் குடும்பம் அன்று. ஏனெனில் குடும்பப் பண்பு சமுதாயப் பண்பாகப் பரவவில்லையானால், அது இனமாகவும் வளரமுடியாது.

பாலின அடிப்படையில் குடும்பமும் சமுதாயமும் ஒருங்கே அமைந்த யானை, குரங்கு, மனிதன், உயரினப் பறவை ஆகிய இனங்களின் வாழ்வில்தான் 'குடும்பம்' உண்மைக் குடும்பமாக, இன சமுதாய வாழ்வின் தொடக்கமாக அமைகிறது. உயர் விலங்கு பறவை களில் அது குடும்பம் கடந்து சமுதாய எல்லையளவில் நிலைபெறுகின்றது. மனித இனத்திலேயே அது குடும்பம் சமுதாயம் இரண்டும் கடந்து இன எல்லை நோக்கி வளர்கிறது.

சமுதாய அடிப்படையான குடும்பமே மொத்த உயிரினவாழ்வின் முதல் மலர்ச்சிப்படி. அது இன வாழ்வு நோக்கித் திரும்பிய நிலையே அதன் புது மலர்ச்சிப் படி. உயிரின வாழ்வில் மனித இனத்துக் குரிய தனி முக்கியத்துவமும் தனிச் சிறப்பும் இதுவே— அது உயிரினத்தின் ஒரு பேரூழி—விலங்குப் பேரூழி— கடந்து, அடுத்த புதுமலர்ச்சி ஊழி—மனித ஊழி அல்லது தெய்வ ஊழியின் தொடக்கம் ஆகின்றது!

குடும்பம் உயிரினத்தின், மனித இனத்தின் இன வாழ்வுத் தொடக்கம் ; உயிரின் புதிய இன மலர்ச்சியின் முதற்படி. அதன் முதல் முக்கியத்துவம் இது. ஆனால் அது முதற்படி மட்டுமன்று. ஆலமரத்தின் பரிய அள வையும் பல நூற்றாண்டுகளடங்கிய வளர்ச்சியையும் கரு நிலையில் தன்னகத்தே முழுதுறக்கொண்ட ஆல விதை போல, குடும்பம் இனவாழ்வின் முழுப்பரப்பையும் முழு வளர்ச்சிப் பண்பையும் தன்னகம் கருநிலையில்கொண்டு, இனத்தின் முழுநிறை விதையாக இலங்குகின்றது.

மனித இனத்தில் அறிஞர் இப்பண்பைக் குடும்பத் தில் இன்னும் கண்டறியவில்லை. ஆனால் இன உணர்வு உள்நின்று தூண்ட மனித இனக் கவிஞர், கலைஞர் இதனை இயல்பாக உணர்ந்துள்ளனர். உலகின் எல்லா மொழிகளிலும் இலக்கியத்தின் பெரும்பகுதி குடும்பம் பற்றியதாகவே அமைந்துள்ளதன் காரணம் இதுவே.

அகம் குடும்பம், புறம் சமுதாயம்—இவ்வகுப்பு முறை மனித இனத்திலே இனஉணர்வில் முந்திநின்ற

தமிழினத்துக்கு மட்டுமேயுரிய பாகுபாடு ஆகும். இதன் நிழலைக் கீழ்த்திசைச் சமய அறிவு நூல்களிலும் சமஸ்கிருதத்திலும் அறிவான் (ஞாதுரு), அறிபொருள் (ஞேயம்) என்ற பாகுபாட்டில் காணலாம். தற்கால மேலை ஆய்வியல்களில் இதனை அகநோக்கு[1], புறநோக்கு[2] என்ற வகுப்பு முறையில் காண்கிறோம். ஆயினும் அகப்பண்பின் நுண்ணாய்வில் இன்னும் உலகின் எவ்வினமும் பண்டைத் தமிழினத்துக்கு ஈடன்று. ஆனால் இன்றைய தமிழினமே அச்சிறப்பை முற்றும் உணரத் தலைப்படவில்லை.

விலங்கினம் கடந்து மனித இனம், மனித இனம் கடந்து தமிழினம், தமிழினம் கடந்து தெய்வப்பண்பு கண்ட திருவள்ளுவர்—இது வள்ளுவரை இனி உலகம் காணவேண்டும் படிமுறை. அவர் ஒருவரே இன வாழ்வின் வேராகக் குடும்பத்தையும், அதன் முகடாகக் கடவுளையும், இவற்றின் ஊடாக இனவாழ்வையும், அதன் கூறுகளான அறம் பொருள் இன்பங்களையும் கண்டவர் ஆவர். அவ்வழி நின்று நாம் அதனைக்காண முயலவேண்டும்.

மனித சமுதாயம் இன்னும் விலங்குப்படியிலிருந்து மிகுதி உயரவில்லை. விலங்குப்படியில் வலிமைவாய்ந்த உயிர் வலிமையற்ற உயிரைக்கொன்றும் வென்றும் அடக்கியும் குறுகிய தன்னல நோக்குடன் வாழ முற்படுகின்றது. இதுபோலவே சமுதாயத்திலும் அரசியல் துறையிலும் மனிதன் வாழ்கிறான். வலிமை ஆற்றல் திறமையாய், திறமை அறிவாய், அறிவு தகுதியாய் வளர்ச்சியுற்ற பின்னும், இந்நிலை மாறவில்லை. வலிமையுடையவர்கள்—ஆற்றல், திறமை, அறிவு, தகுதி உடையவர்கள்—அவையற்றவரை அழித்தும் வென்றும் அடக்கியும் தம் தனிநலத்துக்கே அவற்றைப் பயன்படுத்துகின்றனர். இதனால் போட்டி அழிவுப் போட்டியாக நடைபெறுகிறது. ஆயினும் அரசியலைவிடச் சமுதாயத்திலும், சமுதாயத்தை விடக் குடும்பத்திலும் மனிதன் இவ்விலங்குப் பண்பு கடந்து வள்ளுவப்

1. Subjectivity 2. Objectivity

பண்புக்கு முன்னேறியுள்ளான். அவ் வெல்லையில் கூடத் தன்னலமும் தன்னலப்போட்டியும் முற்றிலும் இல்லையென்று கூற முடியாதானாலும், அவ்வெல்லைக்கு வெளியேயுள்ள நிலைகளை நோக்க அவை மிக மிகக் குறைவே என்னலாம். ஆயினும், நாகரிக சமுதாயத்தில்—அதனுள்ளும் சிறப்பாகப் பண்பார்ந்த குடிகளில்—குடும்ப எல்லைக்குள் அன்புப் போட்டியும் அதுகடந்த கூட்டுழைப்பும் இனவாழ்வின் ஆர்வமும் இடம்பெற்று விட்டன.

குடும்பப் பண்பின் பயிர்ப்பில் மனித இனத்தில் உயர்முகடெய்தியவர்கள் பண்டைத் தமிழர். அத்தமிழர் பண்பின் உச்சஉயர் முகட்டெல்லையில் நின்றவர் திருவள்ளுவர். அவர் அக்குடும்பப் பண்பின் தெய்விக நிறைவுகண்டு, அதனை இயற்கையின் கூறுக உணர்ந்து, அதனடிப்படையில் சமுதாயம், அரசியல், இனம் ஆகிய முத்துறைகளும் அளாவிய ஒரு பாரிய தெய்விகக் கட்டடம் அமைத்துத் தந்துள்ளார். அக்கட்டடத்தின் அரைகுறைச் சிதைவுகளே இன்றைய நாகரிக உலகின் பல்சமய வேறுபாடுகளாகத் திகழ்கின்றன.

வலியார் குடும்பத்தில் தம் வலிமையைத் தமக்காகப் பயன்படுத்தவில்லை. குடும்ப நலன் நோக்கி எளியவருக்காக, எளியவரைப் பேணப் பயன்படுத்துகின்றனர். வலிமையுடையவரைப் போலவே ஆற்றலுடையவரும் திறமையுடையவரும் அறிவுடையவரும் தகுதியுடையவரும் ஆற்றல், திறமை, அறிவு, தகுதியற்றவரைப் பேணி அவர்களுக்கு அப்பண்புகளை மேவுவிக்கப் பாடுபடுகின்றனர். இப்பண்புகளைச் சமுதாயமும் பேணும் நாளில், இன்றைய அரைகுறைச் சமய வாழ்வுகள் உலகில் தேவைப்பட மாட்டா. ஏனெனில் அந்நிலையே உச்ச உயர்நிலைச் சமயம் ஆகும். இப்பண்பு இனத்தில் காணப்படும்போது, பூசனைக்குரிய கடவுளே உலகுக்குத் தேவைப்படமாட்டார். ஏனெனில் அதுவே மெய்யான கடவுட் பண்பு—அதன் பல்வகைப் பட்ட நிழல்களே இன்றைய உலகின் பல்வகைப்பட்ட கடவுட் கருத்துக்கள், பல்வகைப்பட்ட சமய இலக்குகள்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

இக்குறட்பா உணர்த்தும் பொருள் இதுவே.

இதன் ஒரு மென்சாயலை நாலடியாரின் ஒரு வெண்பாவிலும் காண்கிறோம்.

'பிறர்மறையின் கண் செவிடாய்த் திறன் அறிந்து
ஏதிலார் இற்கண் குருடனாய்த்—தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல், யாதும்
அறம்கூற வேண்டா அவற்கு!'

குடும்பத்தில் உறுப்புக்கு உறுப்பு உள்ள தொடர்பு போராட்டத் தொடர்பல்ல; போட்டித் தொடர்பல்ல. சூதாட்டத் தொடர்பு அல்ல: அன்புத் தொடர்பே. அத்துடன் ஒருவர் எல்லாருக்குமாக, எல்லாரும் ஒவ்வொருவருக்காக என்ற குறிக்கோள் இயல்பாகவே நிலவுவது பெரிதும் குடும்பத்திலேயே. கூட்டுறவுச் சங்கங்களின் உயர் இலக்கு—பொதுவுடைமை அல்லது சமதருமச் சமுதாயத்தின் உச்சநிலைக் குறிக்கோள் இதுவே. இதுவே சமுதாயத்தின் அரசியலினம் அல்லது நாடு, உலகம் அல்லது மனித இனம் ஆகியவற்றின் உயர் இலக்கும் ஆகும் என்பதை எவரும் ஒத்துக் கொள்வர்.

கவிஞர், அறிஞர், கலைஞர், கலையறிஞர் ஆகியோர் கனவு காணும் சமுதாயம், அரசியல், உலகம் ஆகிய வற்றின் முழு நிறைபண்பு குடும்பத்தில் இன்றுகூடப் பெரிதும் இயங்குகிறது. இயற்கையில் வான், மனித இனத்தில் குடும்ப பாசம் அல்லது தாய்ப்பாசம்—இந்த இரண்டன் பண்பும் ஒன்றே. இரண்டும் பயன் நோக்காத, ஆனால் பயனுடைய பண்புகள். பற்றற் றவை அதாவது தற்பற்றற்றவை—பற்றுக் கடந்த பற் றாகிய இன நல அவாவுடையவை அவை. ஆனால் அறிவிலா இயற்பண்பான வானிலும் அறிவு கடந்த அன்புப் பண்பான குடும்ப பாசம் ஒருபடி உயர்

வுடையது என்பதை நாம் எளிதில் காணலாம். இதே பண்பு சமுதாயத்திலும் நிலவவேண்டும் என்று கனவு கண்ட அருளாளர் பலர் உண்டு. ஆனால் அரசியலிலும், சமயவாழ்விலும், இனவாழ்விலும், இது நிலைபெற வேண்டுமென்று கனவு கண்டவர் மிக மிகச் சிலர்—நம் காலத்தில் காந்தியடிகளும், டால்ஸ்டாயும், முன்னுட்களில் புத்தர்பிரானும், சமண தீர்த்தங்கரர்களும் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரினும் முதன்மை மிக்கவர்—அதையே ஒரு பாரிய வாழ்க்கைத் திட்டமாக்கித் தந்தவர் திருவள்ளுவர் ஒருவரே.

குடும்பத்தில் இன உணர்வுடையவர்—சமுதாயத்தில் இனத்தில் குடும்ப உணர்வுடையவர்கள், தேசிய அறிஞர்கள் — காணவேண்டிய இன்னொரு பண்பு வளர்ச்சியின் உயிர்ப்பெருக்கம் ஆகும். இயற்கையில் ஆற்றலின் பெருக்கம் என்பது பெரிதும் கூட்டாற்றலே. பல அணுக்கள் திரண்டவழி அவற்றின் தனித்தனி ஆற்றல்கள் மொத்த ஆற்றலாகச் செயலாற்றுகின்றன.

குடும்ப ஆற்றல் என்பது கூறுகளின் மொத்தமான கூட்டாற்றல் மட்டுமல்ல, உறுப்புக்களின் இணைவான கூடல் போன்ற கூட்டு நிறைவாற்றல் மட்டும்கூட அல்ல. ஏனெனில் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய தனி ஆற்றலும் மற்றத் தனி ஆற்றல்களையும், அத் தனி ஆற்றல்கள் அவ்வுறுப்பினர் ஆற்றலையும் இயக்கி ஊக்குகின்றன. அத்துடன் தனி ஆற்றல் ஒவ்வொன்றும் மொத்தத்தையும், மொத்தம் தனித்தனி ஒவ்வொரு தனி ஆற்றலையும் தூண்டி இயக்குகின்றது. இத்தகைய கூட்டுப் பெருக்கத்தையும், கூட்டு வளர்ச்சியையும் நாம் உயிரின வாழ்வில் குடும்பத்திலேயே—பண்பட்ட மனித இனம் வளர்த்த சமுதாயக் கூறுன குடும்பத்திலேயே—காண்கிறோம். இத்தகைய குடும்பப் படி புதுமலர்ச்சியின் முதற்படியாதலால் எல்லை குறுகினும் முழுப்படியாய் இயங்கி, சமுதாயத்திலும் இனத்திலும் சென்று பெருகவல்ல செறிவான முழுநிறைபடியாகவும் இயங்குகின்றது.

குடும்பவாழ்வு இங்ஙனம் இனவாழ்வின் கருமூலம் மட்டுமல்ல, முதற்படி மட்டுமல்ல; அதன் முழுநிறை பண்பும் ஒருங்கே செறிந்த விதை அதுவே. இதை அறிந்த பண்பட்ட இனம் தமிழினம். இதை வகுத்துணர்த்தி விளக்கிய முதல்வர் திருவள்ளுவர். அவர் தம் திருக்குறள் ஏட்டை இல்லறத்தில் தொடங்கி இன்பப்பாலின் கற்பியலில் கொண்டு முடிக்கும் அருந்திறத்தின் அடிப்படைப் பண்பு இதுவே. உணர்ச்சியடிப் படையான ஆணின் அவாக்கூற்றுகத் தொடங்கிய இன்த்துப்பால் இருபாலாருக்குமுரிய கூடலவா விளுட்டாகப் பரவிப் பெண்ணின் ஊடற் கூற்றுகவே முடிவில் நின்றுவிடுவது கூர்ந்து நோக்கத்தக்கது. தலைமுறைக்குத் தலைமுறை நீடிக்கும் தொடர்பு பெண் மூலமாகவே நிகழ்தல்போல, உயிரினத்தின் ஒரு முழு மலர்ச்சி ஊழிக்கும் மற்ெருரு முழு மலர்ச்சி ஊழிக்கும் இடைப்பட்ட தொடர்பும் அதே பெண்மையாகவே நிலவுகிறது. அச்சந்திப்பின் சின்னமே கூடலிடையேயும் நிகழும் பெண்மையின் ஊடல். திருவள்ளுவர் இது கண்டுணர்ந்து இறவா, பிறவா இன்ப அலைமுகட்டில் ஏடு தொடங்கி, மற்ேருர் அலை முகட்டில்—கூடலின் பத்தை முடிவில் இன்பமாக்கும் ஊடலில் நம்மைக் கொண்டுவிட்டு அடுத்த ஊழியை நோக்கிச் செல்கிருர்.

பிறப்பிறப்புக் கடந்து, ஊழூழி கடந்து நம்மை இட்டுச் செல்லும் ஆற்றல் வாய்ந்த உலவா இன்பக் கொடி உயர்த்தி, குடும்பப்பண்பு என்னும் கோபுரவாயிற் படியிற் புகுந்து சென்று நாம் எல்லையற்ற இனவாழ்வு என்னும் எழில் மாடம் ஏறுவோமாக! அதில் மேன் மேலும் இன்பத்துள் இன்பம் நாடுவோமாக! ஒவ்வொரு நொடியிலும் பெற்ற இன்பம் அரும்பாக, போதாக, பெற விருக்கும் இன்பங்கள் அதனின்று மேன்மேலும் எல்லையற்று விரிந்துகொண்டே செல்லும் நாள்மலர்களாக, மலர்க்கொத்துக்களாக நம்மீது பொழிய, நாம் உயர் இன்பத்தின் ஓய்விலா ஒழுக்குடைய மெல்லருவியில் குளித்துத் திளைப்போமாக.

## 15. வாழ்வின்பம்

யானை கண்ட குருடர் கதை யாவரும் அறிந்ததே. அதை முழுமையாகக் காண எவருக்கும் கண் பார்வை இல்லை. ஒருவன் உடலைத் தடவி அது கருங்கற் பாறை போன்றது என்றான். ஒருவன் கால் தடவி அது உரல் போன்றது என்றான். தும்பிக்கை தடவி ஒருவன் மலைப் பாம்பு போன்றதென்றும், காது தடவி மற்றொருவன் முறம் போன்றதென்றும் கூறினான்.

குருடராவது உறுப்பு உறுப்பாகப் பொருளை வேறு வேறு பிரித்து வேறு வேறாகக் கண்டனர். கூறு கூறாக, பண்பு பண்பாகப் பிரித்தறிபவரும் உண்டு.

ஒரு நகரைப் பலர் துருவிக் காண்பதாக வைத்துக் கொள்வோம்.

ஒருவன் பாரிய கட்டடங்களை ஏறி இறங்கிக் காண்கிறான். ஒருவன் தெரு ஒழுங்கினையும் கட்டட ஒழுங்கினையும் கண்டு அதன் அமைப்பில் கருத்துச் செலுத்துகிறான். ஒருவன் அதில் வாழும் மக்களை, ஒருவன் அவர்கள் பண்புகளை, மற்றொருவன் அதன் மக்கள் வாழ்வுக்கேற்ற நீர், உணவு முதலிய வாய்ப்புக்கான திட்டங்களை நோக்குகிறான். ஒருவன் அதன் வரலாறு, ஆட்சிமுறை உசாவியுணர்கிறான். கல்வி நிலையங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் பற்றி ஆராய்கிறான் மற்றொருவன்.

ஒரே நகர்பற்றிய அவர்கள் அறிவு விளக்கம ஒரே படியாக இருப்பதில்லை. ஆயினும் அவை முழுமையாக அந்நகர்பற்றிய விளக்கங்களே. அதேசமயம் விளக்கங்கள் முழுதும் நகரின் தன்மையை மட்டும் பொறுத்தவையல்ல. காணும் ஆளின் தன்மையையும் பேரளவு பொறுத்தவை.

வாழ்க்கையைப்பற்றிய மனிதர் அனுபவமும் அறிவும் இதுபோன்றதே. அவை அவர்கள் தனித்தனிப் பண்பையும் குறிக்கோளையும் பொறுத்தவை. குறிக்கோள்கள் எத்தனையோ அத்தனை பண்புகளும், அத்தனை உலகங்களும் மனித உலக வாழ்வின் அக்கூறுகளாக இயங்குகின்றன. வாழ்க்கையின்எல்லா வகைப் புதிர்களுக்கும் மூல காரணம் இதுவே. உலகம் ஒன்று. ஆனால் ஒருவர் காணும் உலகை மற்றொருவர் காண்பதில்லை. இருவரும் ஒரே உலகின் இருவேறுபட்ட பண்புக்கூறுகளையே காண்கின்றனர்!

'உலகம் ஒரு போர்க்களம். வாழ்க்கை ஒரு போராட்டம். அதில் ஒவ்வொரு தனிமனிதனும் பிற தனிமனிதனுடன் தனித்தனியாகவும் கூட்டாகவும் போராடுகிறான். இவ்விசித்திரப் போர்க்களத்தின் விசித்திரப் போராட்டத்தில், ஒவ்வொருவன் பார்வையிலும் அவன் ஒரு கட்சி, மற்ற எல்லாரும் எதிர்க்கட்சி. பலரை உடன் சேர்த்து ஓரினத்தவராகக் கூறுவதுகூட உண்மையில் எதிரிகளைப் பிரித்துப் பிளவுசெய்து வெற்றிகரமாக வென்று தன்னலம் பெருக்கும் பொருட்டே'.

தன்னலப் போட்டியைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் காணும் உலகம், வாழும் உலகம் இதுவே.

'உலகம் ஒரு சூதாட்டக் களம்; வாழ்க்கை ஒரே சூதாட்டம். இதில் ஒவ்வொருவரும் பிறரை வஞ்சித்துத் தாம் மேம்படப் பல வகைமுறைகள், வழிவகைகள் தேடுகின்றனர். அறிவுடையவன் இதில் பிறரை ஏய்த்து வாழ்வான்; அறிவற்றவன் ஏய்ப்புண்டு மாள்வான்'.

தன்னல நயவஞ்சகர், திருடர், கொள்ளைக்காரர், ஆகியவர்கள் அகநோக்கு உலகம் இதுவே. பல கீழ்த்தர அரசியலறிஞர்கள், சமய அறிஞர்கள் நோக்கு இதன் உயர் தளச் சமுதாய நிழலேயாகும்'.

'உலகம் ஒரு வேட்டைக்காடு. அதில் ஆற்றலுடையோர் தங்குதடையின்றி ஆதிக்கம் செலுத்தி அல்லது இன்பம் நாடிப் பெருமைபுறுவர். அதை நாடாத சிற்றுயிர்கள், நாடியும் ஆற்றலில் குன்றிய ஏலாதவர் அவ்வாதிக்க வேட்டை அல்லது இன்ப வேட்டைக்குரிய வேட்டை இரையும் வேட்டைக் களமும் ஆவர்.'

இவ்வாறு கூறுபவரை, எண்ணுவதாகத் தெரிவிப்பவரைக் காணமுடியாது. ஆனால் இவ்வாறு எண்ணுபவர், செயல் செய்பவர், செயல்செய்து வெற்றியோ, தோல்வியோ காண்பவர் அரியரல்லர். உலகின் கொடுங்கோலர், சமுதாயப் பகைவர், குடும்பப் பண்பற்றவர்கள் இத்தகையவர்களே. நாடகங்களில் அழிமதியாளர்கள் இத்தகையோரின் மாதிரிப் படிவங்களே.

'உலகம் ஒரு குருட்டுப் பகடையாட்டம், ஒரு மாயம், ஒரு துன்பக்களம்'—இவை வேறுபலர் குறிக்கோள், உட்கோள்கள்.

இத்தனை தனிக் குறிக்கோள்களுக்கிடையே, ஒரு குறிக்கோள்தான் இன்று மனித நாகரிகத்தின் மொத்தக் குறிக்கோளாய், குடும்ப சமுதாய வழிபட்ட இனக் குறிக்கோளாய், இன்றைய உலக நாகரிகத்தின் அடிப்படைக் குறிக்கோளாய் வளர்ந்து வருகிறது. அதுவே திருவள்ளுவர் முதன்முதல் வகுத்தமைத்த குறிக்கோள். முழு அளவில் அது உலகில் பரவவில்லையாயினும் அதன் சாயல் பரவாத இடம் இல்லை. அதை நோக்கியே உலகம் படிப்படியாக, சற்று முன் பின்னாக, எங்கும் முன்னேறி வருகிறது.

உலகம் இன்பக்களம் மட்டுமன்று, அன்புக்களம். அதன் போட்டிகள், போராட்டங்கள் யாவும் ஒரே குறிக்கோளையுடைய அன்புப் போட்டிகள்; அன்புப் போராட்டங்கள். அன்பு வாய்ந்த ஒத்துழைப்பே வாழ்வு. அவ்வொத்துழைப்பின் சுழல் எதிர் சுழல்களே, திட்டமிட்ட ஒத்துழைப்பின் கூறுகளே போட்டி போராட்டங்கள்! வாழ்வில் எதிர்ப்புக்கள் உண்டு, தற்

காவிகப் புறத்தோற்றமான பகைப்பண்புகள் உண்டு. ஆனால் பகைவர் யாரும் கிடையாது. இதுவே திருவள்ளுவர் கண்ட முழு வாழ்க்கைக் குறிக்கோள்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

இக்குறிக்கோள் வழி நிற்பவன் தெய்வப் பண்பினன். இக்குறிக்கோள் உலகெங்கும் பரவினால், அதுவே இன்ப உலகு, பொன் உலகு. அதுமுற்றிலும் இன்றிருப்பதன்று. ஆனால் பேரளவில் வருங்காலச் சின்னமாக, கனவுருவாக, குறிக்கோளுருவாக, என்றும் உள்ளீடாக வளர்ந்துவரும் ஒன்றே. மேல் உலகு என்று தமிழ் மரபில் அது குறிக்கப்படுவதன் காரணம் இதுவே. இங்கே மேல் என்பது இனிமேல் என்ற குறிப்புடையது. இடைக்காலச் சமய வாணரும், புராணமுடையாரும் அதை மேலே உள்ள உலகம் என்று கொண்டு அதற்கு மாறாகக் கீழே யுள்ள உலகும், நடுவே உள்ள உலகும் கருத்தில் உருவாக்கிக் கொண்டனர்.

வள்ளுவர் குறிக்கொண்ட இனத்தின் இன்பம் நிறைவுடையது—அது தனி மனிதன் இன்பமட்டுமன்று, இன இன்பம் மட்டுமன்று—இரண்டும் ஒன்றான நிறை இன்பம். ஒழுக்கம், சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, குடும்பம் எல்லாம் அதனை நோக்கிய பண்புகளே. வாழ்வு என்ற பண்பார்ந்த சொல்லின் முழுப் பொருள் இதுவே. வள்ளுவர் பெருமான் காட்டிய திசையில் இறைவழி நின்று, மன்னன் துணையுடன், பண்பாளர், அந்தணர் இயக்க இயங்கும் முப்பாலாழி இயக்கி இன்பத்துள் இன்பம், நீடின்பம், நிறை இன்பம் பெறுவோமாக! பெற்று உலகுக்கு அளிப்போமாக!

# அலமேலு நிலையம்

## வெளியீடுகள்

| | | ரூ. | காசு |
|---|---|---|---|
| 1. | வெற்றித் திருநகர் ... | 5 | 00 |
| 2. | வாழ்க ... | 3 | 00 |
| 3. | சரித்திரம் பேசுகிறது ... | 3 | 00 |
| 4. | தாயகத்தின் அழைப்பு (அச்சில்) | | |
| 5. | திருக்குறள் மணி விளக்க உரை (அச்சில்) | | |

கிடைக்குமிடம் :

அலமேலு நிலையம்

53, ஆற்காடு ரோடு : : சென்னை-24